# பாரதி

ஒரு மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர் : ரா. நாராயணஸ்வாமி.

| மாலை 1 | உத்தமபாளையம் 1929-ஞு நவம்பர்மீ | மணி 11 |
| --- | --- | --- |


## எனது பிரார்த்தனை.


ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர், "பாரதி."





கண்ட பொருள்களை யெல்லாம் விரும்பி நான் ஒரு பேராசைக்காரனாகவோ அல்லது ஒரு மோசக்காரனாகவோ அல்லது ஒரு திருடனாகவோ ஆகாதபடி எனக்குச் சிறிது பொருளையும்,

2. வயிற்றின் கொடுமையால் பல அயோக்கியத் தொழில்களைச் செய்யாதவாறு என் குடும்பத்திற்குப் போதுமான உணவைமட்டும் சம்பாதிக்கும் பொருட்டு ஏதோ ஒரு சிறிய வேலையையும்,

3. பற்பல பெண்களை இச்சித்து நான் ஒரு விபச்சாரனுகிக் கெட்டு அழிந்து போகாதவாறு எனக்கு ஒருகாதல் மனைவியையும்,

4. அவர் கிறிஸ்தவர் இவர் மகம்மதியர் என்று மதத்துவேஷம் அடைந்து நான் பிறந்த மதத்தில் மட்டும் மதங் கொள்ளாதபடி எல்லா மதங்களும் ஏக நாயகனுகிய ஒரே ஒரு கடவுளை அடையும் வழிகள் என்று எல்லா மதஸ்தர்களோடும் வேற்றுமை யின்றிப் பழகுமாறு சமரசத்தையும்,

5. இடைக்காலத்தில் எப்படியோ அநியாயமாய் உண்டாக்கப்பட்ட கேவலம் பிறப்பால் மட்டும் உயர்வு தாழ்வு கருதும் பாழும் தீய வழக்கத்தில் சிக்கி உழன்று ஜாதிக்கிறுக்குப் பிடித்து ஜாதியின் பெயரால் கொடுமை செய்யாதிருக்கும்படியான விளக்கத்தையும்,

6. இந்தியர் அனைவரும் எனது அருமைச் சகோதரர்கள் என்று எண்ணி அவர்களை அதிக அன்புடன் நேசிக்கும்படியாகச் சகோதர உணர்ச்சியையும்,

7. இப்பொழுது இந் நாட்டில் நிலவி இந்திய சமூகத்தையே அதம் செய்து கொண்டு வரும் மூடப் பழக்க வழக்கங்களையும், கூடா ஒழுக்கங்களையும், கடவுள் பெயரால் மதத்தின் பெயரால் ஜாதியின் பெயரால் இக் காலத்தில் செய்து வரும் கொடிய கேவலமான, அயல் நாட்டார்கூடப் பார்த்துச் சிரிக்கும்படியான அவ்வளவு ஆபாசமான கட்டுப்பாடுகளையும் நிர்மூலம் செய்து இந்திய சமூகத்திற்குத் தொண்டு செய்யுமாறு எனக்கு அஞ்சா நெஞ்சத்தையும்,

8. எனது தவத்தாய் நாட்டிற்குப் பல வழிகளில் அனவரதமும் அதிகமாகச் சேவை புரியும் பொருட்டு எனக்கு அபார சக்தியையும், பணியில் ஆழ்ந்த ஆசையையும், தியாக வீர உணர்ச்சியையும்,



ஈஸ்வர சந்திர வித்யா சாகரர்.

OFFICE ... 4 JAN 1930 MADRAS



# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தின் பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டாரி செட்டியார் அவர்கள், மானேஜர், T.C.P A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.


குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, $\frac{1}{2}$-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, $\frac{1}{4}$-க்கு | ,, | ,, | 3—0—0 |

$\frac{1}{4}$ பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களுக்கு இடமில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.




படங்களுடன் வெளிவந்துலாவும் தேசிய மாஸிகை.

## பொருள் அடக்கம்.

162212


| தொடர் நிர். | | பக்கம். |
|---|---|---|
| 1. | எனது பிரார்த்தனை—ஆசிரியர், "பாரதி" ... | 745 |
| 2. | சமூகக் கொடுமைகள்— ,, ,, ... | 748 |
| 3. | பர்மா தேசம்—திரு. **K. G.** கிருஷ்ணன் அவர்கள் [**B. Sc., (Hons.)** ... | 766 |
| 4. | தொழிலாளர்—திரு. கே. கோவிந்தராஜன் அவர்கள் | 783 |
| 5. | ஈஸ்வர சந்திர வித்யா சாகரர்—திரு. என். வேங்கட [ரமணன் அவர்கள் ... | 789 |
| 6. | தொழிற்கல்வி—திரு. **A.** நடேசபிள்ளை அவர்கள் ... | 801 |
| 7. | ஸ்ரீமாந். ஸாவர்க்கார் அவர்களின் கடிதம் ... | 805 |
| 8. | ஆபிரகாம் லிங்கன்—திரு. **T. L.** ரகுபதிசர்மா அவர்கள் [**M. A., L. T.** ... | 812 |
| 9. | ஆசிரியர் குறிப்புகள் ... ... ... | 824 |

1. அயல் நாடுகளில் வசிக்கும் சந்தா அன்பர்களுக்கு
2. உள் நாட்டுச் சந்தா நேயர்களுக்கு
3. இலங்கையில் இந்தியர்களுக்கு இழி நிலை
4. சாஸ்திரி கல்லூரி
5. பஞ்சாங்கங்கள்
6. நேபாள முதல் மந்திரி மறைவு
7. சாது சுந்தர் சிங் எங்கே?
8. மாதர் மகா நாடுகள்
9. பீஜி சட்டசபையில் இந்திய அங்கத்தினர்கள்
10. சனாதன தர்மிகள் மகாநாடு.

### படங்கள்.

1. ஈஸ்வர சந்திர வித்யா சாகரர்
2. இந்திய நெப்போலியன் ஸாவர்க்கார்
3. பர்மிய மாது
4. பர்மிய ஆடவன்.

9. எனது செந்தமிழ்த் தாய் மொழியின் அபிவிருத்தியின் பொருட்டு அயல் மொழியில் மோகத்தைக் குறைத்துத் தாய் மொழியில் மட்டற்ற பற்றையும்,

10. இந் நாட்டில் ஆண்களுக்கு அடிமையாய்க் கிடந்து தவிக்கும் மாதர்களின் விடுதலைக்காகப் போராடி அவர்களுடைய சமத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டுப் பெண்கள் மீது இரக்கத்தையும்,

11. உண்ணவா, உடுக்கவா, உறங்கவா பிறந்தோம்? பின் என் பிறந்தோம்? என்று வாழ்க்கையின் தத்துவங்களை ஆராயும் பொருட்டு நல்லறிவையும்,

12. என்னைச் சிருஷ்டித்துக் காக்கும் கடவுளிடம் மாறாத பக்தியையும்,

13. இவைகள் எல்லாவற்றிற்கும் முதன்மையாக எனக்கும் என் குடும்பத்திற்கும் என் தேசத்திற்கும் நான் செய்யவேண்டிய கடமைகளைச் சரியாய்ச் செய்யும் பொருட்டு அரோக திடகாத்திரத்தையும், ஊக்கத்தையும், உறுதியையும், சந்தோஷத்தையும், சாந்தியையும்

எனக்குத் தந்தருளி என்னைச் சரியான மனிதனுக்கும்படி எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

---

எங்கள் ஜாதி எங்கள் ஜாதி என்று சொல்லுவதை முற்றிலும் விட்டு விட்டு, எங்கள் தேசம் எங்கள் தேசம் என்று, என்று இந்தியர்கள் சொல்லுவார்களோ அன்றுதான் இந்தியா விடுதலை யடையும் நாள்.

ரா. நா.

*   *   *   *

இந்தியாவில் கணக்கற்ற வீரர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், ஞானிகள் உண்டாக வேண்டுமேயானால் நம் நாடெங்கும் தெய்வீகக் காதல் கலப்பு மணங்கள் கணக்கற்று நடைபெறல் வேண்டும்.

ரா. நா.

---

# சமூகக் கொடுமைகள்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர், "பாரதி."

## மிஸ். மேயோவின் நோக்கம்

நமது தேசத்தில் இப்பொழுது வேரூன்றியிருக்கும் ஜாதி வேறுபாடுகளையும் சமூகக் கொடுமைகளையும் பற்றி எழுத நினைத்தால், எமக்கு ஒன்றுமே தோன்றவில்லை. புராதன உயரிய இந்திய சமூக விஷயங்களில் இப்பொழுது கடல் போன்று பெருகிக் கிடக்கும் பல தீய பழக்க வழக்கங்களை எப்படி எவ்வாறு சுருக்கமாக நாம் உள்ளவாறு இங்கு எழுதுவதென்று தெரியாது திகைத்து நிற்கிறோம். இந்தியாவைப்பற்றி எதுவும் எழுத எண்ணினால், எமது மனம் பண்டை ஞான இந்தியாவிற்குச் செல்கின்றது. கன்னி மேயோ என்னும் அமெரிக்க மாது இந்தியாவின் மீது அனுதாபம் கொண்டு இந்தியர்களைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் இந்தியாவின் குறைகளையும் குற்றங்களையும் உருக்கத்துடன் எழுதி "இந்திய மாதா" என்ற புஸ்தகம் வெளியிட்டிருப்பின், நாம் மிஸ். மேயோவை, நன்றி பாராட்டி உச்சிமேற் கொண்டு போற்றுவோம். திருத்தம் செய்யுப்பொருட்டுப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் புத்தி புகட்டுகிறார்கள்; சில தருணங்களில் கண்டிக்கிறார்கள் அல்லது தண்டிக்கிறார்கள். சில நண்பர்கள் நண்பர்களைச் சினந்து சில புத்தி மதிகளும் ஆலோசனைகளும் கூறுகிறார்கள். இவர்கள் இப்படிச் செய்வதின் முடிவான நோக்கம் என்ன என்று கேட்டால்? நன்மைக்கே என்று, ஆழ்ந்து ஆலோசிக்காது திடீரென்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விடலாம்.

இதற்கு முற்றிலும் மாறாக மிஸ். மேயோ இந்தியர்மீது கெட்ட நோக்கத்துடனேயே அப் புஸ்தகத்தை எழுதியிருக்கிறாள். இவ்வாறெல்லாம் கேவலமாக இருக்கிறார்களாகையால், இந்தியர்கள் சுயாட்சிக்குத் தகுதியற்றவர்கள் என்று முழு மோசமாக முடிவுகட்டிக் கூறியிருக்கிறாள். மிஸ். மேயோ நோக்கத்தையும் முடிவையும் நஞ்சுபோன்று நாம் வெறுக்கிறோமாயினும், எதிர்க்கிறோமாயினும், மறுக்கிறோமாயினும், அவள் எழுதியிருப்பவைகள் அனைத்தும் பொய் என்று முற்றிலும் தள்ளிவிட முடியாது. நம்மைப்பற்றி உலகமே வெறுத்துத் தள்ளும்படியாக அவ்வளவு கேவலமாய் அயல் நாட்டு மாது ஒருத்தி எழுதிப் பல பாஷைகளிலும் தனது புஸ்தகத்தை மொழிபெயர்க்கும்படி செய்து உலக முற்றிலும் இந்தியாவிற்கு விரோதமாய்ப் பிரச்சாரம் செய்துகொண்டு வருகிறாள். நம்மில் அயல் நாட்டு விஷயங்களை அடிக்கடி அறிந்து கொண்டிருக்கும் சிலருக்கே யன்றி, மிஸ். மேயோ அயல் நாடுகளிற் செய்துவரும் விஷமப் பிரச்சாரம் எவ்வளவு தூரம் இந்தியாவைப் பாதித்திருக்கிறது என்பதை வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கும் நம்மில் பலர் நன்கு அறிந்துகொள்ள முடியாது. நமது நாட்டிலிருக்கும் சில பழக்க வழக்கங்களாலும் சமய சமூக வைதீகக் கொடுமைகளாலுமல்லவா இம்மாது இவ்வாறு நம்மைப்பற்றி எழுதுவதற்கு வழி கிடைத்தது. பண்டை நாகரீகத்திற்காக உலகே போற்றும் நமது தேசம், இப்பொழுது இவ்வாறு கேவலமாய் எழுதப்படுகிறதென்றும் பேசப்படுகிறதென்றும் அறிய மிக மிக வருந்துகிறோம்.

## ஒதுக்கப்பட்டவர்களுக்கு இன்னல்கள்

நமது நாட்டில் எத்தனையோவித எத்தனையோ சமூகக் கொடுமைகளிருப்பினும் தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றிச் சிறிது அறிவோமாக. நம் நாட்டில் நம் போன்றே பிறந்த நம் சகோதரர்களுக்கு நாம் செய்துவரும் அநீதங்களை எவ்வாறு இங்கு எழுதுவோம். ஒவ்வொருமனிதனையும் கடவுள் சுதந்திரத்துடனும் சமத்துவத்துடனும்படைத்திருக்கிறார். 33 கோடி தேவ

ர்கள் நம் நாட்டிலிருக்கிறார்களென்று சொல்லி, இந் நாட்டார் ஒவ்வொருவரையும் கடவுளாகக் கருதும் அவ்வளவு மேலான தேசம், இன்று நமது சகோதரர்களில் பலரை அதாவது சுமார் 6 கோடி ஒடுக்கப்பட்ட மக்களை பஞ்சமர்களென்று தாழ்த்துகிறதைக் கண்டு தேவி பாரதி தனது மக்களில் பலரது கொடுமைகளையும் 6 கோடி மக்களின் நெஞ்சைப் பிளக்கும் துன்பங்களையும் பரிதாபத்தையுங் கண்டு ஆற்ருணுத் துயர் அடைந்து இப்பொழுது விடுகிற கண்ணீரே கங்கை யெனவும் சிந்துவெனவும் பெரும் நதிகளாக ஓடிக் கொண்டிருக்கின்றன போலும்.

## மனித தர்ம சாஸ்திரம்

பஞ்சமா பாதகம் செய்பவர்களே பஞ்சமர்கள். ஜெனனத்தால் ஒருவருக்கும் உயர்வு தாழ்வு கிடையாது. மனு தர்ம சாஸ்திரம் பஞ்சமர்களைத் தீண்ட வேண்டாமென்று சொல்லுகின்றது. ஆனல் குஷ்டரோகம், முதலிய தொத்து நோய்கள் பற்றியவர்களையே தொடக்கூடாதென்று இக்காலத்து ஆரோக்கிய சாஸ்திரம் கூறுகின்றது. சுத்தமான மனிதனை மனிதன் தொடலாம் என்று இந்நாள் மனித தர்ம சாஸ்திரம் போதிக்கிறது. கேவலம் பிறப்பால் மனிதரில் உயர்வு தாழ்வு கற்பித்து அநியாயமாய் ஒரு வகுப்பார்களைத் தாழ்த்தும் மனு தர்ம சாஸ்திரத்தை இவ் விஷயத்தில் சிறிதும் மதியாது மனித தர்ம சாஸ்திரத்தைப் பெரிதும் மதிக்கிறோம்.

## காணும் கடவுளர்கள்

மனிதன் சேர்ந்து வாழும் பிராணி. கேவலம் ஜெனனத்தால் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் சிற்றறிவிற்கு இப்பொழுது நவீன சாஸ்திரங்களும் ஜீவிய சரித்திரங்களும் நல்ல பதில்களாக விளங்குகின்றன. மாடுகளை மதித்து வணங்குகிறவர்கள், பிராணி வர்க்கத்தில் உயர்ந்த வகுப்பாகிய மனிதர்களை-நமது சகோதரர்களை-கண்ணல் காணக் கடவுளின் அம்சமான காணும் கடவுளர்களாகிய மனித

வர்க்கத்தாரில் பலரை வெறுத்துத் தள்ளுவது எவ்வளவு அநீதம்! எவ்வளவு அறியாமை!! எவ்வளவு கேவலம்!!! நமது சமூகப் பிளவுகளால்தான் இந்தியா அன்னியர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்து தவித்துக் கொண்டிருக்கிறது. "மூடத்தனமான சமூக வழக்கங்களைப்போன்று இந்தியாவிற்கு அவ்வளவு அதிகமாய் எந்த ஸ்தாபனமும் தீங்கு செய்யவில்லை"யென்று மேன்மை வாய்ந்த பரோடா மகாராஜா கூறுகின்றார்.

ஒற்றுமை யின்மையையும் தேசாபிவிருத்திக்குத் தடைகளை யும் சமூகக் கேடுகளையும் இந்தியாவில் ஜாதி உண்டாக்கிக்கொண்டிருக்கிறதென்று பண்டித சிவநாத சாஸ்திரியார் கூறுகின்றார். ஜாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும் இந்தியாவில் இப்பொழுது நடக்கும் அநியாயங்கள், பற்பல தேசாபிமானிகளாலும் பலப்பல சமய சமூகச் சீர்திருத்தக்காரர்களாலும் அநேகம் பத்திரிகைகளாலும் சமயம் வரும்போதெல்லாம் கண்டிக்கப்படுகின்றன. இந்திய பூமி மிக்க புண்ணியம் நிறைந்ததென்று கிருஷ்ணபிரான் இந்தப்பூமியின் மண்ணையும் தின்றாரென்று இதிகாசம் கூறுவதற்கும், "நீ இந்தியன் என்பதற்குப் பெருமை பாராட்டிக்கொள்" (Be proud that you are an Indian)என்ற விவேகானந்த சுவாமிகளின் அருமைப் பொன்னுரைகளுக்கும் இப்பொழுது அருத்தமே யில்லாதவாறு இந்துக்களில் அநேகர் நடந்துகொண்டு வருகிறார்கள். வகுப்புப் பேதத்தால் சகோதர உணர்ச்சி இந்தியாவில் நாசமாகி விட்டதென்று தைரியமாய்ச் சொல்லுகிறோம்.

## ஒரு நியாயமான கேள்வி

நாம் கிராமங் கிராமமாய் அலைந்து தேசியப் பிரச்சாரத்தைத் தீவிரமாய்ச் செய்து கொண்டுவரும் காலத்தில் ஒரு கிராமத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பில் பிறந்ததால் ஜாதி இம்சைகளைத் தாங்க ஆற்றாது கிறிஸ்துவராயிருக்கும் ஒரு முக்கியஸ்தரிடம் சென்று அவரைக் கட்டாயமாகக் காங்கிரசில் சேரும்படி கேட்டுக் கொண்டபொழுது, எம்மைப்பற்றி முன்னமே கேள்விப்பட்டிருந்த

அக்கிறிஸ்தவச் சகோதரர் எம்மை மிக்க அன்புடன் உபசரித்துப்பேசி எம்மிடம் ஒரு கேள்வி மிகப் பணிவுடன் கேட்டார். அதற்கு நாம் திருப்தியாகப் பதில் சொன்னால்மட்டும், தான் காங்கிரஸில் அங்கத்தினராய்ச் சேருவதாக உறுதி கூறினார். இக் கேள்விக்கு இன்னும் விடை தெரியாது தயங்கிக் கொண்டிருக்கிறோம். எத்தனையோ தேச பக்தர்களை யெல்லாம் கேட்டு அலுத்துவிட்டோம். சரியான பதில் கிடைக்கவில்லை. திண்டுக்கல் ஜில்லா மகா நாட்டில் டாக்டர் ஸ்ரீமான் வரதராஜலு நாயுடு அவர்கள் அக்கிராசனம் வகித்துக் கொண்டிருக்கும்பொழுது, தீண்டாமை விஷயமாக நாம் பேசுகையில் சபையாரை ஷை கேள்வி கேட்டோம். சபையாரிடமிருந்து ஒன்றும் பதில் கிடைக்கவில்லை. தலைவர்களும் மௌனமாக விருந்தார்கள். அவ்வினா எமது காதுகளில் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

அக் கேள்வி இன்னதென்று வாசகர்கள் அறிய விரும்புவார்களாகையால், அதை இங்கே இப்பொழுதே கூறிவிடுகிறோம். "ஐயா, தாழ்த்தப்பட்ட ஜாதியார்களாகிய நாங்கள் இத் தேசத்திலே உங்களைப் போன்றே பிறந்தோம். உங்களுக்கு அதிகம் உழைத்துக்கொண்டிருக்கிறோம். உங்கள் அனைவரையும் "சாமி" என்று கூப்பிட்டு உங்களைத் தெய்வங்கள் போன்றே மரியாதை செய்கிறோம். உங்கள் பாஷையையே பேசுகிறோம். உங்கள் மதத்தையே அனுசரிக்கிறோம். உங்களுக்கு எத்தனையோ விதங்களில் அடங்கியே நடக்கிறோம். உங்களுக்கு எங்களால் எவ்விதங்களிலும் அணுவளவேனும் கஷ்டமோ, நஷ்டமோ, இடைஞ்சலோ கிடையாது. ஆனால் எங்களுக்குச் சற்றும் சமத்துவம் கொடுக்க மறுக்கிறீர்கள்; எங்கள் சுதந்திரத்தைப் பறித்துக் கொள்கிறீர்கள். எங்கள் முன்னேற்றத்தை எல்லா வழிகளிலும் தடுக்கிறீர்கள். உண்மையாகச் சொன்னால், நாய், பன்றி, கழுதை முதலிய மிருகங்களைக் காட்டிலும் எங்களைக் கேவலமாக நடத்துகிறீர்கள். ஆடு மாடுகள், நாய், பன்றி, கழுதை முதலிய பிராணிகள் செல்லும் வீதிகளில் எங்களை நடக்கத் தடுக்கிறீர்கள். எங்களுக்குக் கல்வி, சுகாதாரம், குடி தண்ணீர், இன்னும் மனிதர்களுக்கேற்ற ஏனைய வசதிகளைக் கொடுக்க வேண்டாமென்கிறீர்கள். மகா பெரிய குற்றங்கள் செய்யும் கேவலமான குற்றவாளிகளைப்போற் கருதியே எங்களுக்குப் பஞ்சமர்கள் என்னும் கேவலப் பட்டம் கொடுத்து, கொடிய

தொத்து ரோகங்கள் வந்தவர்களைப் போன்று எங்களைத் தீண்டத் தகாத வர்கள் என்று எங்களை அதோகதி ஆக்கிவிடுகிறீர்கள். உங்களைப்போன்று எங்களுக்கும் பகுத்தறிவுண்டு. எங்களுக்கும் உங்களைப்போன்று சுகதுக்கங்களும் உணர்ச்சிகளும் உண்டு. உயர் ஜாதி ஹிந்துக்கள், தாழ்த்தப்பட்டவர்களை மனிதர்கள் என்று நினைக்கவில்லை. உங்களால் எங்களுக்குக் கடுகளவும் ஒரு உதவியும் கிடையாது. எங்களைச் சும்மா விட்டு விட்டாலும் நாங்கள் தப்பி எப்படியோ பிழைத்துக்கொள்வோம். நாங்கள் உங்கள் போன்ற மனிதர்களல்லவா? இவைகளையெல்லாம் நாங்கள் எவ்வாறு சகித்துக்கொண்டிருப்போம். ஆனால் 8,000 மைல்களுக்கு அப்பாலிருந்து கடல் கடந்து நம் தேசத்திற்கு வந்தவர்கள்-வேறு பிறந்தவர்கள்-அயல் நாட்டினர்கள்-அயல் மொழியினர்கள்-அயல் மதத்தினர்கள் எங்களிடம் வந்து எங்களை அன்புடன் அழைத்து எங்களுக்கு அதிக ஆதரவு அளித்து, கல்வி கொடுத்து, புத்தி புகட்டி எங்களுக்கு ஏற்ற ஏதேனும் வேலைகளைக் கொடுத்து, எங்களைக் காப்பாற்றி உங்களைப்போன்று எங்களை ஆக்கி உங்களுக்குச் சமானமாக எங்களை வைக்கிறார்கள். எங்களுக்காகப் பாடுபட்டு எங்களை உயர்த்தும் மனிதர்களை நாங்கள் நேசித்துப் பின்பற்றி இன்னும் அதிக மேன்மை அடைகிறதா? அல்லது எங்களை எல்லா வழிகளிலும் ஈவு இரக்க மற்று அநியாயமாய்த் தாழ்த்தும் உங்களைப் பின் தொடர்ந்து நாங்கள் தாழ்வடைகிறதா? நாங்கள் எவர்களை நேசித்துப் பின்பற்றினால் மேன்மை அடைவோம்? தாங்களே தயவு செய்து பதில் சொல்ல வேண்டுகிறேன்" என்று என்னைக் கேட்டார்.

இக் கேள்வி எவ்வளவு நியாயமாயும் உருக்கமாயுமிருக்கிறது? பேச்சுச் சாமர்த்தியத்தால் ஏதோ எப்படியோ தப்பும் தவறுமாய் அரைகுறையாக இதற்குப் பதிற் சொல்லலாம். மனச்சாட்சியை மதித்து ஒழுங்காய் உலகம் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் எவ்வாறு பதில் சொல்லமுடியும்? கிறிஸ்தவ பாதிரிகள் இல்லாவிட்டால் ஒடுக்கப்பட்டவர்களின் கதி என்னமாதிரியாயிருக்கும்? தீண்டாத வகுப்பார்களுக்குக் கிறிஸ்துவ மதம் செய்திருக்கும் நன்மைகளைக் குறித்தால் உலக சரித்திரத்தில் அவை ஒரு அத்தியாயமாகவே அமையும். சமூகக் கொடுமைகளால் அவதிப்படுகிறவர்களுக்கு முகம்மதிய மதமும் எவ்வளவோ உதவியாயிருக்

கின்றது என்று எல்லோருக்கும் நன்கு தெரியும். இஸ்லாம் மதத்தின் சகோதரத்வத்தைக் கண்டு உலகமே வியந்து ஆச்சர்யப்படுகிறது.

நாமிருக்கும் கிராமத்திலிருந்து சுமார் 10, 12 மைல் தூரத்திலுள்ள திருவாங்கூர் மலையில் பளியர்கள் என்று ஒரு காட்டுச் சாதியார்கள் இருக்கிறார்கள். காடுகளில் வசிக்கும் வகுப்பார்களைப் பற்றி அதிகமாக வர்ணிக்கத் தேவையில்லை. ஒரு கிறிஸ்தவர்—பிறப்பால் பிராமணர்—திரு. தேவதஞ்சம் என்பார் கிறிஸ்தவ மதப் பிரச்சாரச் சங்கத்தின் ஆதீனத்தின் கீழ் பளியர்களுடைய முன்னேற்றத்தைக் கருதி மலையில் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்திப் பளியர் பிள்ளைகளைச் சீர்திருத்திக் கொண்டிருக்கிறார் என்றும், அவருடைய மனைவியாரும்கூட வசதிகளற்ற கானகத்தில் அவருக்கு உதவியாய் வேலை செய்து கொண்டிருக்கிறாரென்றும் நாம் அறிவோம். அவர்கள் இந்துக்களாயிருந்தால் இந்து சமூகம் எவ்வாறு அவர்களை ஒப்புக்கொள்ளப் போகிறதோ என்று எமக்குத் தெரியவில்லை. காடுகளில் வசிக்கும் மானிட சகோதரர்களுக்கு இந்து சமயம் எவ்வாறு உதவி செய்து கொண்டிருக்கிறது? காடுகளில் மிருகங்கள்மாதிரி யிருக்கும் மனித உருவந் தாங்கிய காட்டுச் சாதியார்களைத் திருத்தி உயர்நிலைக்குக் கொண்டு வரும் கிறிஸ்துவ பாதிரிகளின் மேலான தொண்டைப் போற்றுகிறோம். இந்த மாதிரியான சேவைகளை ஹிந்துக்கள் என்றுதான் செய்ய ஆரம்பிக்கப் போகிறார்களோ அறியோம். இவ்வாறு தாழ்மையிலிருந்து முன்னேற்றமடைந்தவர்களை மற்ற மதஸ்தர்களெல்லாம் அன்புடன் ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் ஹிந்து மதத்தை அனுசரிக்க விரும்பி அனுசரிக்க ஆரப்பித்தால், அப்பொழுது அவர்களை ஹிந்துக்கள் தாழ்த்தி அடிமைப் படுத்துகிறார்கள். புனிதமான ஹிந்து மதம்—சமுத்திரம் போன்ற விசால ஹிந்து மதம் ஒருக்காலும் அப்படி அநியாயம் செய்யாது. மதத்தின் பெயரால்-குருட்டுத்தனமான வழக்கத்தின் பெயரால் ஹிந்துக்களில் வைதீக வெறி கொண்டவர்கள்—ஜாதிப் பேய் பிடித்தவர்கள் அப்படிச் செய்கிறார்கள்.

## குருட்டு மூட வழக்கம்

தற்கால ஹிந்துக்களில் வைதீக வெறி கொண்டவர்களின்-வீண் குருட்டு வழக்கங்களில் நம்பிக்கை யுடையவர்களின் மனப் பான்மைகளைச் சில விஷயங்களில் விவரிப்பது மிகுந்த கேவலமா யிருப்பினும் அவஸியமா யிருக்கிறது. ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கருப்பன் என்ற பெயருள்ள ஒரு ஹிந்து மதஸ்தனுக்குச் சமத்துவம் கொடுக்க உயர் குலத்தில் பிறந்த ஒரு ஹிந்து மறுத்து வெறுக்கிறார். நாளைக்கு அத் தீண்டா வகுப்பு ஹிந்து' கிறிஸ்தவனாகி ஜான் அல்லது டேவிட் என்று பெயர் வைத்துக் கொண்டவுடன் உயர் வகுப்பாரைக் கண்டால் பயப்படும் வழக்கம் மாறுகிறது; அவனிடமிருக்கும் ஜாதீய அடிமை உணர்ச்சி பறந்தோடுகிறது; அவனும் ஆண்மையுடன் நிமிர்ந்து சுதந்திரத்துடன் மற்றவர்கள் முன் நடக்கிறான். அப்பால் அவனுக்கு ஒரு சிறிய சர்க்கார் உத்தியோகமும் கிடைத்துவிட்டால், முன் வெறுத்துத் தள்ளிய வைதீகரே "குட் மார்னிங், சார்" சொல்லி, ஆங்கிலம் அறியாவிட்டாலும் ஆங்கிலத்தில் ஆசிகூறி கை குலுக்கித் தனது ஆசனத்தில் அமரும்படி செய்கிறார் அல்லது தனக்குச் சமத்துவத்தில் இனியொரு ஆசனம் கொடுக்கிறார். இனியொரு விஷயமும் வேறு தினுசில் கேளுங்கள். மாடன் என்ற ஒடுக்கப்பட்ட ஹிந்து, முகம்மதிய மதத்தில் சேர்ந்து தனக்கு பாட்சா ராவுத்தர் என்றோ அல்லது வேறு ஏதோ ஒரு அரபுப் பெயரை வைத்துக்கொண்டு முகம்மதிய உடையுடன் வெளியில் சென்றால், "சலாம், ராவுத்தரே, வாருங்கள்" என்று எவரும் சொல்வதைத் தவிர்த்து வேறென்ன விதமாய் அழைக்கக் கூடும்?

உயர் சிவ தீட்சைப் பெற்று விபூதி, உருத்திராட்சம் முதலிய சிவ சின்னங்களை அணிந்து கொண்டிருக்கும் உயர் குல ஒரு சைவருக்குக் கிடைக்கும் மரியாதையைக் காட்டிலும் ஆங்கில நாகரீக தீட்சை அடையாளங்களாகிய பூட்ஸ், காற் சட்டை, மேற் சட்டை, தொப்பி முதலியவைகளும் அணிந்து முன் கையில் தங்கக் கொலுசுக் கடிகாரத்துடனும், கண்ணில் கண்ணாடி

யுடனும், கையில் அழகான ஒரு சிறு பிரம்புடனும் செல்லும் எச் சாதியானுக்கும் அதிக மரியாதை கிடைக்கிறது. இவ்விதம் செய்வது எவ்வளவு அடிமைத்தனம்? அயல் மதஸ்தர்களுக்கு இவ்வாறு நடந்து கொள்வது பரஸ்பர அன்பினாலென்றால் நாம் போற்றுகிறோம். ஆனால் அப்படிச் செய்வது அன்பாலன்று; சமரசத்தாலன்று. அவர்களின் கோழைத்தனமே. இந்துக்களின் இந்தத் தத்துவத்தைக் கண்டல்லவா மற்ற மதத்தார்களும் மற்ற நாட்டார்களும் நகைக்கிறார்கள்.

## அறியா வைதீகம்

ஒரு ஒடுக்கப்பட்டவர் நன்றாய் வாசித்தவர்; ஒழுக்கமுள்ளவர்; பக்தியுள்ளவர்; மிகச் சுத்தமுடையவர். காலை மாலை ஆகிய இரு நேரங்களிலும் குளித்து இரு வேளை பூஜை செய்யக் கூடியவர்; அழகானவர்; தூய வெள்ளை ஆடை தரிப்பவர்; அன்பர்; தொண்டர். அவர் ஜலத்தைக்காய்ச்சிய ஆவியிலிருந்து உண்டான சுத்த நீரைத் தங்கத்தினால் செய்த அழகான டம்ளரில் கொண்டுவந்து தாகமுள்ள ஓர் உயர் ஜாதி வைதீகருக்கு "சாமி, இதோ தண்ணீர் கொண்டு வந்திருக்கிறேன். தாங்கள் அதிக தாகமா யிருக்கிறீர்கள்; தயவு செய்து சாப்பிடுங்கள்" என்று பணிவுடனும் அன்புடனும் கொடுப்பதை மிக வெறுப்புடன் தீண்டாதவன் கொண்டுவந்த நீரொன்று கருதி, அதைப் பருக மறுக்கிறார். ஆனால் ஒருவர் ஜாதியில் பிராமணர்; படிப்பற்றவன்; ஒழுக்கம் கெட்டவன்; பஞ்சமா பாதகன்; அழகற்ற குரூபி; வாயாடி வம்பன்; சுத்தமற்றவன்; ஒழுங்காய்க் குளிக்காதவன்; அவனுடைய வெள்ளை வேஷ்டி அழுக்கால் நிறமே மாறி அதிக அசுத்தமாகி, அதில் வெள்ளைப் பேன்கள் ஊறிக் கொண் டிருக்கின்றன. சரியாய்ச் சுத்தம் செய்யாதபடியால் பாசம் படர்ந்து பற்கள் மஞ்சள் நிறமாயிருக்கின்றன. வாயைத் திறந்தால் எத்தனையோ முள நீள தூரத்திற்கு வாய் நாற்றம் அடிக்கும். எத்தனையோ வருடங்களுக்கு முன் கழுவி உபயோகிக்காது ஒரு மூலையில் கிடக்கும் செம்பில்-கையில்

எடுத்தால் சில மணி நேரங்கள் வரையில் களிம்பு வாசனை வீசக் கூடிய ஒரு செம்பில்-அரை பாதியாய் அப்பொழுதுதான் கழுவிக் கொண்டுவந்த அந்தச் செம்பில் வியாதிகளை உண்டாக்கக்கூடிய கிருமிகள் அதிகம் இருக்கக்கூடுமோ வென்று சந்தேகிக்கும்படி யான அவ்வளவு அசுத்தமான தண்ணீரை இடது கையில் கொண்டு வந்து "இந்தா தண்ணீர்" என்று சற்றும் மரியாதை யில்லாது வைக்கிறதை "சாமிகளே, நல்லது" என்று இரண்டு கைகளாலும் வணக்கத்துடன் எடுத்துக்கொண்டு கங்கா தீர்த்தத் திற்குப் பக்தி செலுத்துவது போன்று வந்தனங்கள் செலுத்திக் கொண்டே குடிக்கிறார். உயர் ஜாதி அவ் வைதீகர், பிறப்பால் உயர்வு தாழ்வு கருதி மகா சுத்தமான ஒழுக்கமுள்ள அறிஞரான அன்பரைப் பஞ்சமர் என்று கேவலப்படுத்தித் தாழ்த்து வதும், பஞ்சமா பாதகனான அசுத்தப் பிராமணனைப் போற்றி வணங்குவதும் எவ்வளவு மதியீனம்! இந்த வழக்கத்தில் எவ் வளவு அடிமைத்தனம் எவ்வளவு அறியாமை அடங்கியிருக்கிறது!

பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் உணர்ச்சி ஹிந்து வைதீகப் பித்துப் பிடித்தவர்களின் இரத்தத்திலேயே பாய்ந்திருக்கிறது. இப்படிச் செய்வதாலல்லவோ இந்துக்களில் தாழ்ந்தோர்களை நசுக் கிப் புனிதமான ஹிந்து சமூகத்தையே வைதீகர்கள் அவர்க ளுடைய அறியாமையால் பாழாக்குகிறார்கள். ஆகையால் இந் துக்களின் தொகை குறைந்துகொண்டு வருகிறது. அருத்தமற்ற அனர்த்தமான வைதீகர்களுக்கு அறிவு கொடுக்கப் புத்தபிரானும், ஏசுநாதரும், முகம்மது நபியும் எவ்வளவோ பாடுபட்டார்கள். பாடுபட்டும் பயனில்லை. வைதீகர்கள் ஒருக்காலும் சீர்படப் போவதில்லை யென்று உலக சரித்திரம் நமக்கு விளக்குகிறது.

## கிறிஸ்தவ முகம்மதிய சமயங்கள்

தேசத்தில் நடந்த, நடக்கும் குழப்பங்களுக்கும் சண்டை களுக்கும் முதற் காரணம் சமய சமூகச் சச்சரவுகளும் உயர்வு தாழ்வு வாதங்களுமே. தமிழ் நாட்டில் சில ஆண்டுகளுக்குமுன்

நடந்த சிவகாசிக் கொள்ளை, கமுதிக் கலகம், அருப்புக்கோட்டை அடிதடி, மலையாள மாப்பிள்ளை குழப்பம், வைக்கம் சத்தியாக்கிரகம் முதலியவைகளைத் தங்களுடைய நினைவுக்குக் கொண்டு வருகிறோம். இன்றைக்கும் சில சத்தியாக்கிரகங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாளைக்கும் இனிப் பல சத்தியாக்கிரகங்கள் நடக்கப் போகின்றன. கிறிஸ்தவ மதம் தீவிரமாயும் ஊக்கமாயும் சரியாய் இதுவரை வேலை செய்திருந்தால், இந்தியாவிலிருக்கும் 6 கோடி தாழ்த்தப்பட்ட நம் சகோதரர்களும் கிறிஸ்தவர்களாகப் போயிருப்பார்கள். ஜாதி பேதமற்ற அன்புக் கிறிஸ்தவ மதம், ஜாதி வேற்றுமையால் தகிக்கப்பட்ட இந்தியாவிற்கு வரவே அதற்கும் வித்தியாசம் உண்டாகிவிட்டது. முகம்மதிய மதஸ்தர்களும் ஊக்கத்துடன் வேலை செய்திருந்தால் பஞ்சமர்கள் அனைவரும் இன்று முகம்மதியர்களே. ஹிந்து மதஸ்தர்களுக்கும் கிறிஸ்தவ மகம்மதிய மதஸ்தர்களுக்கும் மத்தியில் பிரம சமாஜம், ஆர்ய சமாஜம், பிரம ஞான சங்கம் முதலிய ஹிந்து மத சீர்திருத்த ஸ்தாபனங்கள் தோன்றியிராவிட்டால் இன்று இந்தியாவின் மதச் சரித்திரமே வேறு விதமாயிருக்குமென்று இங்கு உண்மையைச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

கிறிஸ்தவர்களாகவோ முகம்மதியர்களாகவோ ஹிந்துக்களை மத மாற்றம் செய்கிறார்களே யென்று மற்ற மதஸ்தர்களின் மீது துவேஷம் கொள்ளவில்லை யென்பதை நாம் இந்துவா யிருப்பதை முன்னிட்டுத்தான் இச்சமயத்தில் தெரியப்படுத்திக் கொள்கிறோம். இது விஷயத்தில் எமது ஹிந்து சகோதரர்கள் மீது அளவற்ற வருத்தம் கொள்ளாமலிருக்க முடியவில்லை. ஹிந்துக்களே ஹிந்துக்களாகிய அவர்களை அன்னிய மதங்களுக்கு விரட்டினார்கள்-அனுப்பினார்கள்-அனுப்புகிறார்களென்று ஏன் நாம் சொல்லக்கூடாது?

## மனித உரிமைகள்

ஹிந்து மதத்தை அனுசரிக்கும் ஹிந்துக்களை இந்து மதஸ்தர்களே புறக்கணிக்கும்பொழுது, கிறிஸ்தவர்களும் முகமதியர்க

ளும் புத்தர்களும் அவர்களை இன்புடன் வரவேற்று ஆதரித்து மனிதராகச் செய்வதற்காக நாம் அம் மதஸ்தினர்களுக்கு அநேக வந்தனங்கள் அளிக்கிறோம். எப்பாடு பட்டேனும் எதைக் கொடுத்தேனும் எதை இழந்தேனும் சுதந்திரமாய் ஒவ்வொரு மனிதனும் இருக்கவேண்டுமென்றே கூறுகிறோம். உலகத்தில் எல்லோரும் சுதந்தரம் அடைய வேண்டு மென்பதே எமது பிரியம். மனிதர்கள் மனிதர்களாயிருக்க வேண்டும். ஒரு மனிதனைத் தாழ்த்தவோ, அவன் சமத்துவத்தைத் தடுக்கவோ அல்லது அவன் சுதந்தர உரிமைகளை மறுக்கவோ பிடுங்கிக்கொள்ளவோ வேறு ஒரு மனிதனுக்கு என்ன உரிமை இருக்கிறது? மனித வளர்ச்சிக்குத் தடையாகவும் விரோதமாகவும் இருக்கும் சகல பழக்க வழக்கங்களையும் சட்ட திட்டங்களையும் அடியோடு நிர்மூலப்படுத்தியோ, மாற்றியோ கால தேச வர்த்தமானத்திற்கு ஒத்ததாயும் மானிட முன்னேற்றத்திற்கு அவசியமாகவும் அவசரமாகவும் வேண்டியவழிகளையும் சட்ட திட்டங்களையும் அமைத்து அவைகளைப் பின்பற்றினாலன்றி எத் தேசமும் எச் சமூகமும் ஒருக்காலும் முன்னுக்கு வரப்போவதில்லை. ஒரு மனிதனுடைய உரிமைகளில் வேறு ஒரு மனிதன் தலையிடுவதற்கு என்ன நியாயம்? ஜப்பானில் முன்பு சாமுராய் என்ற வகுப்பார்கள் செல்வமும் செல்வாக்கும் உடையவர்கள்; படித்தவர்கள். தங்களை உயர்வு பாராட்டி மற்றவர்களைத் தாழ்த்த ஆரம்பித்தார்கள், முடிவு என்ன ஆயிற்று? சமூகப் புரட்சி உண்டாயிற்று. கடைசியில் சமத்துவத்திற்கு இடமும் வெற்றியும் கிடைத்தது. இந்தியாவில் சாத்வீக சமூகப் புரட்சி உண்டாவதற்குப் பல குறிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன; சில வழிகள் திறக்கப்படப் பே.கின்றன. அந்தச் சாத்வீகச் சமூகப் புரட்சிகளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம.

## சிலைபம்பட்டிச் சம்பவம்

இனி எழுதப்போகும் விஷயத்திற்கு இதுவரையில் இவ்வளவு முகவுரை கூறியிருக்கிறோம். நாம் இங்குக் கூறப்போகும்

விஷயம் சிறிதாயிருப்பினும் வருங்கால இந்தியாவுடன் அதிகமாகச் சம்பந்தப்பட்டிருக்கிறது. மதுரை ஜில்லாவில் உத்தமபாளையம் என்ற கிராமத்தில் நாம் இருக்கிறோம். இவ்வூரிலிருந்து 7 மைல் தூரத்தில் ரஸ்தாவின் மீது சிலையம்பட்டி என்ற ஒரு குக்கிராமம் இருக்கிறது. அங்கு பலவகுப்பார்கள் இருக்கிறார்கள். அவ்வூரைப் பற்றி நாம் நன்கு அறிவோம். அதில் தேவேந்திரகுல வகுப்பார் (ஒடுக்கப்பட்டவர்)களில் சிலர் பணக்காரராயிருக்கிறார்கள். அங்கு மேல் வகுப்பு இந்துக்களின் இன்னல்களைத் தாங்கமுடியாது தாழ்த்தப்பட்டவர்களில் 50 பேர்களுக்கு மேலாக முகம்மதிய மதத்தைத் தழுவிவிட்டார்களென்று அறிகிறோம். உத்தமபாளையம் முகம்மதியரில் சில முக்கியஸ்தரின் முயற்சியால் தான் இக் காரியம் நடைபெற்றது. மதமாற்றச் சடங்குகள் நிறைவேற்றப் பட்டவுடன் புதியபழைய முகம்மதியர் அனைவருக்கும் சமபந்தி போஜனம் நடைபெற்றது. புதிதாக இஸ்லாமான முகம்மதியர்களுக்குக் கொரான் போதிக்கப்படுகிறது. உத்தமபாளையத்திற்கு அடுத்த நாராயணத் தேவன் பட்டியில் சுமார் 150 பேர்கள் இஸ்லாம் சமயத்தில் சேர்ந்திருக்கிறார்களாம். இனிமேல் அவர்களை ஹிந்துக்கள் "சலாம், ராவுத்தரே, வாருங்கள், இருங்கள்" என்று அழைக்கப் போகிறார்கள். இப்பொழுது இல்லாவிட்டாலும் இன்னும் சில வருடங்களில் இது நடைபெறாமல் போகாது. இவர்களுக்குச் சமத்துவமும், சுதந்திரமும் கிடைக்காமல் போகாது. இந்த மதமாற்றம் இன்று திடீரென்று நடைபெற்றதென்றாலும், மதத்தில் சேரப்போகும் விஷயத்தைப் பற்றி அவர்கள் பல வருடங்களாக யோசித்து யோசித்துக் கடைசியில் இப்பொழுது முடிவுக்கு வந்தகாரியமாகத்தான் இது இருக்கவேண்டுமென்பது எமது அபிப்பிராயம். அவர்களின் மதமாற்றத்திற்குக் காலமும், இடமும், சமயமும், சந்தர்ப்பமும் எல்லாம் சரியாகச் சேர்ந்துகொண்டன.

## புதிய ஊக்கம்

உத்தமபாளையத்து முகம்மதிய முக்கியஸ்தர்களில் சிலருக்கு இவ் விஷயத்தில் புதிய ஊக்கம் உண்டாகியிருக்கிறதை நாம் அதிகமாய் அறிவோம். தாலுகாவில் இன்னும் எத்தனையோ

ஒடுக்கப்பட்டவர்கள் இஸ்லாம் மதத்தைக் கைக்கொள்ளப் போகிறார்கள் என்ற விஷயம் இங்கு பரவிக் கொண்டிருக்கிறது. திருவண்ணாமலையி லிருக்கும் தாழ்த்தப்பட்டவர்களில் அநேகர் மகம்மதிய மதத்தில் சேரப்போவதாகப் பத்திரிகைகள் மூலமாகவும் நமக்குத் தெரிந்தவர்கள் மூலமாகவும் அறிகிறோம். உத்தமபாளையத்திற்கடுத்து ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்கள் ஏராளமாயிருக்கும் ராயப்பன்பட்டியில் ஒடுக்கப்பட்டவர்களை முகம்மதியர்களாக்கப் போகிறதாக வதந்தி உலாவிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருதினமும் ஹிந்து மதம், தன்னைப்பற்றினவர்களை இழந்து கொண்டும் அருகிக்கொண்டும் போகிறது. ஆனால் ஒவ்வொரு நாளிலும் மற்ற மதங்கள் அதற்குப் பதிலாகப் பெருகிக்கொண்டே வருகின்றன.

## ஒடுக்கப்பட்டவர்களுக்கு விழிப்பும் ஆங்கில அரசாங்கத்துக்கு ஆதரவும்

தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் இந்துக்களின் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டிருப்பார்கள்? எத்தனையோ நூற்றாண்டுகளாகப் பொறுமையுடன் பொறுத்துக் கொண்டிருந்து அலுத்து அவர்களும் இயற்கைத் தேவியின் சக்தியால் இப்பொழுது விழித்துக் கொண்டார்கள். ஆங்கிலேயர்களால் இந்தியர்கள் அடிமைகளாக இப்பொழுது ஆக்கப்பட்டிருக்கும்பொழுதே, இந்தியர்கள் ஆளப்படும்பொழுதே, பிரிட்டிஷ் பீரங்கிகள் ஆ என்று வாய்களைத் திறந்து கொண்டிருக்கும் பொழுதே, தீண்டாதவர்களை இவ்வாறு ஹிந்துக்கள் கஷ்டப்படுத்தினால், சுயாட்சி இந்தியாவுக்குக் கிடைத்துவிட்டால் தங்களின் நிலை என்னவாகும்? என்பதைப்பற்றி நினைத்தே அவர்கள் அயல் அரசாங்கத்தை அதிகமாய் வேண்டுகிறார்கள் என்று விளக்கமாய்ச் சொல்லுகிறோம்.

அவர்கள் மீது நாம் எவ்வாறு குற்றம் சொல்லக்கூடும்? அவர்களுக்குப் படிப்புக் கிடையாது, சுத்தம் கிடையாது, மது குடிப்பவர்கள், மாம்சம் புசிக்கிறவர்கள் என்று நாம் சொல்லலாம். இவர்கள் இப்படி இருப்பதற்கும் செய்வதற்கும் காரணங்களைக் கவனியுங்கள். அமெரிக்க நீக்கிரோவர்களைப் பற்றியும் ஜப்பானிய எடா வகுப்பார்களைப்பற்றியும் வாயால் பேசி ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஏதோ நொண்டிச் சமாதானம் கூறலாம். அவ்வளவுதான். "பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு என்ற கப்பலை ஒத்துழையாமை என்ற பீரங்கி கொண்டு தாக்கினால் அசையாமலிருக்கிறதே, அதற்குக் காரணமென்னவென்று கவனித்தால், தீண்டாதவர்கள் என்கிற நங்கூரம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு என்ற கப்பலைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கின்றது" என்று ஸ்வாமி சிரத்தானந்தர் கூறுகிறார்.

## உயர் வகுப்பு ஹிந்துக்களுக்கு

உங்கள் துன்புறுத்தலால் உங்கள் ஒடுக்கப்பட்ட சகோதரர்கள் படும் கஷ்டங்களை உணருங்கள். ஹிந்து சமூகம் பல வழிகளில் நாசமடைந்துகொண்டு வருகிறது. ஒடுக்கப்பட்ட சகோதரர்களைப் பல்லாண்டுகளாக நீங்கள் கொடுமை செய்துவிட்டீர்கள். அவர்களுக்கு இப்பொழுது நூதன உணர்ச்சி உண்டாகியிருக்கிறது. இனி நீங்கள் அவர்களைத் தாழ்த்த முடியாதபடி புத்த-கிறிஸ்தவ-முகம்மதிய மதங்களும், ஆர்ய சமாஜம் பிர்ம சமாஜம் முதலிய சீர்திருத்த ஹிந்து மத ஸ்தாபனங்களும் ஒடுக்கப்பட்டவர்களைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கும் பொழுது, அரசாங்கமே அவர்களுக்கு அதிக ஆதரவாயிருக்கும் பொழுது, இத் தேசத்தில் சமூக சீர்திருத்தக்காரர்களும் உண்மைத் தேசாபிமானிகளும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஊழியம் செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் அஞ்சா நெஞ்சு படைத்த வாலிபர்களும் அவர்கள் மீது அனுதாபம் கொண்டு அவர்களுக்கு உதவ முன்வந்திருக்கும் பொழுது இனிமேல் நீங்கள் அவர்களை என்னசெய்யப் போகின்றீர்கள்? எவ்வாறு தாழ்த்தப் போகின்றீர்கள்? என்று உலகமே கவனத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.

## வழக்கத்தை எப்படி மாற்றுவது?

நமது சொந்த நாட்டில் உதித்த நமது சொந்தச் சகோதரர்களுக்குச் சமத்துவமும் சுதந்திரமும் கொடுக்கிறதற்கு மறுத்துக் கொண்டிருக்கும் நாம், நம்மை ஆளும் அயல் நாட்டாரிடம் சுதந்திரம் கேட்பது எவ்வளவு ஒழுங்கு என்ன நியாயம் என்று எண்ணிப் பாருங்கள். நெடுங்காலமாக இப்படி இருந்துவந்த வழக்கத்தை எப்படி மாற்றுவது? என்று நீங்கள் சொல்லலாம். அப்படியானால் ஆங்கிலேயர் நம்மை 150 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டுகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நம்மை ஆளுவது வழக்கமாய்விட்டது. நாம் இன்று நமது தேசத்திற்குச் சுயாட்சி வேண்டுமென்று கேட்டால் அவர்கள் நமக்கு எவ்வாறு கொடுக்கப் போகிறார்கள்? வழக்கம் என்று அவ்வாறு சொல்பவர்களுக்கு, ஆங்கிலேயர்களுக்கும் நம்மை ஆண்டு வருவது 150 வருடங்களுக்கு மேல் வழக்கமாய் விட்டதே என்று நாம் பதிற் சொல்லுகிறோம்.

## ஆசியாக்கண்டத்து ஒடுக்கப்பட்டவர்கள்

இந்தியாவில் நமது சகோதரர்களைத் தீண்டாதவர்களென்று அடக்கி ஒடுக்கி வைத்த, வைத்துக் கொண்டிருக்கும் பாவத்திற்குத் தண்டனையாக ஆப்பிரிக்காவில் தொழிலாளராயும் மற்றும் பற்பல வேலைகளை முன்னிட்டும் குடியேறி யிருக்கும் நம்மிந்தியரை ஆசியாக்கண்டத்து ஒடுக்கப்பட்டவர்களென்று, இந்தியர்கள் போன்றே அங்கு பிழைப்பதற்குச் சென்ற ஐரோப்பியர்கள் அழைத்து நம் இந்தியச் சகோதரர்களுக்கு அநேக இடைஞ்சல்களும் இம்சைகளும் செய்து அவர்களை அந் நாட்டை விட்டுத் துரத்தப் பார்க்கிறார்கள். இந்தியாவிலிருந்து பற்பல ஜாதிகளாய் அங்கு சென்ற பிறகு அனைவருக்கும் இந்தியர்கள் என்ற பெயர்தான் உண்டு. உலகத்தின் பற்பல பாகங்களில் நம் நாட்டார்கள் தொழிலாளர்களாய்க் குடியேறி இருக்கிறார்கள். பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் விஷயத்திற்கு அயல் நாடுகளில் குடியேறி யிருக்கும் இந்தியர்கள் வெகு நன்றாய் வியாக்கியானம் சொல்லுவார்கள்.

இந்தியா, ஆத்மீக தத்துவம் நிறைந்தநாடு-கலைகளுக்கும் கல்விக்கும் நாகரிகத்திற்கும் தாயகமானதேசம்-இன்னும் எத்தனையோ வழிகளில் பேர்பெற்றபூமி—ஞான இந்தியா—தரும இந்தியா-புராதன இந்தியா-வீர இந்தியா-சுதந்தர இந்தியா இப்பொழுது இந்தியர்களுடைய கேவல பழக்க வழக்கங்களாலும் சுயநலத்தாலும் துவேஷத்தாலும் ஒடுக்கப்பட்டவர்களின் இந்தியா-தீண்டாதவர்களின் இந்தியா-அடிமை இந்தியா-வறுமை இந்தியா என ஆகிவிட்டதென்று மிக மிக வருத்தப்படுகிறோம்.

எமது பிரிய ஹிந்து சகோதரர்களே, வைதீகர்களே. இந்நாட்டில் இன்னும் இறவாத நற் பழக்கங்கள் புனித-வழக்கங்கள் எத்தனையோ குற்றுயிராய்க் கிடக்கின்றன. அறிவைப் போற்றி வளர்த்து நம்மையும் நம் தேசத்தார்களையும் அபிவிருத்தி செய்து தேசத்தை உலகம் பதிக்கச் செய்யவேண்டியதிருக்க, உங்கள் சமூகத்தார்களை மிருகங்களிலும் கேவலமாகத் தாழ்த்தி, அவர்களுக்குச் சகிக்க முடியாத அநேகங் கொடுமைகளைச் செய்து தேச ஒற்றுமையைக் கெடுத்துத் தேசத்தையே பாழ்படுத்துவது சரியாகுமா? நீங்கள், ஒடுக்கப்பட்ட உங்கள் சகோதரர்களுக்கு ஒரு நன்மையும் செய்யாவிட்டாலும் ஒருவிதத் தீங்கும் செய்யாமலிருந்தால் போதுமானது. அவர்கள் உங்களது இம்சை வலையிலிருந்து தப்பினால் போதும். அவர்கள் எப்படியேனும் பிழைத்துக்கொள்வார்கள். உங்களது பண்டை உணர்ச்சி-அற உணர்ச்சி-சமரச உணர்ச்சி-சகோதரத்வ உணர்ச்சி-சுதந்திர உணர்ச்சி எங்கே போய்விட்டது? அவைகள் உங்களிடம் மடிந்துவிட்டனவா? வேண்டாம், இனிமேல் இப்படி இருக்க வேண்டாம். கால மாறுபாட்டைக் கவனியுங்கள். உங்கள் இரத்தத்தில் பரவியிருக்கும் தீண்டாமை என்ற விஷக் கிருமிகளைக் கொல்லுங்கள். இக் கிருமிகள் உங்கள் சரீரத்தில் அதிகமாய்ப் பரவிவிட்டால் உங்களுக்கு அதிகமாய் ஆபத்து உண்டாகுமென்று எச்சரிக்கிறோம். ஆகையால் அந்தத் தீண்டாமை என்ற வியாதிக்குச் சமத்துவம் என்ற மருந்தை உபயோகித்தால், உடனே உங்கள் வியாதி பறந்துவிடும். உங்கள் மயக்கம் தெளிந்து ஒடுக்கப்பட்டவர்

களையும் மனிதர்கள் என்று எண்ணுவீர்கள். இத் தேசத்தில் தீண்டாமைப் பேய் மடியட்டும்! வைதீக வீண் வம்பு வாதம் மாயட்டும்!! இந்தியர் அனைவரும் சகோதரர் என்ற உணர்ச்சி இந்தியானைவருக்கும் உண்டாகட்டும்!!!

விடுதலை! விடுதலை! விடுதலை!

பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை
திறமைகொண்ட தீமையற்றதொழில் புரிந்து யாவரும்!
தேர்ந்தகல்வி, ஞான மெய்திவாழ்வ மிந்த நாட்டிலே.

ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை! ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வ மெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொருநிகர் ஸமானமாக வாழ்வமே. (பாரதி.)

---

1. கடவுள் மனிதரை உண்டாக்கினர்; மனிதன் ஜாதிகளை உண்டாக்கினன்.

* * * * *

2. இயற்கை கிராமங்களை உண்டாக்கி யிருக்கிறது; மனிதர் பட்டணங்களை உண்டாக்கி யிருக்கிறார்கள்.

* * * * *

3. இப்பொழுது பெண்கள் இன்னாருடைய மனைவி என்று சொல்வது போல் இனிமேல் ஆண்கள் இன்னாருடைய புருஷன் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ளும் காலம் வந்து கொண்டிருக்கிறது.

* * * * *

4. பிறப்பால் ஜாதி உண்டாகி யிருந்தால், காடுகளில் இருக்கும் மனிதர்கள் என்ன ஜாதி?

ரா. நா.

---

# பர்மா தேசம்.

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

### எல்லைகள்

ஆசியாக் கண்டத்தில் அமரர் தேசமோ வென்றனைவரும் அதிசயிக்கத் தக்கதாய் பூமா தேவிக்கோர் திலகம்போல விளங்கா நிற்கும் நம் பெருமை பொருந்திய இந்தியாவின் கீழ் பாகத் தொடரா யிருந்து வருவது பர்மா தேசமாம். இது பெரிய இந்தோ-பர்மா பூபாகத்தின் மேல்பாகமுமா யிருக்கிறது. பர்மா தேசம் வடக்கில் தீபத்து, சைன தேசங்களாலும், வடமேற்கில் அசாம், மணிப்பூர், லூஸாய் குன்றுகள், சிட்டகாங் தேசங்களாலும், மேற்கில் வங்காளக் குடாக் கடலாலும், தெற்கில் வங்காளக் குடாக் கடல், மார்ட்டபான் குடா, மலேய் பூபாகங்களாலும், வட கிழக்கிலும் கிழக்கிலும் யுன்னன், சைன, ஷான், பிரன்ச்சு இந்தோ-சைன, சையாம் தேசங்களாலும் சூழப்பட்டிருக்கிறது. இதன் நெடு நீளம் வடக்குந் தெற்குமாய் 1300 மைல், விரிவான அகலம் 700 மைல், விஸ்தீரணம் 2,33,707 சதுர மைல்.

### சரித்திரம்

#### பர்மாவின் குடியேற்றம்

'இங்கிலீஷ்' என்ற பதம் 'ஆங்கில்ஷ்' என்ற பதத்திலிருந்து திரிந்ததுபோல 'பர்மா' என்ற பதம் 'பிரம்மா' (Brahma) என்ற பதத்திலிருந்து திரிந்ததெனக் கூறலாம். இதை முற்காலத்தில் 'பிரம்ம' தேசம் என்பதற்கு 'மியம்ம' தேசம் என்று எழுதியிருக்கின்றனர். ஆதியில் பர்மாவில் குடியேறியவர்கள் மங்கோலியன் வம்சத்தவர்கள். இவர்கள் துர்க்கிஷ்தானத்தி லிருந்து

புறப்பட்டு வந்தவர்கள். அப்படி வந்தவர்களில் முக்கியமானவர்கள் மான் (Mon), பியு (Pyu), கன்ரன் (Kanran), தெட் (Thet), கரின் (Karen) என்பவர்களே. இப்பொழுது மான் என்பவர்கள் தலேய்ங் (Talaing) என்றும், பியு என்பவர்கள் பர்மியர் என்றும், தெட் என்பவர்கள் சின் (Chin) ஜாதியாரென்றும், கன்ரன் என்பவர்கள் அரக்கான் ஜாதியாரென்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களில் கரின் ஜாதியார் சீன தேசத்தாரிடமிருந்து பிரிந்து பர்மாவுக்கு முதலாவதாக வந்தவர்களாய்த் தெரிகிறது. ஷான் ஜாதியார்கள் 13-ம் நூற்றாண்டிலும், கச்சின் (Kachin) ஜாதியார் 1885-ம் வருடத்திலும் பர்மாவுக்கு வந்து சேர்ந்தனர். இவர்கள் பசியின் கொடுமையால் ஆறுகள், கணவாய்கள் வழியாகப் பர்மாவுக்கு வட பக்கமாக உட் பிரவேசித்தனர். பர்மியர் மங்கோலியர் வம்சத்தவர்களாயினும் இவர்கள் ஆதிப் பழக்க வழக்கங்கள் சீன தேசத்தை யொத்திராமல் இந்தியாவை ஒத்திருந்தது கவனிக்கத் தக்கது. இது பற்றியே பர்மியர் பட்டணங்களின் பெயர்கள் இந்தியாவினின்று கிடைக்கப் பெற்றதாகவுந் தெரிகிறது. இங்குள்ள ஐராவதி நதி சமஸ்கிருதத்தில் "ஆகார முதவுபவர்" (Giver of refreshment) என்று அருத்தப்படக் கூடியதாய், தற்போது பாஞ்சால தேசத்தில் ரவி என்ற நதியின் பூர்வப் பெயராகவுந் தெரிகிறது. பீகு என்ற ஊரின் பண்டைப் பெயராகிய உஸ்ஸா என்பது இந்தியாவின் ஒரிஸ்ஸா தேசத்தைக் குறிக்கிறது. பின்பு தென்னிந்தியாவிலிருந்து கிடாரம் என்ற பெயரையும் பூண்டது.

இந்தியர்கள், அசாம் வழியாக மேல் பர்மாவுக்கும், மதராஸிலிருந்து கடல் மார்க்கமாக கீழ் பர்மாவுக்கும் ஆதியில் வந்ததாகத் தெரிகிறது. தாட்டோன், புரோம், பீகு, இரங்கூன், அரக்கான் இவ்வூர்களில் அதிகமாய்க் குடியேறினர். சென்னை மாகாணத்தில் தெலுங்கானு (Telingana) என்ற பாகத்திலிருந்து பர்மாவுக்கு வந்தவர்களைக் கொண்டு பர்மாவின் ஓர் வகுப்பினர் 'தலேய்ங்' (Talaing) என்றழைக்கப் பட்டதாகத் தெரிகிறது. சுமார் கி. பி.

300-ம் வருஷத்திற்குமுன் பர்மா ஜாதியாருக்கு எழுத்துக்கள் (Inscriptions) இல்லை. முதலாவதாகக் கீழ் பர்மாவுக்கு தென்னியர்களால் எழுத்துக்கள் கொண்டு வரப்பட்டன. புரோம் என்ற ஊரில் உபயோகித்த பாலி (Pali) எழுத்துக்களும், பியு ஜாதியார் எழுத்துக்களும் 5-ம் 6-ம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் கோவா (Goa) என்ற ஊருக்கருகில் உபயோகிக்கப்பட்டு வந்த கடம்ப (Kadamba) என்ற எழுத்துக்களை ஒத்திருந்தன. சீயம் தேசத்திலிருந்த தலேய்ங் ஜாதியாரின் எழுத்துக்கள் மேற்கண்ட ஆண்டுகளில் காஞ்சிவரம் தர்மபாலன் காலத்துப் பல்லவ ஜாதியாரின் எழுத்துக்களை ஒத்திருந்தன. வட பர்மாவுக்கு வட இந்தியாவிலிருந்து எழுத்துக்கள் 10-ம் நூற்றாண்டில்தான் வந்ததாகத் தெரிகிறது.

கி. மு. 261-ல் அசோகன் கலிங்க தேசத்தைக் கைப்பற்றித் தென்னிந்தியாவில் புத்தர் மதத்தைப் பரவச் செய்ததின் பின், பர்மாவிலிருந்த இந்துக்களின் மதமும் சிறிது புத்த மதத்தைத் தழுவி வந்திருந்தது. அசோகன் காலத்திலேயே கி. மு. 272-32 வருடங்களில் சோண, உத்தாரா என்னு மிரண்டு மத போதகர்கள் பாட்ண நகரத்திலிருந்து பர்மாவுக்கு அனுப்பப்பட்டதின் காரணமாய் தாட்டோனில் சுமார் 60,000 பர்மிய ஜாதியார் புத்தர் மதத்தைத் தழுவினர். கி. மு. 403 லேயே புத்த கோஸா என்னும் போதகர் இலங்கையி லிருந்து தாட்டோனுக்கு மதப் புத்தகங்களைக் கொண்டு வந்து சேர்த்திருந்தனர். இந்துமதம், பர்மாவில் கொஞ்ச காலம் பரவியிருந்ததின் காரணமாய் இன்றும் அநேக இந்துமதத் தெய்வ உருவங்கள் முதலியவை பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்படுகின்றன. சில மத நூல்களிலும் புத்தரை விஷ்ணுவின் அவதாரமாகக் கூறப்படுகிறது. இந்தியாவைக் கொண்டு பர்மாவின் கடற்கரைப் பாகங்கள் நாகரீகத்தில் தீவிரமாய் முன்னேற்ற மடைந்தன. சோழ இராஜ்யத்திலிருந்து துணிகளும், வட இந்தியாவிலிருந்து புத்தர் உருவங்களும் பர்மாவுக்கு அடிக்கடி அனுப்பப்பட்டு வந்தன.

சுமார் கி. பி. 700-ம் ஆண்டில் இப்பொழுது டெல்டா வென்று சொல்லும் பாகம், சமுத்திரத்திற் குள்ளிருந்து பல தீவுகளையுடைய



பர்மிய மாது



பர்மிய ஆடவன்

தாயிருந்ததாகத் தெரிகிறது. பீகு, இரங்கூன், தாட்டோன் இன்னும் பல டெல்டா நகர்கள் அப்பொழுது துறைமுகப் பட்டணங்களாயிருந்தன. பீகு மாத்திரம் 1600-ம் ஆண்டுவரை துறைமுகப் பட்டணமாயிருந்தது.

முதலாவது பர்மிய அரசன் அனுரட்டா (Anawrahta) என்பவன் 1044-ம் ஆண்டு முதல் அரசாண்டு வந்தான். பர்மிய அரசர்களில் கடைசியாக ஆண்டவன் தீபோ என்பவன். இவன் 1886-ல் பிரிட்டிஷாரால் கைதியாக்கப்பட்டான்.

## பிரிட்டிஷார் வருகை

முதலாவதாக 16-வது நூற்றுண்டின் துவக்கத்தில் பர்மாவுக்கு வந்த ஐரோப்பியர் போர்த்துக்கீயராவர். இவர்கள் மார்ட்டபான், சிரியம் என்ற இடங்களை வியாபார ஸ்தலங்களாக ஏற்படுத்திக் கொண்டனர். ராவ் பிச் (Ralph Fytche) என்னும் ஓர் ஆங்கிலேய வியாபாரி இங்கிலாந்திலிருந்து கால்நடையாகவும், கப்பல் பிரயாணமாகவும் பர்மாவுக்கு 1586-ல் வந்து சேர்ந்தார். அப்பொழுது பர்மிய அரசருக்கும் சையாம் அரசருக்கும் யுத்தம் நடைபெற்றதால் வியாபாரத்திற் கிடமில்லாதிருந்தது. (இவர் ஞாபகார்த்தமாக இரங்கூனில் இன்றும் பிச் தோட்டம்—Fytche Squire—ஒன்று இருக்கிறது.) மஹா தர்ம ராஜா (Maha Dhamma Raja) காலத்தில் (1610) பர்மாவில் அநேக பிரிட்டிஷ் வியாபாரிகள் சிரியம், புரோம், ஆவா, பாமோ என்ற ஊர்களில் வந்திருந்தனர். பிறகு ஏதோ சில குற்றங்களுக்காக பர்மிய மன்னன் எல்லா ஐரோப்பிய வியாபாரிகளையும் பர்மாவினின்று துரத்திவிட்டான்.

சுமார் 60 வருஷங்களுக்குப் பின், பர்மியரும் தலேய்ங் ஜாதியாரும் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டிருக்கும் போது ஈஸ்ட் இந்தியாக் கம்பெனியைச் சேர்ந்த கேப்டன் வெல்டன் (Capt.

Weldon) என்றவன் கி. பி. 1687-ல் பாசின் நதி முகத்துவாரத்திலுள்ள நீகரேய்ஸ் (Negrais) தீவைக் கைப்பற்றினான். பிறகு 1709-ல் பாசினிலும், சிரியத்திலும் வியாபார ஸ்தலங்கள் நிறுவப்பட்டன. அலாங்பயா என்ற பர்மிய அரசன் தலேய்ங் ஜாதியாரோடு போர் புரியும் போது பிரான்ஸ்காரர்கள் தலேய்ங் ஜாதியாருக்கு உதவி புரிந்தனர். ஆனால் பிரிட்டிஷ்காரரோ வழக்கம்போல பிரான்ஸ்காரருக்கு எதிரியாக அலாங்பயாவுடன் சேர்ந்தனர். வெற்றியின் காரணமாய் பிரிட்டிஷாருக்கு நீகரேய்சும், மற்றோரிடமும் பர்மிய அரசனால் சுவாதீனமாக விடப்பட்டன. பிறகு 1759-ல் தலேய்ங் ஜாதியார் மறுபடியும் சண்டைக்குக் கிளம்பும் போது அவர்களுக்குப் பிரிட்டிஷார் துப்பாக்கிகள் கொடுத்துதவினர் என்ற செய்தியை அரசன் கேட்டு தன்கோபத்தால் பிரிட்டிஷாரையும் அவர்கள் வியாபார ஸ்தலங்களையும் நாசமாக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது 10 (?) பிரிட்டிஷார்களும், 100 இந்தியர்களும் படுகொலை செய்யப்பட்டனர். பாஜிடா என்ற பர்மிய அரசன் காலத்தில் (1819) மணிப்பூர் தேசத்தைக் கைப்பற்றி பிரிட்டிஷாருடைய சிட்டகாங் என்ற ஊரை மஹா பண்டுலா என்ற பர்மிய சேனாதிபதி 6,000 காலாட் படையுடன் கைப்பற்றச் சென்றபோது பிரிட்டிஷார் முதல் முதல் 1824-ஆம் மார்ச்சுமீ பர்மியரோடு யுத்தம் புரிந்தனர். மதராஸிலிருந்து அனுப்பப்பட்ட இந்தியப் போர் வீரர்களின் பேருதவியால் ஜெயம் பெற்று அசாம், அரக்கான், தெனாசரீம் முதலிய பாகங்களைத் தங்கள் சுவாதீனமாக்கிக் கொண்டனர்.

1846-ல் பகான்மின் என்ற பர்மிய அரசன், அநேக பிரிட்டிஷ் கப்பல் தலைவர்களைக் கைதியாக்கி அபராதங்கள் பெற்று விடுதலை செய்து மறுபடியும் பலரைக் கைதியாக்கினான். பர்மிய அரசன் இதற்குப் போதிய மன்னிப்புக் கேட்சவில்லையாம். ஆதலால் மேன்மை பொருந்திய இந்திய கவர்னர் ஜெனரல் லார்ட் டெல்ஹௌஸி, 1852-ல் ஜெனரல் காட்வினின் தீவிர முயற்சியால் கீழ் பர்மாவைச் சுவாதீனமாக்கி கேப்டன் பேயர் (Phayre) என்பவரை ஆளுகைத் தலைவராய் நியமித்தார். 1877-ம் வருஷத்தில் முதல் புகைவண்டிப் பாதை தங்கள் சுயநலத்திற்காக இரங்கூனிலிருந்து

புரோமுக்குப் போடப்பட்டது. பிறகு 1884-ல் பீகு என்ற ஊர் வழியாய் டாங்கூ என்ற ஊர் வரையும் போடப்பட்டது.

தீபோ என்ற அரசன் காலத்தில் பர்மிய கவர்ண்மெண்ட் பிரான்ஸ்காரரோடு உடன்படிக்கை செய்து கொண்டு போதிய உதவிபெற்று வந்ததைக் கேள்விப்பட்ட பிரிட்டிஷார் மனம் பொறுமல் 1885-ஆம் நவம்பர்மீ 14உ அரசன் முக்கிய பட்டணமாகிய மாந்தலே என்னும் நகரத்திற்குச் சேனைகளை அனுப்பி தீபோவையும், அவன் இரு மனைவிகள் சுபயாலட் என்பவளையும், அவள் தங்கையையும், அவர்கள் தாயாரையும் ஆக நால்வரைக் கைது செய்து பம்பாய் மாகாணத்திலுள்ள இரத்னகிரி நகரில் கொண்டுபோய் வைத்துவிட்டனர். தீபோ 1917-ம் வருஷம் காலஞ் சென்றான். 1886-ஆம் ஜனவரிமீ 1உ பர்மா பூராவும் பிரிட்டிஷார் (லார்ட் டப்பெரின் காலத்தில்) சுவாதீனத்திற்குட்பட்டது.

## இயற்கைப் பாகங்கள் (*Natural Divisions*)

பர்மாவை (1) கடற்கரைப் பாகம் (2) டெல்டா பாகம் (3) மத்திய பாகம் (4) ஷான் பாகம் (5) சின் பாகம் (6) வடபாகம் (7) சால்வீன் பாகமென ஏழு இயற்கைப் பாகங்களாகப் பிரிக்கலாம். இப் பாகங்களில் மிகச் செழிப்பானது முதல் இரண்டு பாகங்களே. ஏனெனில் கடற் காற்று கடற்கரைப் பாகங்களிலுள்ள மலைகளில் மோதி மழை ஏராளமாய்ப் பெய்கிறது. மேமீ மத்தியிலிருந்து அக்டோபர்மீ இறுதிவரை மழை ஏராளமாய்ப் பெய்து பூமியைச் செழிப்படையச் செய்கிறது. டெல்டா பாகத்தில் அளவுக்கதிகமான நெல் விளைவாகிறது. மத்திய பாகந்தவிர மற்ற பாகங்கள் சிறிது உயர்ந்த பாகங்களாதலால் கடற்கரைப் பக்கத்தில், தப்பிய மழைக் காற்றால் மழை அதிகமாய்ப் பெய்கிறது.

| பாகங்கள் | சராசரி வருஷ மழை | | |
|---|---|---|---|
| டெல்டா பாகம் | 80—130 | அங்குலம் | நனைந்த பாகம் |
| கடற்கரைப் பாகம் | 63—210 | ,, | மிக்க நனைந்த பாகம் |
| மத்திய பாகம் | 24— 38 | ,, | காய்ந்த பாகம் |
| மற்றப் பாகங்கள் | 60— 79 | ,, | மத்திய நிலை |

வடபாகம், சின், சால், வீன் பாகங்களில் அதிகமாய் விளைவில்லை. மத்திய பாகத்தில் எள், கோதுமை, நிலக்கடலை, புகையிலை, பருத்தி, சோளம், பழ வகைகள் முதலியவை விளைகின்றன. காப்பியும், தேயிலையும் ஷான் பாகத்தில் ஏராளமாய் விளைகின்றன. ரப்பர் தோட்டங்கள் இரங்கூனுக்கருகிலும், தெனசரிம் பாகத்திலும் அதிகமாயுள்ளன. மர வகைகள் காடுகளில் ஏராளமாய் வளர்ந்து கவர்ன்மெண்டார் பாதுகாப்பிலிருந்து வருகின்றன. மண்ணெண்ணெய் சுத்தமானதாய் மாதத்திற்கு 70,000 டன் கிடைக்கிறது. ரூபிக்கற்கள் (Rubies), வெள்ளி, ஈயம், துத்தநாகம், இரும்பு, டின் முதலிய வகைகளும் கொஞ்சம் வெட்டியெடுக்கப்படுகின்றன.

## கைத்தொழில்

பர்மாவில் வாழும் ஜனங்களில் மூன்றில் இரண்டு பாகத்தார் விவசாயச் சீவனஞ் செய்துவருகின்றனர். அவர்களின் தொகை பின் வருமாறு:—

| | | |
|---|---|---|
| நிலச் சொந்தக்காரர்கள் | ... | 40,64,042 |
| வாரத்திற்கு உழைப்பவர்கள் | ... | 18,14,164 |
| கூலிக்கு உழைப்பவர்கள் | ... | 20,85,806 |
| மொத்த விவசாயஞ் செய்வோர் | ... | 79,64,012 |

பெண்கள் அதிகமாய் சுருட்டு செய்வதிலும், பருத்தி, பட்டு நெசவு வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். நெசவு செய்யும் பெண்கள் தொகை சுமார் 91,711. பர்மியர் மரச் சித்திர வேலைகளில் மிகப் பேர் பெற்றவர்கள். புத்த ஆலயங்களில் இவர்கள் சித்திர வேலைகளைக் கண்டு அதிசயிக்காதவர் உளரோ? அப்படியே செம்பு, பித்தளைகளில் இவர்கள் செய்யும் வேலைப்பாடுகள் மிகவும் மெச்சத்தக்கன. ஆறு, குளம், குட்டை, சமுத்திரக் கரையோரங்களில் மீன்கள் ஏராளமாய்க் கிடைக்கின்றன. இவைகளைப் பர்மியர் காயவைத்து உப்பைச் சேர்த்திடித்து பக்குவப்படுத்தி

'நப்பி' என்ற பெயரோடு மேல் பர்மாவுக்கு அனுப்புகின்றனர். நேர்த்தியான மட் குடங்கள், மரத் தட்டுகள், எள்ளெண்ணெய், பர்மிய பாதரட்சைகள் முதலியவைகளும் செய்யப்படுகின்றன. ரப்பர் தோட்டங்களிலும், சுரங்கங்களிலும், இரும்பு, மரம், மண்ணெண்ணெய், அரிசி முதலியன கிடைக்குமிடங்களிலும் தொழில்கள் மிகுதியான பெருக்கு நடைபெறுகின்றன.

## வியாபாரம்

பர்மா மற்ற தேசங்களோடு செய்யும் மொத்த வியாபாரத்தில் பாதி இந்தியாவோடு நடத்துகிறது. முக்கியமாக அரிசி, தேக்கு மரம், மண்ணெண்ணெய் முதலியவைகள் இந்தியாவுக்கு ஏற்றுமதியாகின்றன. இந்தியாவிலிருந்து நிலக்கரி (1922-ல் 3,32,000 டன்), புகையிலை, கோணிக்கயிறு, பருத்தி நூல் முதலியவைகள் இறக்குமதியாகின்றன. வங்காள தேசம் பர்மாவின் இந்திய வியாபாரத்தில் பாதிக்குமேல் கையாண்டு வருகிறது. பர்மா தூர தேசங்களோடு முக்கியமாக அரிசி, மரம், இவ்விரண்டிலும், தோல், பெட்ரோலியம், ரப்பர், விலையுயர்ந்த கற்கள் முதலியவைகளிலும் வியாபாரம் நடத்துகிறது. அவைகளுக்குப் பதிலாக பருத்தி நூல், துணி, பட்டு, கம்பளிச் சாமான்கள், இரும்புச் சாமான்கள் முதலியவைகளைப் பெற்றுக்கொள்கிறது. 1922-ல் மண்ணெண்ணெய் 5,78,000 டன்களும், தேக்கு மரம் 1,48,000 டன்களும் ஏற்றுமதியாயின.

| வருஷம் | அரிசி ஏற்றுமதி |
|---|---|
| 1899—00 | 25,48,000 டன் |
| 1914—15 | 31,10,000 ,, |
| 1919—20 | 26,66,000 ,, |
| 1920—21 | 31,61,000 ,, |

அரிசி ஏராளமாய் விளைவாகியும் விவசாயஞ் செய்வோருக்குத் தக்க இலாபம் கடந்த வருஷம்கொண்டு கிடையாத காரணங்களை ஓர் கூட்டத்தார் கேட்டு அறிய முயன்று வருகின்றனர். பர்மா

(1922-ல்) ரூபாய் 65 கோடிக்கு சாமான்கள் ஏற்றுமதியும் (அதில் 25 கோடி ரூபாய்க்கு இந்தியாவுக்கு,) 37 கோடி ரூபாய் சாமான்கள் இறக்குமதியும் (அதில் 17 கோடி ரூபாய்க்கு இந்தியாவிலிருந்து) செய்திருக்கிறது.

## முக்கிய பட்டணங்கள்

பர்மாவின் முக்கியத் துறைமுகப் பட்டணங்களாவன:— இரங்கூன், ஆக்யாப், சைக்பியு, பாசீன், மோல்மேன், தவாய், மெர்க்குவி. பர்மாவில் 54 முக்கிய பட்டணங்களுண்டு. நூறு வீடுகளுக்கு அதிகமான கிராமங்கள் 4,711-ம், 40 வீடுகளிலிருந்து 99 வீடுகள் வரையுள்ள கிராமங்கள் 15,067-ம் இருக்கின்றன. பர்மாவில் ஜனங்கள் வசிக்கும் மொத்த வீடுகள் 2,727,541. மிகப் பிரபல்யமான நகரங்களாவன:— (1) இரங்கூன். இது பர்மாவின் முக்கிய தலைநகர். இது சுமார் ஒரு மைல் அகலமும், ஏழுமைல் நீளமுமாயுள்ளது. இதின் தெருப் பிளவுகளும், மரச் சாலைகளும, புத்த கோபுரங்களும், ராயல் ஏரியும் (Royal Lakes) இந்தியாவில் வேறெந்தப் பட்டணங்களிலுங் காணக்கூடாததாய் அவ்வளவு நேர்த்தியாக அமைக்கப் பட்டிருக்கின்றன. இங்கு 3,41,962 ஜனங்கள் வசிக்கின்றனர். அவர்களில் 2,36,689 ஆண்கள், 1.05,273 பெண்கள். இதில் மூன்றில் ஒரு பங்கு பர்மியர்களும், பாதி இந்தியர்களும், மீதியானவர்கள் சீனர்களும் ஐரோப்பியர்களுமாவர். ஏற்றுமதி இறக்குமதிகளில் ஆறில் ஐந்து பாகம் இப் பட்டணத்தின் வழியாய்ச் செல்லுகின்றன. 1755-ம் வருடம் வரை இது டகோன் என்ற நாமத்துடன் ஓர் மீன் பிடிக்கும் கிராமமாயிருந்தது. பிறகு அலாங்பயா அரசன் டலேய்ங் வகுப்பினரிடமிருந்து கைப்பற்றிச் சீர்திருத்தி ஓர் பெரிய புத்த கோபுரத்தை (Shwe Dagon Pagoda)ப் பார்ப்போர் மனதைக் கவருந் தன்மையில் அமைத்து வைத்தான். இரங்கூன் இந்தியாவில் மூன்றுவது துறைமுகப் பட்டணமாய் விளங்கா நிற்கிறது.

(2) மாந்தலே:— இது இரங்கூனுக்கு வடக்கே சுமார் 360 மைல் தூரத்திலிருக்கு யோர் பண்டைக் காலத்துப் பர்மிய அரசர்

களின் முக்கிய பட்டணம். இங்கு பர்மிய அரசரின் அரண்மனையைச் சுற்றி $1\frac{1}{4}$ மைல் சதுரமாக ஓர் பெருங் கோட்டையுள்ளது. இங்கே மரச்சித்திர வேலையும், பட்டு நெசவுத் தொழிலும் நடக்கின்றன.

இது மேல் பர்மாவுக்கு வியாபார மத்திய ஸ்தலம். மாந்தலேயிலிருந்து லாசியோ என்ற ஊருக்குப் போகும் ரெயில் பாதை ஒரு ஆழமான கோக்டேய்க் (Gokteik) என்ற பள்ளத்தாக்கைக் கடக்க உலகத்திலேயே உயரத்தில் இரண்டாவதானதோர் இருப்புப் பாலம் அரும் பெரும் வேலைப்பாடோடு கட்டப்பட்டிருக்கிறது. மாந்தலேக்குச் சமீபத்தில் மின்கன் (Mingun) என்ற ஊரில் 17-ம் நூற்றூண்டில் போரேபயா என்ற அரசன் செய்வித்த ஓர் பிரமாண்டமான மணியொன்றிருக்கிறது. இது உலகத்திலேயே உருவத்தில் இரண்டாவது (மிகப் பெரியது ரஸ்யாவிலுண்டு).

(3) மேமியோ:— இது மாந்தலேக்கு வடக்கே 43 மைல் தூரத்தில் சமுத்திரப் பரப்புக்கு மேல் 3,500 அடி உயரத்தில் அமையப்பெற்று கவர்னரும், மற்றவர்களும் குளிர்ச்சிக்காகப் போகுமிடமா யிருக்கிறது.

(4) பகான்:— இது சரித்திர சம்பந்தமாய்ப் பர்மாவில் மிகப் பேர்போன இடம். இது ஆயிரம் வருஷங்களுக் கதிசபாக பர்மிய அரசர்களின் முக்கிய தலை நகராயிருந்தது. இவ்வூரைச் சுற்றி அநேகம் மைல் தூரம் வரை பாழான அநேக புத்த கோவில்கள் நிறைந்திருக்கின்றன. அவ்விதக் கோபுரங்களில் ஆனந்த கோபுரம் (Ananda Pagoda) என்பது மிக்க வேலைப்பாடுடையதாய் கவர்ன்மெண்டார் ஆதரிப்பிலிருந்து வருகிறது.

(5) எனஞ்சியாங்:— இது மண்ணெண்ணெய்க்குப் பேர்போனவிடம். இங்கே ஆயிரக் கணக்கான யெண்ணெய்க் கிணறுகளுண்டு. இக் கிணறுகளிலிருந்து நேரே சுத்தப்படுத்த 300 மைல் தூரத்துக் கப்பாலுள்ள சிரியம் என்ற சிறிய துறைமுகத்திற்கு இரும்புக் குழாய் வழியாய் எண்ணெய் கொண்டுவரப் படுகிறது.

## ஜனங்கள்

பர்மாவின் ஜனத்தொகை 1,32,12,192. சதுரமைலுக்கு 57 பேர்களிருக்கின்றனர். மதப் பிரகாரம் பர்மாவில் வாழும் ஜனங்களைப் பின் வறுமாறு பிரிக்கப்பட்டிருக்கிறது:—

| புத்தர்கள் | | காட்டுத் தேவதை வழிபடுவோர் (ANIMISTS) | | இந்துக்கள் | | மகமதியர்கள் | | கிறிஸ்தவர்கள் | | மற்றவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 55,25,144 | 56,76,768 | 3,69,188 | 3,33,399 | 3,78,177 | 1,06,255 | 3,14,527 | 1,86,065 | 1,32,543 | 1,24,628 | 15,937 | 6,468 |

பெண்களின் மொத்த ஜனத் தொகையில் 7/8 பாகம் புத்தர்களும், 1/60 பாகம் இந்துக்களும், 1/34 பாகம் மகமதியர்களுமாயிருக்கின்றனர். பர்மாவிலுள்ள புத்த மதத்தினர்களைப் பின் வருமாறு பிரிக்கப்பட்டிருக்கிறது:—

| பர்மியர்கள் | தலேய்ங் | கரின்கள் | ஷான்கள் | மற்ற பூர்வ ஜனங்கள் | இந்தோ பர்மா கலப்பினர் | இந்தியர்கள் | மற்றவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 86,14,991 | 3,22,689 | 9,43,878 | 10,09,750 | 2,73,174 | 781 | 7,155 | 566 |

கிறிஸ்து மதத்தைத் தழுவியவர் பர்மியர்களில் 14,611. கரின்காரர்கள் 1,78,225. மற்ற பூர்வ ஜாதிகளில் 14,924.

## பர்மியர் வாழ்க்கை

மேஜர் அல்லான் யூல் (Major Allan Yule's 'Embassy to Ava') என்பவர் கூறிய பர்மியரின் குணகுணங்களில் சில பின் வருமாறு:— பர்மியர்கள் எக்காலத்தும் சுகானந்தத்தைச் சுகிக்கக் கருதியவர்கள். எப்பெருந் துன்பம் வந்தடைந்தாலும் அன்றே மறந்து ஆனந்தத்தையடைய ஆவல் கொண்டவர்கள். தங்கள் குடும்பங்களின்மேல் அதிக அபிமானமுடையவர்களாயினும் தேசா

பிமானம் வெகு சிறிதளவே யுடையவர்கள். ஜாதி பேதமென்பது கிடையாது. யாருடனுங் கூடிச் சாவகாசஞ் செய்வர். எவ் விஷயங்களையுமறிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாயினும் விடா முயற்சியும், ஏதாவதோர் விஷயத்தில் பூரண சித்திபெறக் கருத்தும் இல்லாதவர்கள். சில சமயம் எங்காவது படுகொலை நடந்தால் அச் செய்கையில் அருவருப்படையார்கள். அதிக நேரம் வேலை செய்வதிலும், கட்டாய நடக்கைத் திட்டத்திலும் (Discipline) வெறுப்புள்ளவர்கள். உண்மை உரைப்பவர்களாயினும் அற்ப விஷயத்தை பதிகப்படக் கூறுவதில் ஆசையுள்ளவர்கள். யாரும் தடுக்காவிட்டால் கெட்ட செய்கைகளையும், துன்புறுத்துவதையும் அஞ்சாமல் செய்யும் ஆற்றலுடையவர்கள். மிகவும் வீரமுடையவர்களாய்ச் சொல்லமுடியாது. மேல் கூறியவைகள் அல்லான் என்பவரின் அனுபவ ஆராய்ச்சி.

பர்மியர்களில் ஓர் கூலிக்காரன் ஒரு தனவந்தனின் செல்வப் புதல்வியைத் திருமணமுடிக்க யாதொரு நிபந்தனையுமில்லை. சென்னை மாகாணத்தில் அறியாமை யென்னும் அந்தகாரத்தினுலுண்டாகிய தேவ தாசிகளைப்போல பர்மிய மாதர்களில் முன் காலத்தில் 'கோவில் அடிமைகள்' (Pagoda Slaves) அநேகர் இருந்தனர். இவர்களை யாரும் மணமுடிக்கக் கூடாது. இப்பொழுது அவ்வித அடிமைகளைக் காண்பதரிது. பர்மியர்கள் எதிர்கால நிலைமையைக் கருதார். அன்றுடம் அனுபவிக்கும் ஆனந்தத்தில் ஆவலுள்ளவர்கள். 'நாளை யென்செய்வோம்' என்பதை உள்ளத்திற் கொள்ளார். திரவியங்களைச் சேர்த்து வையார். நல்ல தரும சிந்தனையுள்ளவர்கள். சிறியோர் பெரியோரிடம் மிக்க வணக்கத்துடன் நடந்து கொள்ளுவார்கள். தாய் தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளிடம் எவ்வளவு அன்பு பாராட்டி வருகிறார்களோ அவ்வளவு அன்பாக நம்மோடும் நடந்து கொள்வார்கள். ஆனால் கோபம் வந்துவிட்டால் அவர்களை அடக்க யாராலும் முடியாது. அற்ப விஷயத்திற்கும் கத்தி, அரி

வாள் முதலிய ஆயுதங்களைக் கொண்டு தங்களுக்குக் கோபம் மூட்டியவர்களை முன் பின் யோசியாது (அநேகமாய்க் கீழ் மக்கள்) குத்தி விடுவார்கள். ஜீவகாருண்யத்தில் சிறந்து விளங்கும் புத்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு இவ்விதக் கோபக் குணமும், கொலை செய்யுந்தன்மையும் எவ்வாறு உதித்தனவென்பதை ஊகிக்க முடியவில்லை.

ஒரு வாலிபன் ஓர் பெண்ணை மணக்க விரும்பினால் அவன் சில பெரிய மனுஷர்களைக் கொண்டு அப் பெண் வீட்டாருக்குத் தன் நோக்கத்தைத் தெரிவித்து ஒப்புக்கொண்டால் பெண் வீட்டுக்குப் பெருஞ் சடங்குகளின்றி நேரே சென்று கணவனாக வசித்து வருகிறான். மேலான குடும்பங்களில் சடங்குகள் வெகு ஆடம்பரமாய் நடக்கின்றன. ஒரு வாலிபன் தன் காதலியை யாருக்குந் தெரியாமல் கூட்டிச் சென்று சில மாதங்கள் வரை வசித்து வந்தால் அவன் அவளுக்குக் கணவனாகி விடுகிறான். ஒருவன் பல மனைவிகளை வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு மனைவியை யுடையவனுக்குத்தான் அதிகக் கௌரவங் கிடைக்கும். பல மனைவிகளையுடையவன் தன் முதல் மனைவியைத் தலைவியாகத் தன் வீட்டில் வைத்துக் கொண்டு மற்றவர்களை ஆங்காங்கு வைத்துக்கொள்ளுகிறான். ஒரு பிள்ளை தன் தாயாரடைந்துள்ள சொத்துக்களையும், தாய் தகப்பன் இருவருடைய பாகத்தையும் அடையும். முத்தமிடுவது இவர்களுக்கு வழக்கமில்லை. ஆனால் ஒருவன் தன் மனைவி, தாயார், குழந்தை முதலியவர்களைப் பிரியத்தால் தழுவி அவர்கள் கன்னங்களில் தன் மூக்கை வைத்தழுத்தி (மூச்சு உட்கொள்ளுவது போல) உரக்க உணர்வான். ஒருவன் தன் மனைவியிடம் எல்லோருக்கு முன்னிலையில் (மேனாட்டாரைப்போல்) வெகு வணக்கமாய் நடந்து கொள்ளுவது மரியாதை யில்லையாம்.

ஒரு பர்மியனுடைய பெயருக்குமுன் மரியாதையைக் குறிக்குமோர்பதம் பொருந்திவரும். அவைகளாவன:— 'ஷ்வே' ('Shwe Yo'), 'மௌங்' ('Moung' Ba). மௌங் என்பது சகோதரன் எனப் பொருள்படும். பர்மியர்களுக்கு வந்தனத்திற்கான கைக்

குறிகளில்லை. கை கூப்புதல் கடவுளிடத்தும், அரசர்களிடத்தும் தான். சிலர் பெரிய உத்தியோகஸ்தர்களின் முன் முழந்தாழ் படியிட்டு வந்தனஞ் செய்வது வழக்கம்.

பர்மியர் கிராமங்களில் தங்கள் வீடுகளைத் தரை மட்டத்திற்குச் சிறிது உயரத்தில் மரத் தூண்களின் மேல் கட்டுகின்றனர். பெரிய பட்டணங்களில் மர வீடுகளிலேயே வசிப்பார்கள். கிராமங்களில் கோடை காலங்களில் வீட்டுக்கு வெளியே சமைத்துண்பார்கள். வேலையில்லா நேரங்களில் பர்மிய மாதர்கள் நெசவு வேலையும், புகையிலைச் சுருட்டுகளும் செய்வார்கள் பர்மியர் விலையுயர்ந்த பட்டாடைகளையும், வைரக் கற்களையும் அணிய ஆவல் உள்ளவர்கள். ஏழைகளாயிருந்தாலும் ஏதாவதோர் பட்டாடையை அணிந்துகொள்ளுவது வழக்கமாய்ப் போய்விட்டது.

பர்மியர் உயிருள்ள ஜெந்துக்களை வதைத்துண்ணார்கள். எப்பொழுதும் உயிரற்ற அல்லது பிறரால் கொல்லப்பட்டவைகளையே புசிப்பார்கள். 'நப்பி' என்ற உப்பு சேர்த்த மீனை அதிக ஆவலுடன் உண்பார்கள். மதுபானங்களை உபயோகிக்கமாட்டார்கள். வெற்றிலை பாக்கு ஒவ்வொரு வீட்டிலும் அத்யாவசியமான பொருளா யிருந்துவரும். புகையிலைச் சுருட்டு ஆறுவயதிலிருந்து அறுபது வயது வரையுள்ள யாவரும் பிடிப்பார்கள். ஒரு பர்மியச் சுருட்டை சிறிது சிறிதாகப் பலர் உபயோகிப்பார்கள்.

ஒருவர் இறந்துவிட்டால் அவர் தேகத்தை இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குப் பாடம் செய்து வைத்துப் பிறகு பர்மியச் சுவாமியார்கள் (Pongyees) புடைசூழ வெகு ஆடம்பரமாகச் சுடுகாடடைந்து தகனஞ் செய்து சாம்பலை ஓர் பாத்திரத்திற் சேர்த்துப் புதைத்துவைத்து அதன் மேல் ஓர் சிறு கோபுரம் கட்டி வைப்பார்கள். ஏழு நாளைக்குப்பின் சுவாமியார்கள் வந்து பூஜைகள் செய்து ஆகாரமருந்திச் சென்றபின் அவ் வீட்டுத் தேவதை ('Nat') இறந்தவர் ஆத்துமாவைத் துரத்தி விடுகிறதாம்.

பர்மியர் மத ஆசாரத்தில் தவறமாட்டார்கள் மிகத் தெய்வ சிந்தனையுள்ளவர்கள். புத்தர் மதத்தின் ஐந்து முக்கிய நிபந்தனைகளாவன:— (1) உயிர் கொல்லாமை (2) களவாடாமை (3) பிறர் மனைவியோடு சேராமை (4) பொய்யாமை (5) மது விலக்கல். புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் இவ் வைந்து விரதங்களையுஞ் சரியாக அனுசரித்து வரக் கடமைப் பட்டுள்ளார்கள்.

### ஆளுகை

பர்மா தேசம் இப்பொழுது இரண்டாவது கவர்னர் ஆளுகைக்குட்பட்டு வருகிறது. பர்மா 8 பெரும் பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு கமிஷனரின் கீழும், 38 ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு உதவி (Deputy) கமிஷனர் மேல் பார்வையிலுமிருந்து வருகிறது. ஷான் தேசம் ஓர் ஷான் அரசனால் (Sawbaw) 'சாபா' என்ற பட்டணத்துடன் ஆளப்பட்டு பிரிட்டிஷார் மேற் பார்வையிலிருந்து வருகிறது. மற்ற விவரங்கள் மற்ற இந்திய இராஜதானிகளைப் போலவே. ஆனால் இங்கு வேறெங்குங் காணாத இருவித வரிகள் நடந்துவருகின்றன. இவ் வரிகளைக் கீழ் பர்மாவில் கேபிட்டேசன் (Capitation tax) என்ற நாமத்துடன் கலியாணமானவனிடம் ஐந்து ரூபாய்களும், கலியாண மாகாதவனிடம் $2\frac{1}{2}$ ரூபாய்களுமாகவும், மேல் பர்மாவில் தாத்தமேடா (Thathameda) என்ற பெயருடன் கிராமங்களில் ஜனங்களின் நிலைமைக்குத் தகுந்தவாறும் வசூல் பண்ணப்பட்டு வருகின்றன. இவ் வரிகளால் ஒரு வருஷத்திற்கு முன் அநேக கலகங்களும், கிளர்ச்சிகளும் உண்டாயின. சில விடங்களில் காருண்ய கவர்ன்மெண்டார் துப்பாக்கிப் பிரயோகங்களுஞ் செய்து அடக்க நேரிட்டது. அரசிறைகள் (Revenue ordinary and Extraordinary) கடன் வகை (Debt Heads) முதலியவைகளில்

| | | |
|---|---|---|
| 1928—29-ல் மொத்த வருமானம் சுமார் .... | ரூ | 12,72,93,000 |
| மொத்தச் செலவு சுமார் .... .... | ரூ | 12,42,30,000 |
| இருப்பு (சுமார்) | ரூ | 30,63,000 |

## கல்வியின் நிலைமை

தற்போது பர்மாவில் கல்வியின் நிலைமை முன்னேற்ற மடைந்தே யிருக்கிறது. ஆதியில் கல்வியை விருத்தி பண்ணியது அமெரிக்கன் முதலிய மிஷன்காரர்களென்று கூறலாம். இவர்கள் ஆங்காங்கு பள்ளிகள் ஸ்தாபித்து பிள்ளைகள் நிலைமைக்குத் தகுந்த வாறு இலவசக் கல்வியுங் கற்பித்து வந்தனர். பர்மாவில் மொத்தம் 292 பாடசாலைகளும், மூன்று கல்லூரிகளும் உள்ளன. அவை களில் 233 ஆண் பாடசாலைகள், 59 பெண் பாடசாலைகள். இவற் றில் 98 ஆண் உயர்தரப் பாடசாலைகளும், 23 பெண் உயர்தரப் பாடசாலைகளுமுண்டு. இரங்கூனில் மாத்திரம் 54 ஸ்கூல்களிருக் கின்றன. அவற்றில் 18 ஆண் உயர்தர ஸ்கூல்கள், 10 பெண் உயர் தர ஸ்கூல்கள். இங்குள்ள சர்வ கலாசாலை கேம்பிரிட்ஜ் சர்வ கலா சாலை (Cambridge University)யை ஒட்டி (Affiliated) கல்வி போதித்து வருகிறது. ஆண் பெண் இரு பாலரும் மிக்க ஊக்கத் தோடு ஆயிரக் கணக்காய்க் கற்று வருகின்றனர். பர்மியர்கள் உள் நாட்டுக் கலாசாலைகளில் கற்று வருவதோடு வெளி நாடுகளுக்குஞ் சென்று (கவர்ன்மெண்ட் உதவியில்) நவீனக் கல்வியுங் கற்று வருகின்றனர். இவர்கள் சிலரேயாவர். பர்மியர்களுக்கு ஐ. சி. யெஸ். பரீக்ஷை இரங்கூனிலேயே கடந்த இரண்டு வருஷங்களாக நடைபெற்று வருகிறது. கடந்த வருடம் ஐந்து பேர்களைப் பரீக்ஷையில் தேர்ந்தெடுத்தனர். பர்மாவுக்கு இத்தனைபேர்தா னென்ன முடிவு செய்து அத்தனை பெயரையும் பரீக்ஷையில் தேரிய வர்களிலிருந்து எடுத்துக் கொள்ளுகின்றனர். இப் போட்டியில் பர்மா-இந்தியர்களுக்கு இடமில்லாததற்குத் தகுந்த நிபந்தனை களுமுண்டு.

## பர்மிய சுவாமியார்களின் தேசாபிமானம்

பர்மிய சுவாமியார்கள் (Pongyees) தங்களுக்கு மதம் இந்தி யாவினின்று கிடைத்ததால், மதாபிமானத்தில் இந்தியாவின்மீது வெகு பற்றுடையவர்களா யிருக்கின்றனர். இந்தியா சுதந்திரத் திற்குப் பாடுபடத் தொடங்கியதால் இவர்களும் தங்கள் தேசம் சுதந்திரம் பெற வேண்டுமென்று உழைக்க ஆரம்பித்தனர். இவர் கள் உழைப்புகள் இந்தியர்களைப் பின்பற்றியதாகவே யிருந்தன.

பர்மிய சுவாமியார்களின் தலைவர் ஊ ஆட்டமா என்ற மகான் தேசாபிமானந் ததும்பி இந்தியா சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து உழைக்கத் தொடங்கினார். பின்பு கவர்ன்மெண்டைத் தூஷித்து வீராவேசத்துடன் ஜனங்களுக்கு உணர்ச்சிகள் உளங் கொதித் தெழும்படி சொற் பொழிவு நிகழ்த்திய காரணமாகக் கைதியாக் கப்பட்டு இதுபோழ்து விடுதலையடைந்து சீனா தேசத்திற்கு அலு வலாய்ச் சென்றிருக்கிறார்.

பர்மாப் பிரிவினைக் கட்சிக்காரர் கூக்குரலிட்டுத் திரியும்போது இச் சுவாமியார்கள் தங்கள் தேசம், மதத்தை மனமுவந்து ஈந்த இந்திய நாட்டைப் பிரிந்திருக்கப்படா தென்று பெருங் கூட்டங் கூடிப் பிரிவினைக் கட்சிக்காரர்களைக் கண்டனஞ் செய்திருக்கின்றனர். நமது பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராய் அவர்கள் காலஞ்சென்ற காலத்தில் இங்கு இவர்கள் இந்தியர்களோடு சேர்ந்து மனம் வருந் தினர். சைமன் கமிஷன் வந்தபோது இந்தியாவைப்போல அக் கமிஷனை இவர்களும் வெகு மும்முரமாய்ப் பகிஷ்கரித்தனர்.

ஊ விஜயா வென்னும் சுவாமியார் கிராமங்களிலுள்ள ஜனங் களுக்குத் தேசாபிமானம் பொங்கி யெழும்படி "சுயராஜ்யம் கிடைக்கும்வரை ஆங்கிலேயர்களைச் சுட்டுக் கொளுத்தவேண்டு" மென்ற பல சொற்பொழிவுகள் செய்தமையால் கைதியாக்கப்பட்டு உண்ணா விரதம் பூண்டு தளர்வுற்றதால் கோர்ட் விசாரணை சிறைச் சாலையிலேயே நடைபெற்றது. இம் முனிவர் குற்றவாளி யாக்கப் பட்டு கடுந் தண்டனை விதிக்கப்பட்டார். இவர் அணிந்திருந்த மத அங்கித் துணியை நீக்கிவிட்டனர். இவர், பூஜை முதலிய வைகள் செய்யுந் தினங்களிலாவது தனக்கும் மற்ற கைதியாக்கப் பட்ட சுவாமியார்களுக்கும் அங்கிகளையும், புத்தர் உருவமும் கொடுக்கப்பட வேண்டுமென்று மன்றாடியதில் பிரயோஜனப் படாமையால் உண்ணா விரதத்தை வெகு மும்முரமாய் 163 நாட் களாய்க் கையாண்டு கடந்த மாதம் காலஞ் சென்றார். தேசாபி மானத்தால் சிறைபட்டு மதாபிமானத்தால் உயிர் துறந்தார்; பரிதாபம்! பரிதாபம்!!

# தொழிலாளர்.

திரு. கே. கோவிந்தராஜன் அவர்கள்.

## தொழிலாளர் எழுச்சி

தொழிலாளர் எனப்படுவோர் உலக மக்கள் யாவர்க்கும் உதவியாளரும், பிரதானமானோருமாவர். மக்களினத்தையே தொழிலாளிகள் எனவும், முதலாளிகள் எனவும் இரு கூறாகப் பிரிக்கலாம். முதலாளிகளைவிடத் தொழிலாளிகளே சிறப்பினையுடையோராவர். முதலாளிகளும், அவர்கள் உள்ளிட்ட ஆள்வோரும் செல்வத்தின் பயனை அநுபவிப்பதும், ஆட்சி புரிவதும், அமைதி, சட்டம், ஒழுங்கு இவைகளை நிர்மாணிப்பதும் தொழிலாளர்களின் உழைப்பையும் உதவியையும் காரணமாகக்கொண்டேயென்பது மிகையாகாது. தொழிலாளர்கள் தங்கள் உழைப்பின் உண்மையையும், தங்கள் உதவியால் உலக மக்கள் அடையும் நன்மையையும் சமீபத்திலேயே உணர்ந்தவர்களாய்த் தங்கள் சிறப்பினைப் பண்படுத்திக்கொள்ள முயன்று வருகின்றனர். இதற்குச் சான்றாகத் தற்காலம் உலகத்தின் பல பாகங்களையும் கவனித்தால் அநேக தேசங்கள் தொழிலாளர்களால் வெகு திறமையாக ஆட்சி புரியப்பெற்று வருவதை யறியலாம். தொழிலாளர்கள் பாமரர்களென்றும், முதலாளிகளுக்கு உழைத்து மிருகப் பிராயர்களாகவேயிருக்க வேண்டியவர்களென்றும் பொதுவாக இருந்து வந்த தவறுதலான எண்ணமானது அறவே யகன்று விட்டது. உலக நிகழ்வுக்குத் தங்களின் உழைப்பே அத்தியாவசியமானதென்பதைத் தெளிந்துணர்ந்த தொழிலாளர்கள் தங்கள் உரிமையை நிலைநாட்ட எவ்வகையிலும் பின் வாங்காமலேயே உழைத்து வருகின்றனர். தற்காலம், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய

சரித்திரத்தில்,-ஏன்?-உலக சரித்திரத்தில், பிரதம பாகத்தில் பொறிக்கத் தக்கதாய் அரிய பெரிய காரியங்கள் பலவற்றைத் தங்கள் திறமையால் சாதித்துப் புகழ்பெற்று வருபவர்களும், இதர தேச இராஜ தந்திரிகளுக்கு வழிகாட்டிகளாய் விளங்கி வருபவர்களுமான திருவாளர்கள். இராம்சே மக்டொனல்டு, வெட்ஜ்வுட் பென், ஸ்நோடன், பார்மூர், பாஸ்பீல்ட் முதலிய பிரிட்டிஷ் தொழிற்கட்சி மந்திரி சபைப் பிரமுகர்களின் தீவிரச் செயல்கள் பலவும் தொழிலாளர்கள், முதலாளிகளைவிட அறிவிலும்-ஆற்றலிலும் சிறந்தவர்களே என்பதைத் தெள்ளிதில் விளக்குகிறதன்றோ?

## தொழிலே பிறவிக்கடன்

ஒவ்வொரு ஜீவ வர்க்கமும் தொழிலின்றிக் கணநேரமுமிருப்பதில்லை சிருஷ்டி கர்த்தாவாகிய ஈஸ்வரனும் இடைவிடாது "சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம்" என்னும் முத்தொழில்களிலும் உடன்பாடுடையவரா யிருக்கின்றார். இந்நிலையில், தொழிலில் ஈடுபடாதிருப்பதென்பது உயிரற்ற சவத்தோடு உலவுவதென்பதையே நிகர்க்கும். எனவே தொழிலே பிறவியின் பிரதமக் கடன் என்பது விகசிதமாகிறது.

## இந்தியாவும் தொழிலாளரும்

ஒவ்வொரு தேச மக்களின் முன்னேற்றமும் அத் தேசத் தொழில்களின் அபிவிர்த்தியைப் பொறுத்திருக்கின்றதென்பது வெள்ளிடை. ஒரு தேசம் க்ஷீண திசையிலிருக்கின்றதெனக் கூறப்புகின், அத்தேசத் தொழில்கள் அபிவிர்த்தி என்பதற்று வீழ்ச்சியின் வாய்ப்பட்டிருக்கிறதென்ற முடிவையே பயக்கும். நம் அருந்தாய் நாடாகிய இந்தியாவிலோ, பண்டைக்காலந் தொட்டே 'இயற்கை நிகழ்வு'களின் துணைக்கொண்டு தொழில்கள் நடத்தப்பட்டு வந்தன. கால வேறுபாட்டால் யாவும் மாற்றமடைந்தன, மாற்றமடைகின்றன. மழைக் காலத்தில் நிலங்களைப் பண்படுத்தல், விதை விதைத்தல், நடவு நடல் முதலிய இது

போன்ற செயல்கள் பல செய்தலினும், இடைக்காலத்தில், பூமியைக் கல்லிவிடுதல், உடன் வளர்ந்துள்ள இதர செடி கொடிகளை யகற்றல், தக்கவாறு எரு, தழை முதலியவைகளைக் கொடுத்து அளவோடு தண்ணீர் பாய்ச்சுதல் முதலியவைகளிலும், வெயிற் காலத்தில் உரிய காரியங்களைச் செய்து அறுவடையின் மூலம பலன் காணுதல் முதலியவைகளிலும், இதுவை போன்ற புனிதமான தொழில்கள் பலவற்றிலும் நம் இந்திய மக்கள் பெரிதும நாட்டங் கொண்டிருந்தனர். 'இயற்கை நிகழ்வு'களும் அவர்களுக்கு உறுதுணையா யிருந்தன. அன்று உதவியாயிருந்த 'இயற்கை நிகழ்வு'கள் இன்று எங்கே மறைந்தனவெனும் ஐயப்பாட்டை எழுப்பின் அவற்றை நிவர்த்திப்பதற்கு அடியில் காண்பவைகளே சாலுமென்பது துணிபு.

## இயந்திர வாழ்க்கை

நம் நாட்டு வலியோரை யெல்லாம் எளியோராக்கியதும், நவ நாகரீகத்தின் உயிர் நாடியாகியதுமான இயந்திரங்களின் அபிவிர்த்தியும், அவைகளுக்குப் பெரிதும் உபயோகிக்கப்படும் நிலக்கரி, பலதிறப்பட்ட நில எண்ணெய் வகைகள் முதலியவைகளுமே யென்பது மிகையாகாது. பிற நாட்டு ஆட்சி முறையும், வழக்க ஒழுக்கங்களும் நம் நாட்டில் பரவுவதற்குமுன், நிலக்கரிப் புகையும், பல திறப்பட்ட நில எண்ணெய்களால் உற்பத்தி செய்யப்படும் புகையும் நம் நாட்டுப் புனிதமான வானை யளாவியதில்லை. சூரிய வெப்பத்தாலாய ஆவியே மேகமாக வானைச் சூழ்ந்து நின்று மழையாக வர்ஷித்து மக்கள் மனதிற்கும், வயிற்றிற்கும், வாழ்விற்கும் பயன் தந்தது. நவீன இயந்திரப் புகையால் ஓர் வகைத் தார்க்கந்தமும், புதுப்புது நோய்களை உண்டுபண்ணும் விஷக் கிருமிகளும் ஆகாயத்தைத் தினந்தோறும் நிரப்பி நிற்பதால், காலத்தோடு மழை பொழிதல், பனிவர்ஷித்தல், சூரிய வெப்பம் காணல் முதலிய நிகழ்வுகள் அடியோடு மாற்றமடைந்

தன-அடைகின்றன. ஒருவாறு மழை பொழியினும், மக்க ளினத்திற்கும், மாக்க ளினத்திற்கும், இதர ஊர்வன, பறப்பன, அசைவன முதலிய ஜீவ வர்க்கங்களுக்கும் ஊறு விளைவிப்பதா யிருக்கின்றது. ஆடு, மாடு, கோழி, காகம் முதலிய ஜந்துக்கள் திடீர் திடீர் என விழுந்திறப்பதும், மனிதர்கள் பூரண அறிவோடும், ஆற்றலோடும், காரியாதிகளில் ஈடுபட்டுள்ளபோது சில விநாடிகளில் உயிரிழப்பதும் நம் நாட்டுச் சுகாதார முறைகள் அடியோடு மாறியிருப்பதையும், கொடு நோய்கள் பல உற்பத்தியாகி யிருப்பதையும் குறிக்கிறதன்றோ! இவைகளுக்கு நிலக்கரிப் புகையும், நில எண்ணெய் வகைகளின் புகையுமே காரணமென ஏன் கொள்ளக்கூடாது? அதிகமாக இரயிலிலும், கப்பல்களிலும், மோட்டார்களிலும் பிரயாணம் செய்வோரும், இயந்திரங்களில் அதிகமாகப் பழக்கம் உடையோரும் பெயர் தெரியாத நோய்கள் பலவற்றிற் கிலக்காவது கண்கூடு. இப் புதுவித புகைகளாலேயே நமது மக்கள் பலருக்கு க்ஷய ரோகம் (காசம்), நீர் ரோகம் முதலிய கொடு நோய்கள் உற்பத்தியாகின்றன வென அறிஞர் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். நம் நாட்டு நிலைக்கு ஒவ்வாததாயும், மக்கள் வாழ்க்கைக்கு நலம் பயக்கா திருப்பதாயும் உள்ள காரணத்தால்தான் 'இயற்கைத் தெய்வம்' பல ஆயிர மைல்களுக்கு அப்பால் நிலக்கரியையும், புதுவித நில எண்ணெய் வகைகளையும் உற்பத்தி செய்தது போலும்!

நிலக்கரியும், நில எண்ணெய் வகையறுக்களும் உற்பத்தியாகும் தேசங்களோ அவற்றால் பயன்பெறக் கூடியவையா யிருப்பதும் குறிப்பிடத் தக்கதே! அவைகள் உற்பத்தியாகும் மேல் நாடுகளோ, பெரும்பாலும் மூடு பனியால் சூழப்பெறுவதாகும்; உறைந்த பனி மிகுந்திருப்பதாகும். பனிக்கட்டியாலும், மூடு பனியாலும் தாக்குண்டு குளிரால் வாடும் ஜனங்கள் தீயின் துணையால் உபசாந்தியைப் பெற முற்படுவது இயற்கையே! அத்தகையோர்க்குத் திறமான தீயை உற்பத்தி செய்யும் இத்தகைய நிலக்கரியும், மூடு பனியைக் கலைக்கவல்ல நில எண்ணெய்ப் புகையும் சாலச் சிறந்ததாகு மென்பதும் மிகையாகுமோ! அவற்றால் அந்நாட்டுச் சீதோஷ்ண நிலையும் பல வகையாலும் சீர்படவே

ஏதுவிருக்கும். நம் நாட்டிற்குப் புனித சாதனங்களாய் அமைந்துதவும் தானிய வகைகளைப்போன்றும், தங்கம், வெள்ளி, முத்து, ரத்ந, வைரக் கற்களைப் போன்றும் அந் நாடுகளுக்கு ஏற்றதான நிலக்கரி, நில எண்ணெய், இருப்பு முதலியவைகளும் அமைந்தனவெனக் கொள்ளுதல் தகும். தொழிலாளர் வாழ்க்கையை அடியோடு அழிக்கத் தோன்றியவை இயந்திரங்களே யாகையால் அவற்றால் நேரிடும் இதர தீங்குகளில் சிலவற்றையும் மேலே விவரிக்கலாயிற்று. நம் நாட்டிற்குத்தான் இயந்திரங்கள் ஆகாதவையாயிருக்கின்றனவெனினும், பெரும்பாலும் அவை உற்பத்தியாகும், தனவந்தர்கள் மிகுந்துள்ள அமெரிக்காவையும் அவைகள் செய்யும் அலங்கோலங்கள் கவனிக்கற்பாலனவே!

"அமெரிக்காவில் வேலையில்லாமல் 40,00,000 பேர் இருக்கிறார்கள். இம்மாதிரி நிலைமை இதற்குமுன் அங்கு ஏற்பட்டதே கிடையாது. * * * தொழிலாளர்களுடைய வேலைகளையெல்லாம் சிறிது சிறிதாக இயந்திரங்கள் கைப்பற்றி வருவதே இவ் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம். ** தொழிற்சாலைகள் 1919-ம் ஆண்டில் உற்பத்தி செய்த பொருள்களை விட 100-க்கு 23 பங்கு அதிகமாக 1927-ம் ஆண்டில் உற்பத்தி செய்திருக்கின்றன. ஆனால் அவற்றில் வேலை செய்த தொழிலாளர்களோ 100-க்கு 14 பங்கு முந்திய ஆண்டைவிட பிந்திய ஆண்டில் குறைந்துவிட்டார்கள். * * * கடந்த நான்கு ஆண்டுகளில் விவசாயப் பொருள் உற்பத்தி 100-க்கு 10 பங்கு அதிகமாக இருக்கிறது. ஆனால் பண்ணைத் தொழிலாளர்கள் தொகையோ 100-க்கு 5 வீதம் குறைந்துவிட்டது. வயல்களில் புதிதாக உபயோகத்துக்கு வந்திருக்கும், 45,000 அறுவடை இயந்திரங்கள் 1,30,000 பண்ணையாட்களுக்கு வேலையில்லாமல் செய்துவிட்டன" என டார் என்னும் புனைபெயர் பூண்ட ஆங்கிலப் பேராசிரியர் "டிட்பிட்ஸ்" பத்திரிகையில் சென்ற ஆண்டு வரைந்த கட்டுரை யொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆகவே தொழிலாளர் வாழ்க்கையைச் சின்னாபின்னப்படுத்தத் தோன்றிய எம உருக்கள் எனவே இயந்திரங்களைக் கொள்ளல் பொருந்தும். மேல் நாடுகளே இவ்வித பயங்கர நிலையை எய்தியிருக்கும்போது கீழ் நாடுகளைப்பற்றிக் கூறுவானேன். இயந்திர சாதனங்களினால் எவ்வளவு சௌகரியங்களையும், சுகங்களையும் விரும்பினார்களோ, அவற்றிற்குப் பன்மடங்கு அதிகமாகவே அபாயங்களும் துக்கங்களும் ஏற்படுவதை அநுபவத்தால் மேல்

நாட்டினரும் கீழ் நாட்டினரும் அறிந்து வருகின்றனர். அவற்றினின்றும் மீள, தொழிலாளர்களின் கூட்டுறவை முதலாளி வர்க்கத்தினருள்ளிட்டோர் மீண்டும் அடைய வேண்டியவர்களாகவேயிருக்கின்றார்கள். "தொழிலாளர் இன்றேல் உலகமில்லை" என்னும் உண்மையை மெய்ப்பிக்கவே இயந்திரங்கள் தோன்றின போலும்!

## தேவையான தொழிலாளர் வாழ்வு

நம் இந்தியாவிலோ தொழிலாளர்களின் வாழ்க்கை செம்மையுடையதாயிருந்ததற்குக் காரணமாய் விளங்கிய பண்டைத்தொழில்கள், பலரால் இழிவானதெனக் கருதப்படுகிறது. ஆடம்பரத் தோற்றத்தோடுள்ள நவீன தொழில்களில் ஈடுபட்டு எளிய வாழ்வையும், ஆயுள் குறைவையும், நாட்டின் செழுமைக்கு ஹானியையும் தேடிக்கொள்வது உயர்வாகத் தோன்றுதல் காலத்தின் கொடுமை போலும்! கொடிய வெய்யிலிலும், கனத்த மழையிலும் காய்ந்து நனைந்து உழைத்த நம் பண்டைப் பெருமக்கள் பூரண ஆயுளைப் பெற்றுப் புவியில வாழ்ந்த நேர்மையும் தற்கால மக்கள் மனதிற் படாமற்போனது விந்தையே! நமது பண்டைப் பெருமை வாய்ந்த விவசாயத் தொழிலிலும், புனிதமிக்க நூற்றல், நெய்தற் றொழில்களிலும் நம் தொழிலாளர் மக்கள் பெரிதும் ஈடுபடுதல் வேண்டும். ஆடவர்கள் நஞ்செய், புஞ்செய் நிலங்களிலும், இதர தச்சு, கன்னாரத் தொழில்கள் போன்றவைகளிலும் ஈடுபட்டுப் பொருளீட்டினும் பெண்மக்கள் நூற்றல், நெய்தற் றொழில்களில் ஈடுபடுவது பயன் விளைவிப்பதாகும். சமீபத்தில் தென் இந்திய ரயில்வே வேலை நிறுத்தத்திற்குப் பின், வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பற்பல தொழிற்சாலைகளை யமைத்தும், பலவிதத் தொழில்களில் பிறர் ஆதரவின் கீழ் அமர்ந்தும் கௌரவமாக வாழ்க்கை புரிந்து வருவது குறிப்பிடத் தக்கதே! தற்காலம் தொழிலாளர் முயற்சி வியக்கத்தக்கதாயும், பயன் விளைவிப்பதாயும் இருக்கின்றதெனினும் நாட்டிற்கு நலனும், மக்கள் உயர்வுக்கு அரணும் கோலுவதான புனிதத் தொழில்களில் ஈடுபட்டு சிறப்பிக்கவேண்டுமென்பதே அறிஞர் விருப்பம்! தொழிலாளர் வாழ்க!

———

# ஈஸ்வர சந்திர வித்யா சாகரர்.

## திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

### முன்னுரை

இந்திய மக்களிடையில் மலிந்துள்ள சமூகக் கொடுமைகளை வேரறக் களைந்து, ஜன சமூகத்தைப் பலப்படுத்தி, காலத்திற்கேற்ப நாமும் நமது நாடும் நன்மை யெய்த வேண்டுமென்ற தனிப் பெரும் நோக்கத்தோடு ஆசார சீர்திருத்த இயக்கத்திற்கு இந்தியாவில் விதை கோலிய பெரியார்களில் இராஜா இராம் மோகன ராயருக்குப் பிறகு ஈஸ்வர சந்திர வித்யா சாகரரையே குறிப்பிட வேண்டும். முன்னவர் நம் நாட்டில் உடன்கட்டை யேறும் வழக்கத்தால் நம் விதவைப் பெண்மக்கள் பட்ட பாட்டினைக் கண்டு மனமுருகி, அரும்பாடு பட்டு அரசாங்கத்தாரைக் கொண்டு சட்டமியற்றி உடன்கட்டை யேறும் வழக்கத்தை ஒருங்கே யொழித்து, நம் பெண்களுக்குப் புத்துயிரளித்துப் புண்ணியம் பெற்றார். பின்னவரோ வென்றால் அவ்வாறு உயிர் பெற்ற இளங் கைம் பெண்கள் (இரகசியத்தில் நிலை தவறி நடந்து இழிவும் இன்னலுமெய்திப் பல கொடுமைகளுக் காளாவதற்குக் காரணமான) கட்டாயக் கைமை (விதவை) வாழ்க்கையினின்றும் விடுதலை யுற்று, இயற்கை இன்ப வாழ்வினை மறு மணத்தின் மூலமாய்ப் பெற்று உலகில் இனிது வாழுமாறு துரைத்தனத்தாரைக் கொண்டு சட்டமியற்றிப் புகழ் பெற்றார். இதுகாலை இந்தியாவில் வடமொழி நூல்களில் வல்லவராகிய பண்டிதர்கள் பலரும் வைதீகப் பித்து மேற்கொண்டு நாட்டின் நன்மைக்கான எத்தகைய சமூகச் சீர்திருத்தங்களையும் அடியோடு எதிர்த்து வருவது யாவர்க்கும் கண்கூடு. இவ்வாறு இருக்கையில் ஆரம்ப நிலையில் இந் நாட்டில் வடமொழிச்

சாஸ்திர ஆராய்ச்சிகளில் பெயர்பெற்ற ஒரு மகா பண்டிதரான நமது வித்யா சாகரர், பெரிய சமூகப் புரட்சிக்குச் சமானமான விதவை மறுமணத்திற் கனுமதி யளித்தல் போன்ற ஆசார சீர்திருத்தத்தை ஏற்படுத்தக் காரணமாயிருந்தா ரென்பதைக் கருதுமிடத்து ஆச்சரியமுண்டாக வில்லையா? தேசாபிமானத்திலும், கல்வி கேள்விகளிலும், பரோபகாரத்திலும், ஜன ஊழியத்திலும் வித்யா சாகரரை மிஞ்சியவர்கள் இல்லை யென்றால் இழுக்காகாது. கற்ற உலகம் இன்று வித்யா சாகரரின் பெயரை வியந்து போற்றி வருகிறது. இந்தியாவினுள்ளே பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்து விளங்குவது ஒரு வங்காள மாகாணமே யென்றால் அதற்கு அடிப்படையாக வேலை செய்தவரும் நமது வித்யா சாகரரே யாவர்.

## பிறப்பும் படிப்பும்

இப் பெரியார் வங்காள மாகாணத்தில் ஹூக்ளி ஜில்லாவிலுள்ள வீரசிங்கமென்ற கிராமத்தில் 1820-ம் ஆண்டில் ஒரு ஏழைப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தையாகிய தாகர்தாஸ் பானர்ஜி அவர்கள் மாதம் பத்து ரூபாய்ச் சம்பளத்திற்கு ஒரு வர்த்தகரிடத்தில் வேலை பார்த்துவந்தார். இவரது பாட்டனாராகிய இராமஜேய பானர்ஜி என்பவர் சந்நியாசியாகித் தேச யாத்திரையிற் காலங் கடத்தினர். நம் சாகரருக்குச் சிறு வயதில் ஈஸ்வர சந்திரன் என்று பெயரிடப் பட்டது. இவர் தமது ஒன்பதாவது வயது வரையில் தங் கிராமத்திலிருந்த தெருப் பள்ளியில் தேச பாஷை (வங்காளி) கற்று வந்தார். 1829-ம் ஆண்டில் தங் கிராமத்தினின்றும் ஐந்தாறு காத தூரத்திலுள்ள கல்கத்தாவுக்குத் தமது தந்தையாருடன் கால் கடுக்க நடந்து சென்று, அந் நகரத்திலிருந்த ஒரு வடமொழிக் கல்லூரியில் வட மொழியைக் கற்சப் புகுந்தார். முதலாவதாண்டுப் பரீக்ஷையில் முதல்தரமாகத் தேறி மாதந்தோறும் ஐந்து ரூபாய் பெறும் உபகாரச் சம்பளம் கொடுக்கப் பெற்றார். தமது பதினைந்தாவது வயதில் மாதந்தோறும் பத்து ரூபாய் வீதம் உபகாரச் சம்பளம் பெறலாயினர். இவ்வாறு அக் கல்லூரியில் சமஸ்கிருத பாஷையில் வியாகரண சாஸ்திரம், தர்ம

சாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம், அலங்கார சாஸ்திரம், சோதிட சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் முதலியவற்றைத் திறம்படக் கற்றுப் பல பரிசுகள் பெற்றார். அக்காலத்தில் நடைபெற்றுவந்த பண்டித கோர்ட்டின் முனிசிபு பரீக்ஷையில் இவர் பதினேழாவது வயதில் தேறினர். அடுத்த ஆண்டில் இவருக்குத் துரைத்தனத்தார் நியாயாதிபதி உத்தியோகத்தைக் கொடுத்தனர். ஆயினும் தமது தந்தையாரின் விருப்பத்தின்படி, அவ் வேலையை விடுத்து மீண்டும் கலாசாலையிற் சேர்ந்து சமய சாஸ்திரங்களையும், சாங்கியம், வைசேஷிகம் முதலிய ஆறு தர்சன சாஸ்திரங்களையுங் கற்றுப் பண்டிதரானர். 1838-ம் ஆண்டில் வடமொழி வசனத்தில் சிறந்த கட்டுரையொன்று எழுதியதற்காக நூறு ரூபாயும், வடமொழியிற் சிறந்த செய்யுள்கள் எழுதியதற்காக ஐம்பது ரூபாயும் வெகுமதியடைந்தார். அடுத்த வருடத்தில் இவர் இந்திய தர்ம சாஸ்திரப் பரீக்ஷையிற் சிறப்பாகத் தேர்ச்சியடைந்து "வித்யா சாகரர்" (கல்விக் கடல்) என்ற பட்டத்தைப் பெற்றுக் கலாசாலையினின்றும் வெளியேறினர். இவ்வாறு அவர் வடமொழிக் கல்லூரியில் படித்து வருகையிலேயே ஆங்கில மொழியும் சிறுபான்மை கற்று வந்தார்.

## உத்தியோகமும் உழைப்பும்

ஈஸ்வர சந்திரர், முதலில் வடமொழிக் கல்லூரியில் வியாகரண சாஸ்திர போதகாசிரியராகச் சின்னளிருந்த பிறகு, 1840-ம் ஆண்டில் காளிகட்டத்தைச் சேர்ந்த ஆங்கிலப் பாடசாலையொன்றில் மாதம் 50 ரூபாய்ச் சம்பளத்திற்கு வடமொழிப் பண்டிதராக அமர்ந்தார். அங்கிருக்கையில் சுரேந்திரநாத பானர்ஜி யவர்களின் தந்தையாராகிய துர்க்காசரண பானர்ஜி யவர்களின் உதவியால் ஆங்கில மொழியில் போதிய அனுபவத்தை விருத்தி செய்து கொண்டார். 1850-ம் ஆண்டில் அவ் வேலையை விடுத்து அந் நகரத்திலேயே மற்றொரு வடமொழிப் பள்ளியில் மாதம் ஒன்றுக்கு 90 ரூபாய்ச் சம்பளத்திற்குத் தலைமை உபாத்தியாயராக வேலையை ஒப்புக்கொண்டார். இவ்வாறு படிப்படியாக உயர்ந்த உத்தியோ

கங்கள் பெற்று 1885-ம் ஆண்டில் ஹூக்ளி, நந்தியா, பர்ட்வான் முதலிய நான்கு ஜில்லாக்களுக்குப் பரீக்ஷாதிகாரியாகத் துரைத் தனத்தாரால் நியமிக்கப்பெற்று மாதந்தோறும் 500 ரூபாய் சம்பளம் பெறலாயினர். இவருக்குச் சிறு வயதினின்றும் கல்வியில் அதிக ஆர்வமுண்டாகையால் கிராமங்களில் ஆங்காங்கே பல பாடசாலைகளை ஏற்படுத்தலாயினர். பெண்கல்வியிலும் பேராதரவு கொண்டவராதலால் இவர் பரீக்ஷாதிகாரியாக விருந்த சொற்ப நாட்களுக் குள்ளாகவே ஹூக்ளி, பர்ட்வான் ஜில்லாக்களில் நாற்பது பெண் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன இக்காலத்தவருக்கு இது ஒரு சாமானியமான காரியமாகத் தோன்றலாம். "பெண்கள் படித்தல் கூடுமா? கூடாதா?" என்று விவாதம் நடந்துகொண்டிருந்த அக்காலத்தில் இரண்டு ஜில்லாக்களில் நாற்பது பெண் பள்ளிகளைக் காணுவதென்பது எவ்வளவு அரிய காரியமென்பதைக் கவனித்தல் வேண்டும். இவ்வாறு வேலை செய்து வருகையில் ஒரு நாள் அம்மாகாண வித்யா இலாகா அதிகாரியாகிய (டைரெக்டர்) 'யங்' என்ற துரை ஒருவர் தமது அதிகார கர்வத்தால் நமது வித்யா சாகரரை அலட்சியமாக விளித்து, இந்தியக் கல்லூரித் தலைமை ஆசிரியரிடத்திற்குச் சென்று ஒரு சங்கதியைக் கூறிவருமாறு கட்டளையிட்டார். அவ் வேலையைச் செய்வது தமது சுயமரியாதைக் கேற்றதல்ல வென்பதைக் கருதிய வித்யா சாகரர் அக் கட்டளைக் கிணங்க முடியாதென்று மறுத்தார். அதைக்கண்ட துரை மிகவுங் கோபித்துக் கட்டாயமாக அவ்வேலையைச் செய்தே தீரவேண்டு மென்று நிர்ப்பந்தித்தார். அதைக் கண்ட வித்யா சாகரர் உடனே தமது சட்டைப் பையினின்றும் ஒரு கடிதத்தை எடுத்துத் தமது வேலைக்கு இராஜிநாமாவை எழுதிக் கொடுத்து விட்டு "இப்பொழுதும் நான் என் விருப்பத்திற்கு மாறான வேலையைச் செய்தே தீரவேண்டுமோ?" என்று வினவினர். அப்பொழுது வங்காளத்தில் கவர்னராகவிருந்த ஹாலிடே துரையவர்கள் வித்யா சாகரரின் ஆப்த நண்பராகையால் நடந்த வரலாறுகளைக் கேள்வியுற்று, மீண்டும் அவ்வுத்தியோகத்தை அங்கீகரிக்கும்படி இவரை வேண்டிக்கொண்டார். எனினும் வித்யா சாகரர் தாம் வேண்டாமென்று

ஒதுக்கிய வேலையை மீண்டும் பெறுவதில்லை யென்று முற்றும் மறுத்துத் தமது சுய மரியாதையை நிலை நாட்டினார். இவரே பின்னால் சில வருடங்களில், ஆங்கிலேயரைப்போல் இந்தியரும் ஆங்கில மொழிப் பண்டிதராகிப் பெரிய கலாசாலைகளை நடத்த மாட்டுவார்களென்பதை நிரூபிக்க வெண்ணி மெட்ரபாலிடன் காலேஜ் என்ற பெயரால் ஒரு கலாசாலையை ஸ்தாபித்தார். அஃது வங்காள நாட்டில் சர்வ கலாசாலைகளில் முதன்மையான தென்று பெயர் பெற்றது.

## நூலாசிரியத் தன்மை

1846-ம் ஆண்டில் வடமொழிக் கல்லூரியில் பண்டிதரா யிருக்கையில் வித்யா சாகரர் "விட்டல பஞ்ச விம்சதி" என்ற வசன நூலொன்றை வங்காளியில் எழுதி வெளியிட்டார். இவர் எழுதிய வசன நடையின் தெளிவையும், விஷயப் பொலிவையும் கண்ட யாவரும் வங்காள மொழியிலும் இவ்வளவு அழகாகவும், ரசமாகவும் எழுதக்கூடு மென்பதை அப்பொழுதுதான் உணர்ந்தார்கள். மேலும் சமஸ்கிருத பாஷையைக் கற்பதற்குத் தக்க முறையான சாதனங்கள் அப்பொழுது இல்லாமையால் ஆசிரியர்களும், மாணவர்களும் அம்மொழிப் பயிற்சியில் அதிகக் கஷ்டமடைந்துகொண்டிருந்தனர். அக் குறையைத் தமது அனுபவத்தில் உணர்ந்த வித்யா சாகரர் வடமொழியைக் கற்பதற்குச் சுலபமான முறைகளைக் கண்டுபிடித்துச் சில நூல்களை எழுதி உதவினார். அது முதல், மாணவர்கள் வடமொழியைச் சுலபமாகக் கற்க ஆரம்பித்தனர். மேலே கூறியபடி தமது உத்தியோகத்தை விட்டு விலகிய பின்னர், வித்யா சாகரர் முன்னிலும் பன் மடங்காக நாட்டுக்கும், நாட்டு மொழிக்கும் உழைக்கத் தலைப்பட்டார். அதனால் அவரது அறிவாற்றல்கள் ஓங்கிப் பிரகாசித்தன. வங்காள மொழியில் வங்காள தேச சரித்திரம், வேதாள பஞ்ச விம்சதி, ஜீவிய சரித்திரங்கள், சரித்திராவளி, போதோதயம் முதலிய பல நூல்களை

எழுதி வெளியிட்டார். வடமொழியிலுள்ள சாகுந்தலம் முதலிய நாடகங்களையும் வங்காளியில் மொழி பெயர்த்தார். வங்காள மொழியில் இவரது நடை வெகு இனிமையாகவும், கம்பீரமாகவும், தெளிவாகவும், விஷய ஆராய்ச்சியோடும் விளங்கியபடியால் இவரது நூல்களனைத்தும் நாடெங்கும் பரவலாயின. இவர் தம் நூல்களின் வழியே நாட்டின் நன்மைக்கான பல புதிய கருத்துக்களை மக்களுக்கு ஊட்டினர். பெண் கல்வியில் இவருக்கு அபிமானம் அதிகமாகையால் அவர் தம் ஆயுள் முழுதும் பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்தார்.

அக்காலத்தில் பாடசாலையில் மாணவர்கள் படிக்கத் தகுந்த பாட புத்தகங்களில்லாத படியால் அவற்றை வெகு திறமையாக எழுதிப் பிரசுரித்தார். வங்காள மாகாணத்தில் எல்லாப் பாடசாலைகளிலும் வித்யா சாகரர் எழுதிய பாட புத்தகங்களே படிப்பிக்கப்பட்டன. அதனுல் இவருக்கு மாதந்தோறும் மூவாயிரம் முதல் ஐயாயிரம் ரூபாய் வரையில் வருவாய் ஏற்பட்டது. மாதம் ஐந்நூறு ரூபாய் கிடைத்துக் கொண்டிருந்த அரசாங்க உத்தியோகத்தை விட்டொழித்த பின்னர் நாட்டுக்கும், மொழிக்கும் அரிய ஊழியம் செய்யச் சந்தர்ப்பம் வாய்க்கப் பெற்றதோடு, சுதந்தர ஜீவனத்தால் மாதம் ஐயாயிரம் ரூபாய் ஊதியம் பெறும் பேறு பெற்ற இவரது ஊக்கத்தை என்னவென்று புகழ்வது? வங்காள நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இன்றைக்கும் வித்யா சாகரர் எழுதிய வடமொழிப் புத்தகங்களும் பாடப் புத்தகங்களாக இருந்து வருகின்றன. இற்றைக்குப் பலபேர் வங்காள மொழிப் புலவர்கள் முன் வந்து பல அரிய நூல்களை எழுதி வெளியிட்டு வருகிறுர்களாயினும் வித்யா சாகரரின் நூல்களுக் கிணையானவை தென்படவில்லை யென்று அறிஞர் கூறுகின்றனர். மொத்தத்தில் வங்காள மொழி வசன நூல்களுக்கு வித்யா சாகரரே வழிகாட்டி யெனக் கூறினுற் போதும். மேலும் இந்தியாவில் வங்காள மொழியே இன்று நாட்டு மொழிகள் பலவற்றுள்ளும் முதன்மை யடைந்திருக்கிறதற்கும் இவரது உழைப்பே காரணமாகும்.

## ஆசார சீர்திருத்த வேலை

சமூக சீர்திருத்தங்களுக்கு வித்யா சாகரர் செய்த வேலை அளவற்றதாகும். இந்தியாவில் பெண்களுக்கு மறுமணம் புரியும் வழக்கத்தை முதன் முதலில் இந்நாட்டில் நிலைநாட்டிய வீர புருஷர் இவரேயாகும். வித்யா சாகரர் வீரசிங்கமென்ற கிராமத்தில் தம் மில்லத்தில் ஒரு நாள் தந்தையாரோடு பேசிக் கொண்டிருக்கையில், அவருடைய அன்னையாராகிய பகவதி தேவியார் ஓர் அழகிய இளம் பெண் குழந்தையை அழைத்துக் கொண்டுவந்து அவரை விளித்து "குமாரனே! நீ பல சாஸ்திரங்களைப் படித்துப் பண்டிதனெனப் பட்டம் பெற்றிருக்கின்றாய்; ஆயினும் இத்தகைய இளங் கைம்பெண்கள் மீண்டும் மறுமணம் புரிந்துகொள்ள அனுமதிக்கும் சாஸ்திரம் ஒன்றையேனும் கண்டாயில்லையோ?" என்று அகங் குழைந்து கண்களில் நீர் ததும்பக் கூறினாராம். அவ்வாறு அன்னையார் கூறிய அம் மொழிகள் அவரது ஹிருதயத்தில் அம்புகளெனப் பாய்ந்து இரக்கமுண்டாக்கவே, அதுமுதல் சின்னாட்கள் வரையில் பல சாஸ்திரங்களை இதுபற்றி ஆராய்ந்து கடைசியில் 1854-ம் ஆண்டில் "விதவைகளின் மறுமணம், சாஸ்திரத்துக்குச் சம்மதமானதே" யென்று பல சாஸ்திர ஆதாரங்களைக் காட்டி ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இந்நூல் வெளியிட்டதுதான் தாமதம். உடனே நாடெங்கும் இதைப் பற்றிப் பெருங் கிளர்ச்சி தோன்றியது. வித்வான்களெனப் பெயர் தாங்கிய வைதீக பண்டிதர்கள் பலபேர் இவரது நூற்களைக் கண்டித்தும் இவரைத் தாக்கியும் பல நூல்களை எழுதி வெளியிட்டனர். ஆங்காங்கே சபைகள் கூட்டிக் கண்டனத் தீர்மானங்கள் புரிந்தனர். பல கூட்டங்களில் வித்யா சாகரரோடு சாஸ்திர வாதப் போர்களும் பல ஆற்றினர். அவ்விதம் செய்யப்பட்ட வைதீக பண்டிதர்களின் வாதங்கள் அனைத்திற்கும் தக்கவாறு பதில் கூறி மாதர் மறுமணம் நியாயமானதே யென்று இவர் நிலைநாட்டினார். பத்திரிகைகளிலும் இவ்வாதப் போர் பிரமாதமாக நடைபெற்றது. வித்யா சாகரரின் நியாய வாதங்களுக்குச் சரியான பதில் கூறாமல்

தோல்வியுற்ற வைதீகர்கள் பலர், தாமே சாஸ்திர வாதங்களில் வெற்றி யுற்றதாகப் பொய்ப் பிரசுரங்களை வெளியிட்டனர். இக் கிளர்ச்சிகளினால் இதுவரையில் அவரை மதித்து வந்தார் பலரும் அவமதித்து இகழத் தலைப்பட்டனர். அத்துடன் அது காறும் தம் பக்கத்தில் வேலை செய்தவர்களும் அநேகர் எதிர்ப் பக்கத்திற் போய்ச் சேர்ந்தனர். சாஸ்திர ஞானம் வாய்ந்த பண்டிதர்களும் இவ்வாறு எதிர்க் கட்சியைச் சேர்ந்தமையைக் கண்ட வித்யா சாகரர், தமது தந்தையாரிடத்தில் ' இதுகாறும் இந்துக்கள் சாஸ்திரங்களில் மிகுந்த நம்பிக்கை யுடையவர்களென் றெண்ணி யிருந்தேன்; ஆனால் அவர்கள் உண்மையில் சாஸ்திரங்களை அலட்சியஞ் செய்து, தங்கள் பழக்க வழக்கங்களையே பெரிதெனக் கருதி அவற்றிற்கு அடிமைகளா யிருக்கின்றன ரென்பதை இப்பொழுது தான் உணர்ந்தேன்" என்று கூறினர். அதற்கு அவரது தந்தையார் "நீ கைக்கொண்ட இந்த நியாயமான இயக்கத்தை விடாது நடத்திச் செல்." இதனால் எத்துணை இடுக்கண்கள் வரினும் உன் பெற்றோர்களாகிய நாங்கள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டு எங்களாலியன்ற வரையில் உனக்கு உதவி புரிந்து வருவோம்" என்று உற்சாக முண்டாக்கினாராம். ஆச்சரியம்! இத்தகைய உத்தமமான பெற்றோர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்த வித்யா சாகரரின் அதிர்ஷ்டத்தை என்னென்போம்! தாய் தந்தையரின் இத்தகைய பேருதவியைப் பெற்ற வித்யா சாகரர் மிகுந்த உற்சாக முடையவராய் மாதர் மறுமணத்தைப் பற்றிய சாஸ்திர ஆதாரங்களையும், அதன் நன்மைகளையும், அவசியத்தையும் விளக்கிப் பத்திரிகைகளுக்குப் பல கட்டுரைகள் எழுதி வந்ததோடு அவற்றைப் புத்தகமாகவும் வெளியிட்டார் இவரது வெளியீடுகள் நாட்டு மொழியில் எழுதப்பட்டதாலும், சாமானிய மக்களுக்கும் விளங்குமாறு தெளிவாக இருந்தமையாலும் பொது மக்கள் பலரும் இவரது நியாயமான கருத்துக்களை உணர்ந்து இவரை ஆதரிக்க முற்பட்டனர். மேலும் அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்திருந்த அறிவாளிகள் பலரும் இவருக்கு ஆதரவு காட்டினர். இவ்வாறு இவரது இயக்கம் நாட்டில் பலப்பட்டு வரவே இவர் அரசாங்கத்

தாரைக் கொண்டு இவ் விஷயத்திற்கு ஆதரவான சட்டம் இயற்ற விரும்பினர். எனவே இவரது இடைவிடா முயற்சியினால் மாதர் மறுமணம்-விதவா விவாகம்-புரிந்து கொண்டவர்களுக்குப் பிது ரார்ஜிதமான சொத்துக்களின் உரிமை நீங்காதென்ற பொருள்பட்ட சட்டமொன்றை 1856-ம் ஆண்டில் துரைத்தனத்தார் ஏற்படுத்தினர். இச் சட்டத்தை இயற்றவொண்ணமல் தடுப்பதற்கு வழக்கம்போல் வைதீகர்கள் பல முயற்சிகள் செய்து தோல்வியடைந்தனர்.

## மாதர் மறுமண நிகழ்ச்சி

மேற் கூறியவாறு தமது இயக்கத்திற்குச் சாதகமான சட்டத்தை இயற்றிய பின்னர், இடைவிடாது நாடெங்கும் தங் கருத்தைப் பிரச்சாரம் செய்தார். வாய்ப் பேச்சளவில் ஒரு பயனும் விளையாதென்பதைக் கருதிப் பல முயற்சிகள் செய்து 1865-ம் ஆண்டு டிசம்பர்மீ 7-ம் தேதியில் கல்கத்தாவில் தமது இல்லத்தில் முதலாவதாக விதவா விவாகமொன்றை நடத்தினர் உடனே பலபேர் அஃது அடாத காரியமென்று இவரைத் தூஷித்தனர். இவரது குலத்தார் இவரைக் குலத்திற்குப் புறம்பாக்கினர். அது வரையில் இவருக்குப் பெரிதும் துணை நின்ற பெரியோர்களும் பின்னடைந்தனர். ஆயினும் தாம் நியாயமானதென்றும், சாஸ்திர சம்மதமானதென்றும் கருதிய தம் மியக்கத்தினின்றும் சிறிதும் மனச் சோர்வடையாமல், மேன்மேலும் பல கைம்பெண் திருமணங்களை நடத்திவர முற்பட்டார். அவ்வித விவாகங்களைப் பிறருக்குச் செய்து வைப்பதோடு நில்லாது, தமது குடும்பத்திலும் தமது குமாரன் நாராயண சந்திர பானர்ஜிக்கு ஒரு கைம்பெண்ணை மணமுடித்து வைத்தார். 1865-ம் ஆண்டுக்குள் சுமார் 30 விதவா விவாகங்களுக்கு மேல் செய்வித்தார். அவை யனைத்தையும் தம் செலவிலேயே செய்துவந்த படியால் தம் பொருளனைத்தும் செலவழிந்துபோக நேரிட்டது. அதுவரையில் இக்காரியத்திற்குப் பொருளுதவி புரிவதாக வாக்குறுதி செய்திருந்த பலரும் பின்னடைந்தனர்; எனினும் இவர் சற்றும் சோர்வடையாமல் தங்

கருமமே கண்ணாக ஜன ஊழியம் செய்துவந்தார். பின்னால் இரண்டொருவர் பொருளுதவி புரிவதாகக் கூறியதையும் வேண்டாமென்று மறுத்துத் தமது சுயமரியாதையைக் காத்துக்கொண்டார். இடையில் சின்னாள் இவரது பண முடையால், கஷ்டப்பட்டாராயினும் இவர் பாடசாலைப் புத்தகங்களை எழுத ஆரம்பித்ததினின்றும் இவரது வருவாய் அதிகமடைந்து வரவே, தமது கடன்களையெல்லாம் தீர்த்துவிட்டதோடு, பல தருமங்களை இயற்றியும், தமது அந்திய காலத்தில் ஆண்டுக்குப் பதினாயிரம் ரூபாய் ஊதியம் வரத்தக்க சொத்துக்களைச் சம்பாதிக்கலானார்.

இவ்வாறு மாதர் மறுமண இயக்கத்தில் வெற்றி பெற்றதோடு அமையாது, ஆசார சீர்திருத்தத் துறையில் மற்றும் பல காரியங்களைச் செய்ய முற்பட்டார். நாட்டில் இவ் வியக்கத்திற்கான சபைகளையுங் கண்டார். சாதி வித்தியாசங்களையும், அது பற்றிய ஏற்றத் தாழ்ச்சிகளையுங் கண்டித்தார். தாழ்த்தப்பட்ட சமூகத்திய மக்களுக்கு ஆதரவு காட்டினார். வங்காள நாட்டுப் பிராமணர்களிடையில் ஒரு பிரிவாருக்கு அதிக கௌரவமிருந்து வந்தது. அவர்களை உயர்ந்த ஜாதியார்களெனப் பாராட்டப்பட்டனர். ஆதலால் அக் குலத்திலுதித்த ஆடவன் நாற்பது ஐம்பது பெண்களை விவாகம் செய்துகொள்ளுவான். அவர்களில் எந்த மனைவியினுடைய பெற்றோர் வரதக்ஷிணை அதிகமாகக் கொடுக்கிறார்களோ அம் மனைவியை ஆதரித்து, மற்ற மனைவியைப் பல கொடுமைகளுக்காளாக்கி வருவது வழக்கம். அம் மிருக வாழ்க்கையின் கொடுமையைக்கண்டு வருந்திய வித்யா சாகரர், வாயற்ற அபலைகளின் சார்பாகப் பல சபைகளைக் கூட்டுவித்து, அவ் வழக்கத்தை அடியோடு தடுக்க முயற்சித்தார். அதைப்பற்றி ஒரு சட்டத்தை ஏற்படுத்தவும் கருதி வேலை செய்தார். ஆயினும் அவரது கருத்து முற்றப் பெறவில்லை. எனினும் இவர் செய்த கிளர்ச்சியால் நாட்டில் அக் கொடிய வழக்கம் பொது மக்களின் வெறுப்புக் கிலக்காகிக் குறைந்துகொண்டே வரத் தலைப்பட்டது. பெண்களுக்கு அதிபாலியத்தில் விவாகம் செய்விப்பது கூடாதென்பது அவரது கருத்து. அதற் கேற்பவே அவரது குமாரத்திகளுக்கு வயது

வந்த பின்னரே விவாகம் செய்வித்தார். இதுகாலை (1929-ல்) இந்தியா சட்ட சபையில் நிறைவேறிய சாரதா பாலிய விவாகத் தடை மசோதாவைக் கண்டு இஃது சாஸ்திர விரோதமானதென்று கூறிக் கிளர்ச்சி செய்துவரும் பண்டிதர்களென்போர் வித்யா சாகரரின் செய்கையைக் கவனித்து உணர்வு பெறுவார்களா?

## பரோபகாரச் செயல்கள்

வித்யா சாகரர் கருணை நிரம்பிய உள்ளத்தினர். பிறர் படுங் கஷ்டத்தைக் கண்டு சகியாதவர். புகழுக்காகவன்றி புண்ணியத்திற்கெனவே தான தருமங்கள் செய்தவர். அவர் வெளியுலகம் அறியாத நிலையில் செய்த மறைவான தரும காரியங்கள் பல. அவர் ஒரு பணக்காரரா யிராமற்போன போதிலும் அவரது சக்திக்கு மேலாகவே பல பரோபகார காரியங்கள் புரிந்துள்ளார். மதுசூதனதத் என்ற வங்காளக் கவிஞரொருவர் கடன்வாய்ப்பட்டுச் சிறைக்கூடம் நல்க விருந்த காலத்தில், நமது வித்யா சாகரர், அவரது கடன்களைத் தாம் கொடுத்துத் தீர்த்து அவரை விடுவித்தார். தங்கள் நிலை தவறிய பல ஏழைக் குடும்பங்களுக்குப் போதிய பொருளுதவி புரிந்து அவர்களைக் காத்துவந்தார். தமது சொந்தக் கிராமத்தில் ஏழைக் குழந்தைகள் இலவசமாகக் கல்வி கற்குமாறு, தமது அன்னையாரின் பெயரால் ஒரு தரும பாடசாலை ஏற்படுத்தினர். அக் கிராமத்திற் பொதுஜன நன்மைக்கென ஒரு தரும வைத்தியசாலையை ஸ்தாபித்து, அதன் செலவுகளனைத்தையும் தாமே ஏற்றுக்கொண்டார். இந்தியன் அசோஸியேஷன் என்ற சங்கத்தார் கட்டிய மாளிகைக்கு இவர் ஆயிரம் ரூபாய் கொடுத்துதவினர். தமது சொந்தக் கிராமத்திற்குப் போகும்பொழுதெல்லாம் 500 ரூபாய்க்குத் துணிகளை வாங்கிக் கொண்டுசென்று ஏழைகளுக்கு இலவசமாக வழங்கி வருவார். பஞ்ச காலங்களில் நாட்டு ஏழை மக்களுக்குத் தருமச் சோறு போடுவித்தும், கொள்ளை நோய்கள் பரவிய இடங்களுக்கு மருந்து முதலியன கொண்டு சென்று கொடுத்துதவியும் அவர் செய்த அறச் செயல்கள் பல.

ஜனத் தலைவர்களென முன் வருபவர்களில் பெரும்பாலாரிடத்தில் பிறர் பொருளை நஞ்செனக் கருதும் தூய உள்ளத்தைக் காண்பதரிது. ஆனால் நமது வித்யா சாகரரின் உள்ளம் அத்தகைய தூய்மையுடைய தென்பதை விளக்க ஓர் உதாரணம் கொடுக்கின்றோம். வித்யா சாகரர் ஒருமுறை தமது பொருளைக் கணக்கிட்டுப் பார்க்கையில் தமது கணக்குகளின்படி தம்மிடம் இருக்கவேண்டிய அளவுக்கு அதிகமாகத் தொகை இருப்பதாகக் கண்டார். அதைக் கண்ட வித்யா சாகரர், முன்னால் தாம் துரைத்தனத்தாரின் பரீக்ஷாதிகாரியாக வேலை பார்த்தபொழுது துரைத்தனத்தாரின் தொகை சிறுபான்மை தமது பொருளுடன் தவறுதலாகச் சேர்ந்திருக்கலா மென்று சந்தேகித்து, உடனே துரைத்தனத்தாரின் அக்கௌண்டெண்ட் ஜனரல் அவர்களுக்கு எழுதி அத்தொகையை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். அவ் வுத்தியோகஸ்தர் அத்தொகை துரைத்தனத்தாருக்குச் சேரவேண்டிய கணக்கில்லையென்று எவ்வளவு கூறி மறுத்தும், வித்யா சாகரர் ஒப்புக்கொள்ளாமல், அத் தொகை துரைத்தனத்தாருக்குச் சேர்ப்பித்துத் தம் மனச் சாட்சிக்குச் சமாதானம் செய்துகொண்டார். அந்தோ! அவரது பரிசுத்தமான உள்ளத்தின் நேர்மைதா னென்னே! இன்று நாட்டில் பொதுஸ்தாபனங்கள் பலவற்றில் தலைமை வகித்து, அந்த ஸ்தாபனங்களின் பொதுப் பணத்தைத் தம்முடையதென்று கருதி, தமக்கு வேண்டியவர்களுக்கு வழங்கியும், பொது நலத்தின் பெயரால் தாமும் தின்றும் எப்பமிட்டு வரும் தலைவர்கள் சிலருக்கு வித்யா சாகரரின் செய்கை அறிவுறுத்துவதாகு மன்றோ?

## முடிவுரை

ஈஸ்வர சந்திர வித்யா சாகரரின் இத்தகைய அரிய ஜன ஊழியத்தைப் பாராட்டிய துரைத்தனத்தார், விக்டோரியா மகாராணியார் இந்நாட்டுச் சக்கிரவர்த்தினிப் பட்டத்தை வகித்த 1877-ம் ஆண்டில் இவருக்கு ஒரு கௌரவ பத்திரிகையை அளித்ததோடு, 1890-ம் ஆண்டில் ஸி. ஐ. இ. என்ற பட்டத்தையுங் கொடுத்து மரியாதை செய்தனர். இவ்வாறு இவர் கல்வியிலும், செல்வத்தி

600 008. 162212

# தொழிற்கல்வி.

திரு. A. நடேசபிள்ளை அவர்கள்.

நமது இந்தியா தேசத்தில் பிரிட்டிஷ் இராஜாங்கத்துக்குட்பட்ட பட்டணங்கள் 1,561. கிராமங்கள் 5,00,088; சுதேச மன்னர்களுக்குட்பட்ட பட்டணங்கள் 755. கிராமங்கள் 1,87,893. இந்தப் பட்டணங்கள், கிராமங்கள் இவைகளிலிருப்பவர்கள் சென்ற 1921-ம் வருஷத்து சென்ஸஸ் கணக்கின்படி 31,89,42,480.

ஜனங்களின் மொத்தத் தொகை பதினாயிரமாயிருந்தால் இவர்களில் பாதிக்குக் கீழ்ப்பட்டவர்கள் அதாவது 4,633 பேர்தான் வேலை செய்பவர்கள்; மற்றவர்கள் பிறர் வேலைசெய்து சம்பாதிப்பதைக் கொண்டு சாப்பிடுகிறவர்களாயிருக்கிறார்கள்; உயர்குலமென்று புகழ்ந்து கொண்டிருக்கும் ஸ்திரீகள் அனேகமாயெல்லோரும் வேலை செய்வதில்லை, ஜர்மனி தேசத்தவர்களைப்போல்

---

லும், செல்வாக்கிலும் சிறப்புற்றுப் பெருமை யெய்திவந்த போதிலும் தமது உடையிலும், நடையிலும் சாமானியராகவே காணப்பட்டார். மேலும் சிறிதேனும் கர்வமில்லாதவராய் ஏழைகளை நேசித்து எளிய வாழ்க்கையை நடத்தி வந்தார். இத்தகைய மாபெரும் பண்டிதர்-அபலைகளின் இரட்சகர்-பரோபகார சீலர்-தேசாபிமானப் பெருந்தகையாளர் சின்னாள் தேக அசௌக்கிய முற்றிருந்து 1891-ம் ஆண்டு ஜூலை மீ 29-ம் தேதி கல்கத்தா நகரில் இப்பூதவுடம்பை விட்டுப் புகழுடம்பைத் தாங்கினார். இன்றைய நிலையில் நம் பாரத மாதா மற்றும் பல வித்யா சாகரர்களைப் பெறவேண்டி அருந்தவங் கிடக்கின்றாளென்பதில் ஐயமுண்டோ?

———.

பெண் மக்களும் வேலை செய்தாலன்றி இந்தியர்கள் நன்னிலைமைக்கு வர மார்க்கமில்லை. இந்தியா வாசிகள் நன்னிலைமைக்கு வருவதற்கு முக்கிய ஆதாரமாயுள்ளது தொழிற் கல்விதான் என்பது எனது நம்பிக்கை.

ஜர்மனி தேசத்துப் பள்ளிக்கூடங்களில் 100-க்கு 75-ம், அமெரிக்கா யுனைடெட் ஸ்டேட்சில் 100-க்கு 60-ம், பிரான்ஸ் தேசத்தில் 100-க்கு 40-ம், ஆங்கில நாட்டில் 100-க்கு 25-ம் தொழிற் கல்விச் சாலைகளாயிருக்கின்றன. நம்மிந்தியாவில் 100-க்கு ஒன்றுகூட இல்லை.

எந்தத் தேசத்தில் தொழிற் கல்விச்சாலைகள் மிகுதியா யிருக்கின்றனவோ அத் தேசத்தவர்களே நாகரீகத்தில் மிகச் சிறந்தவர்களாவார்கள்; அவர்களே சகல செல்வங்களையும் பெற்று சுக ஜீவனஞ் செய்வார்கள்; அவர்களே யாவராலும் புகழப்படுவார்கள். அடிமைத் தொழில் செய்யாமல் அவமானம் படாமல் கௌரவமாகவும், க்ஷேமமாகவும் ஜீவனஞ் செய்யப் பிரியப்படுகிறவர்கள் கிருஷி, கைத்தொழில், வர்த்தகம் இவைகளையே தங்களுக்கு ஜீவன மார்க்கமாகக் கொள்ளவேண்டும்.

சென்ற சென்ஸஸ் கணக்கில் 100-க்கு 70 பேர்கள் கிருஷித் தொழிலால் ஜீவனஞ் செய்கிறவர்களென்றும், 100-க்கு 10 பேர்கள் மாமூல் வழக்கப்படி கைத்தொழில் செய்பவர்களென்றும், 100-க்கு ஒருவர் நவீன நாகரீகத்தின்படி கைத்தொழில் செய்பவரென்றும் கணக்கெடுத்திருக்கிறார்கள். நம் தேசத்தவர்களில் பெரும்பாலர் கிருஷித் தொழிலை ஜீவனமார்க்கமாகக் கொண்டிருப்பதால், அத் தொழிலை நம்மவர்கள் நவீன நாகரீகப்படி செய்யும்படியான முறைகள் போதிக்கவேண்டும். நம்மிந்தியாவில் பயிர் செய்யப்படும் நெல், ஏக்கர் 1-க்கு சராசரி 890 பவுண்டும், அமெரிக்கா தேசத்தில் 1,400 பவுண்டும், ஜப்பான் தேசத்தில் 2 100 பவுண்டும், எகிப்து தேசத்தில் 3,300 பவுண்டும்; ஸ்பெயின் தேசத்தில் 5,700 பவுண்டும் உற்பத்தி யாவதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். இவ்விந்தியா தேசத்துப் பருத்தியால் ஏக்கர் 1-க்கு பஞ்சு 100 பவுண்டும், யுனைடெட் ஸ்டேட்சில் 200 பவுண்டும், எகிப்து தேசத்தில் 450 பவுண்டும் கிடைப்பதாகக்

கணக்கெடுத்திருக்கிறார்கள். நல்ல எருப்போட்டு தகுந்தபடி செய்தால் ஏக்கர் 1-க்கு 1,000 பவுண்டு எடுக்கலாமென ரஸாயன சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

நமது இந்தியா நீர்வளம், நிலவளம், மலை வளங்களிற் மிகச் சிறந்ததாயிருந்தும மேமேலே சொன்னபடி குறைந்த வரும்படி கிடைத்து வருவதற்குக் காரணமென்ன? நமது அறிவின்மையே யன்றி வேறல்ல. நம்மவர்களுக்குக் கிருஷித் தொழிற் கல்வி கற்பிக்கப் படாமல் அடிமைத் தொழிற் கல்வி அபிவிருத்தியடைந்து வருவதால் வறுமையால் வருந்துகிறோம்.

இத் தொழிற் கல்வி சாஸ்திரங்கள் ஆங்கிலம் முதலிய அன்னிய பாஷைகளி லிருக்கின்றனவே யன்றி, நமது தாய்ப் பாஷையாகிய தமிழில் இல்லை. ஆங்கில முதலிய அன்னிய பாஷைகளிலுள்ள அச் சாஸ்திரங்களைக் கற்கவேண்டுமானால், பத்து வருடங்களாவது அந்தப் பாஷையைக் கற்றுத் தேர்ச்சியடைந்து, அதன் பிறகு அச் சாஸ்திரக் கல்வி கற்கவேண்டும். இதற்குள் வயது இருபதுக்கு மேலாய்விடும்; விசேஷ திரவியங்களும் செலவாகும. இந்தியர்களில் பெரும்பாலார் மிகுந்த ஏழைகளாகையால் அப் பாஷைகளில் அச் சாஸ்திரக் கல்வி கற்க முடியாது.

ஆங்கிலங் கற்பவர்கள் அனேகமாயெல்லோரும், கவர்ன்மெண்டிலாவது, கம்பெனிகளிலாவது உத்தியோகங்கள் பெறவேண்டும் அல்லது உபாத்தியாயர், வக்கீல் முதலிய உத்தியோகங்கள் பெற வேண்டும் என்று ஆங்கிலம் கற்கிறார்களேயன்றி வேறு வழிகளில் திரவியம் சம்பாதிக்க அல்ல; வேறு வழி துறைகளும் இவர்களுக்குத் தெரியாது. வருஷம் 1-க்கு எத்தனை பேர் இறக்கிறார்கள்? எத்தனை பேர் பென்ஷன் வாங்குகிறார்கள்? வருஷம் 1-க்கு ஆங்கிலத்தில் பரீட்சையில் தேறுகிறவர்கள் எத்தனை பேர்கள்? இவர்கள் அனைவருக்கும் எந்த விதத்தில் உத்தியோகங்கள் கிடைக்கும்? என்பதை இவர்கள் ஒரு சிறிதளவேனும் யோசிப்பதில்லை.

பி. ஏ. பரீட்சை கொடுத்தவர்களில் அனேகருக்கு மாதம் 1-க்கு ரூ 30 கூடக் கிடைக்காமல் கஷ்டப்படுவதைக் காண்கிறோம். ஆகையால் அடிமைத் தொழிற்கல்வி, சிற்சிலருக்கு மட்டும் பிரயோஜனப் படுமே யன்றி மற்றவர்களுக்குப் பிரயோஜனப்படாமல்


அவர்கள் தங்கள் குலத் தொழிலும் செய்யத் தெரியாமல், வேறு வேலையுங் கிடைக்காமல் மிகுந்த கஷ்ட ஜீவனஞ் செய்வதைக் காண்கிறோம்.

ஆகையால் தொழிற்கல்வியை நமது தாய்ப் பாஷையாகிய தமிழிலேயே நான்காவது ஸ்டாண்டர்டு வகுப்பு முதல் ஸ்கூல் பைனல் கிளாஸ் வகுப்பு வரையில் கற்பிக்க வேண்டும். வாரம் 1-க்கு 8 மணி, 10 மணி நேரம் கற்பித்தால் போதுமானது.

ஐரோப்பியர், அமெரிக்கர் இவர்களால் எழுதப்பட்டிருக்கும் கிருஷி, கைத்தொழில் சாஸ்திரங்களைத் தருவித்து அவைகளை இலேசான தமிழ் நடையில் மொழிபெயர்க்க வேண்டும். மாணாக்கர்கள் அவரவர்களின் புத்தி நுட்பங்களுக்குத் தக்கபடி வாசிக்கத் தக்கதாகப் பற்பல வகைப் புத்தகங்கள் அச்சிட்டு அவைகளைத் தமிழ் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் படிப்பாக்க வேண்டும்.

இவ்விதக் கல்வி கற்பிக்கப்படும் பட்சத்தில் நம் தேசத்தவர்கள் கிருஷி, கைத்தொழில், வர்த்தகம் இவைகளை நவீன நாகரீகப்படி செய்யும் முறைகளை அதி சீக்கிரத்தில் தெரிந்துகொண்டு தற்போது விளையும் மகசூலைப் பார்க்கிலும் பல மடங்கு ஜாஸ்தியான மகசூல் உற்பத்தி செய்வார்கள். அன்னிய நாட்டினின்றும் நம் தேசத்தில் இறக்குமதி செய்யப்படும் கைத்தொழிற் சாமான்கள் அனேகமாயெல்லாவற்றையும் நம்மவர்களே செய்து விடுவார்கள். அன்னிய நாட்டு விளைபொருள்கள், கைத்தொழிற் சாமான்கள் நம் தேசத்தில் இறக்குமதி செய்ய இடமிராது. நம் தேச விளை பொருள்களும், கைத்தொழிற் சாமான்களும் அன்னிய நாடுகளுக்கு அபரிமிதமாக அனுப்பப்படலாம். நம் தேசத்துக்கு அஷ்ட லெட்சுமிகளும் திரும்பி வந்துவிடுவார்கள். நம் தேசத்தைப் பிடித்திருக்கும் அக்காள் மூதேவியை அடியோடு அதி சீக்கிரத்தில் ஒழித்துவிடலாம். நம் தேசத்தவர்கள் குபேர சம்பத்துடையவர்களாகிச் சுக ஜீவனஞ் செய்வார்கள்.

இத் தொழிற்கல்வி தமிழ்நாட்டவர்களுக்குப் புத்தகங்கள் பத்திரிகைகள் இவைகள் மூலமாகக் கற்பிப்பதற்காகவும், தாலூக்காவுக்கு ஒன்று அல்லது பல விடங்களில் கிருஷிச் சோதனைச் சாலைகள் ஏற்படுத்தி நவீன நாகரீகப்படி அத் தொழில்களைச் செய்து பொது ஜனங்களுக்குக் காண்பித்து அவர்களுக்கு அத் தொழில்களைக் கற்பிக்குமாறு தலைவர்களும் தேசாபிமானிகளும் உடனே முன் வர வேண்டுகிறேன்.



இந்திய நெப்போலியன்

ஸாவர்க்கார்

# ஸ்ரீமான்
# ஸாவர்க்கார் அவர்களின் கடிதம். *

வைகாசி மாதம் வஸந்த இராஜனுடைய ஆட்சி பூமியின்கண் கோலாகலமாக நடந்துகொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் பூக்களின் கோஷம். தூய நீல வானிடை சந்திரன் சுகுமாரனுப் மந்தஹாஸம் செய்தான். அவனிடமிருந்து பெருகிய அழகு வெள்ளத்தின் அலைகள் மோத, பூமி மிதந்து கொண்டிருந்தது. நம்முடைய வீட்டின் முற்றத்தில் பாலு ஒரு ஜாதிச் செடியை நட்டு அன்போடு நாடோறும் நீர் வார்த்து வளர்த்து வந்தான். இந்த விழாவில் அதுவும் தன் திரையை ஏந்தி நின்றது. கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த அதன் மலர்கள் நானு பக்கங்களிலும் நறுமணங் கமழ வீசின.

---

* இந்திய நெப்போலியன் என்று போற்றப் பெற்ற ஸ்ரீமாந் விநாயகராவ் தாமோதர ஸாவர்க்கார் அரசாங்கத்தாருக்கு விரோதமாக நடந்தார் என்று அவர் மீது குற்றம் சாட்டியதால் தனக்குக் கொடிய மரண தண்டனை கிடைக்குமோவென எதிர் பார்த்துக் கொண்டிருந்த பொழுது தனது தமையனுர் ஸ்ரீமாந் கணேசபந்த ஸாவர்க்காரின் மனைவியாரான தனது அருமை அண்ணி ஸ்ரீமதி யசோதா பாய் அவர்களுக்கு இங்கிலாந்திலிருந்து பாக்களால் ஆக்கிய கடிதமொன்று அனுப்பினுர். ஸ்ரீமாந் ஸாவர்க்கார் தனது உலக வாழ்வு சீக்கிரத்தில் முடிந்து போகுமெனச் சந்தேகித்து தேச பக்தி கொழுந்து விட்டெரியும் படியாய் உருக்கத்துடன் எழுதியிருப்பது ஒவ்வொரு இந்தியரும் படிக்கத்தக்கது. அவர் அண்ணியாருக்கு வாஹினி என்ற மகாராஷ்டிரச் செல்வப் பெயரும் உண்டு.

"பாரதி"யின் வாசகர்கள் படித்தானந்திக்கும் பொருட்டு இக் கடிதம் மறைந்து மறந்து போன "பால பாரதி"ப் பத்திரிகையிலிருந்து எடுத்து இங்கு வெளியிட்டிருக்கிறோம்.

ஆசிரியர், "பாரதி."

கோடை விடுமுறையும் அப்பொழுது சேர்ந்து கொண்டது. ஆருயிர் நண்பர்கள் அனைவரும் நமது வீட்டில் வந்து குழுமி இருந்தனர்—மாலையில் வீடு அடையும் பசுக்களைப் போல. இன்ப வெள்ளம் கரை புரண்டோடியது. இளமை புதிதாய்ப் பூத்த அத் தருண மண்டலம் மகா காந்தியுடன் விளங்கிற்று. அதைச் சுற்றிலும் ஓர் பிரபா சக்கரம், உன்னத ஆதர்சங்கள் தூய்மை வீரம் என்ற கதிர்களை வீசிச் சுழன்றது. இதற்கு மாலை சூட விழைபவளாய்ப் புகழணங்கு கையில் ஆரமுடன் பக்கத்தே நின்றாள்.

இந்த இள மலர்களில் "அன்பெனும் தேன் ஊறித் ததும்பி"ப் பொங்கிற்று. இப் பைம் மலர்கள் வீசிய மணம், விழுமிய பேறுகளாகவும் உன்னத லட்சியங்களாகவும் ஆகாய மெங்கும் கமழ்ந்தது. அங்கே குழைந்து, துவண்டு இழையும் இளங் கொடிகள், திண்ணென வானளாவி நின்ற குல மரங்களைப் பற்றி ஏறித் தழைத்து நின்றன. இவ் வினிய காட்சியைக் கண்டு மகிழ்ந்த ஊர் ஜனங்கள் இதற்குத் 'தர்மசாலை' என்று பேர் வைத்தனர்.

அம்மையே! சமையல் செய்வதில் உனக்கு நிகர் நீயேதான்: வேறு யாருமிலர்: நீ பரிமாறவும் புகுந்துவிட்டால், உண்டி அமுதம் பொழிவதாகும். பட்டப்பகற் போலே சந்திரன் நிலா விரித்தான். கீழே நகை பூத்த முகத்துடன் எங்கட்கு நீ அமுதாட்டி நின்றாய். என்னே இன்பம்! என்னே ஆனந்தம்! முற்றத்திலே அமர்ந்த நண்பர்களான நாங்கள் இதில் மெய் மறந்து போவோம். அல்லது இடை இடையே பல விஷயங்களைப் பற்றி உக்கிரமாக வாதிப்போம்.

ஸ்ரீ ராமச்சந்திரனுடைய வனவாச வரலாறு சுவை சொட்டும். வெளியே இத்தாலியா என்ற ஓர் நாடு தன் பகை தீர்த்து விடுதலை பெற்று எழுந்த சரிதம் கேட்க வீரம் பொங்கும். தானாஜியின் போர்த் திறம், பாஜி, பாவா, நானா இவர்கள் காட்டிய அசகாய சூரத்தனம், சித்தூரின் புல்லரிக்கும் விருத்தாந்தம், இவைகளைக் கேட்டு நெஞ்சு விம்முவோம்.

நமது அன்னை நமது ஆசைக்கும் அன்புக்கும் உறைவிடமான நம் பெருந்தாய் இன்று இருக்கும் நிலை என்னே! அன்னாள் நிலையி னிழிந்து அடிமை வாய்ப்பட்டு இடுப்பொடிந்து எலும்பெல்லாம் நொறுங்கி நைந்து நைந்து தேய்ந்து மாய்கிறாள் என்று நினைக்கக் கண்ணீர் மல்கும். இதற்குக் காரணங்களை ஆராயும்பொழுது சுவாஸம் பந்தமாகிவிடும். துன்பப்பட்டுத் துன்பப்பட்டு மடியும் இவளை விடுவிக்கத் தக்க உபாயங்கள் யாவை என்று விசாரிக்க உள்ளம் கொதித்தெழும். முடிவில் அன்னையை விடுவித்தே தீரு வோம் என்று இள இரத்தம் துடிக்கும் நாங்கள் அனைவரும் பிர திக்ஞை செய்தோம்.

மனோக்கியமான அந்தக் காலம், அன்பு கசிய இன்பம் திளைக் கும் அந்தச் சங்கம், அந்த அமுத மயமான நிலவு, ரமணீயமான அந்த இரவு, புதுமை சேர்ந்த அந்தக் கதைகள் இவையெல்லாம் சற்று நினைத்துப் பாருங்கள். தெய்வீகம் பொலியும் அவ்வுண் மைத் தாயின் விடுதலையின் பொருட்டுச் செய்த அந்த உக்கிர மான சபதம், நிலைபெறுத அந்த உறுதி, இதையும் சிந்தியுங்கள்.

அண்ணியே! அன்று நடந்த வெல்லாம் நினைவில் இருக் கிறதோ? ஆர்வம் மிகுந்த அவ் அன்பர்கள் ஒருவர்க்கொருவர் செய்து கொடுத்த ஆணைகள், அனைவரும் அவனுடைய கொடியை எந்திப் போர்க்கோலம் கொண்டு நின்றது, 'பாஜி பிரபு போல நிற்போம்' என்று இளைஞர் செய்த கோஷம், 'சித்தூர்ச் சிறுமிகள் நாங்கள்!' என்ற பெண்களின் பெருமிதம்—இதெல்லாம் மறவாமல் இருக்கிறீர்களோ?

அந்த விரதத்தை நாங்கள் குருட்டுத்தனமாக எடுத்துக் கொண்டுவிட்டோமோ? ஒருக்காலும் இல்லை. இதிகாசத்தின் ஸம் பூரண பிரகாசத்தில் நின்று, கண்ணைத் திறந்து கொண்டுதான் எடுத்தோம். சாதக பாதகங்களைத் தீர விசாரித்து "மானுட"த்தின் இயல்பையும் அறனையும் நன்கு தெளிந்த பிறகே அவ்விரதம் பூண்டோம். உயிரில் ஆசை வைத்தவன் அதனை இழப்பான்

என்ற உண்மையினைத் தேர்ந்தே இத் தெய்வீக தாகம் கொண்டோம். அதற்கே எங்கள் உயிரை அர்ப்பணம் செய்தோம்.

தோழர்களுடனே அன்று நாங்கள் செய்த பிரதிக்ஞையை, எடுத்த விரதத்தை, நினைவுறுத்திக் கொள்ளுங்கள். இன்று நிலைமை எப்படி இருக்கிறது என்று அடுத்து ஒப்பு நோக்குங்கள். தகைந்து இரு நாலாண்டுகள் இன்னும் சென்றில. அதற்குள் காரியசித்தி இவ்வளவாகி இருக்கிறது. உண்மையில் உளம் பூரிக்கவில்லையா?

குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கும் நம் தாய்நாடு முழுவதும் கனன்று சிங்கநாதத்துடன் சீறி எழுந்துவிட்டது. அதன் மேல் இருந்த பிச்சைக் கோலம் கிழிந்து தூள் தூளாய்ப் பறந்து போயிற்று. வீர வடிவந் தாங்கிக் கையில் வாள் கொண்டு எம் அன்னை இன்று தோன்றிவிட்டாள். ஸ்ரீ ராமச்சந்திரன் தன் கொடியை உயர்த்திவிட்டான். அதைத் தாங்கி நிற்க அடியார்கள் ஆயிரம் ஆயிரமாக முன் வந்து அணி அணியாய் அமைந்து நிற்கின்றனர். ஓமகுண்டத்திலே அக்கினி ஜாஜ்வல்யமாக எரிகின்றது.

இவ் வேள்வியில் சித்திபெற்றே தீருவது என்று உக்கிரமாகத் தீட்சை செய்துகொண்ட ஏ! பக்த ஜனங்காள்! உங்கள் உறுதியைக் காட்டவேண்டிய சோதனைக்காலம் வந்துவிட்டது. உலகனைத்தும் மங்களம் பெறவேண்டி இதோ யக்ஞம் ஆரம்பமாகிவிட்டது. கொழுந்து விட்டுக் கடும் பசியுடன் எரிகின்றது தீ. அவி பெய்தாக வேண்டும். அதற்குச் சித்தமாயுள்ளவர்கள் முன் வரலாம்.

இவ்வாறு ஸ்ரீ ரகூத்தமன் அழைத்து நின்றான். உன் தேவ காரியத்துக்கு, பிரபு! எங்கள் குடும்பம் தயாராக ஒதுங்கி நிற்கிறது நாக்கை நீட்டி கர்ஜித்தெழும் இவ் வெரியில் எங்களை முதலில் ஆகுதி செய். இந்தக் கௌரவம் எங்களுக்கே உரியதாகட்டும் என்று நாம் முதலில் முன் வந்தோம்.

உடல் பெற்றதன் பயன் அறன் ஆற்றுவதற்கே யாகும். எனவே அறவினைக்கே அதனை இரை யாக்குவோம். வேறு, மனைவி மக்கள் இன்பத்தைக் கனவிலும் கருதோம். எத்துணைத் துன்பம் வந்தாலும், என்ன இடர்ப் பட்டு வருந்தினும் அஞ்சி உறுதி யிழந்துவிட மாட்டோம். பற்றற்று வினை முடிக்கும் யோகநெறி பற்றி, வாழாது வாழ்ந்து வருவோம் எனப் புகன்றோம்.

அன்பர்களுடனே அன்று நாங்கள் செய்த பிரதிச்ஞை என்னு யிற்று? வெறும் விளையாட்டாக முடிந்ததோ? இல்லை; இல்லை. ஸத்தியமாக அது இன்று நிறைவேறியதை நீயே உன் கண்ணாரக் கண்டுகொள்ளலாம். நமது அன்பிற்கு உகந்த அன்னை விடுதலை பெறவேண்டி இதோ வேள்வி துவக்கப்பட்டு விட்டது. தீயும் வளர்த்தாயிற்று. அது சுடர் விட்டுச் சீறி எழுகின்றது. அதில் நாம் நம்முடைய தன்னலம் முழுவதையும் போட்டு எரித்துச் சாம்பராக்கி விட்டோம். நாம் சொன்ன சொல் காப்பாற்றப் பட்டது. கிருதார்த்தரானோம்.

ஹே மாதுரு பூமி! எம் உள்ளத்தை உனக்குக் கோயில் செய் தோம். எமது பேச்சு, எமது நாவன்மை முழுவதையும் உனக்கே சமர்ப்பணம் செய்தோம். நவ நவமாய் என் இருதயத்தில் ஸ்புரிக் கும் கன்னல் போன்ற இன் கவி மலர்களை உனக்கே சூட்டினேன். உன் விஷயமல்லது பிறிதோர் விஷயத்திற்கு நான் எழுதுகோலைத் தொட்டறியேன், அம்மே!

என் அருந் தாயே! உனக்குத் தொண்டு செய்வது தனித் தனியே தேவர் அனைவருக்கும் தொண்டாற்றியதற்கு ஒப்பாம். உன் பணி தெய்வீகம் பொருந்துவது. உன் பணி செய்யும் யான் ஸ்ரீ ராமஸேவையே செய்கிறேன் என்று அறிவேன். உன் னுடைய பலி பீடத்திலே அன்பு மிக்க நேயர்களின் சேர்க்கை இன்பத்தை நீத்தேன். உன் வேள்வித் தீயிலே எனது உடல், இளமை, உலக வின்பங்கள் அனைத்தையும் எரித்துச் சாம்பராக்கி னேன்.

வீடு வாசல், பொருள், புகழ் எல்லாம் உனக்கே தத்தம் செய்தேன். துணையற்று, தனியே கனல் வாதையில் வெந்து போம் என் அண்ணியையும், அம்மையே! உன் பொருட்டுப் பலி கொடுக்கின்றேன். அன்றலர்ந்த மலர்கள் போன்ற என் இளங் குழந்தைகள், இன்னுயிர்க் காதலி, இவர்களையும் உன் பொருட்டுத் துறக்கின்றேன். உன் பலி பீடத்திலே, அஞ்சா நெஞ்சன், மகா தீரன் எனினும் சேயினும் கனிந்த உள்ளத்தோன், கருணைக் கடலோன், என் அண்ணனைப் பலிகொடுத்தேன்.

சின்னஞ் சிறியன்: அன்பே உருவாயவன்: எனது பிரியம் மிக்க தம்பி, பாலன் இன்று உனக்குப் பலியாகின்றான். யூபஸ் தம்பத்திலே இதோ என்னையும் கட்டியாகிவிட்டது. அம்மையே! இவர்களே யன்றி இன்னும் எழு பெயர்கள் இருந்தாலும் அவ் வனைவரையும் உனக்குப் பலி கொடுத்திடுவேன்.

எமது அன்னையின் சந்தானங்கள் முப்பது கோடி. இவருள் தேசபக்தி பழுத்துத் தேசப் பணியிலே உயிர் நீக்கும் சீரியர், தன்யராவர்; நித்திய வாழ்வு பெற்று, நித்திய சோபையுடன் திகழ் பவராவர். தேச பக்தியால் எரிக்கப்பட்டு நிர்வம்சமாகப் போய் விட்டால் என்ன? நமது குடும்பம் என்றென்றும் வாழ்வதாகும்; உலகத்தில் தழைக்கும் வம்சங்கள் அத்தனையும் நமது வம்சமாகவே பொலிவுறும்.

நமது குடும்பம் வாழ்கின்றது; அல்லது, வாழாமலேதான் போகின்றது. இதுவோ எமக்குக் கவலை? எமது கடனை யாம் ஆற்றினோம். இவ்வளவில், எமது வாழ்க்கை சம்பூரணம் பெற்றது. இனி யாம் வேண்டுவது யாது மிலது. எமது மெய்யன்னை விடுதலை பெற்றெழவேண்டி வேள்வி வளர்த்தார்கள். அதில் கனலும் சீறி நாக்கை நீட்டி மூண்டெரிந்தது. அதில் நம் தன்னலம் முழுவதையும் அறுத்துப் பெய்து சாம்பராக்கினோம். கிருதார்த்தரானோம். இதுவே சாலும்.

எமது அருமந்த மதினி! இவ்வாறாக விசாரித்து உண்மை தேர்க. தேர்ந்து, நாம் எடுத்த இவ் விரதத்தினை வழாது காத்து வாருங்கள். அதோடு தெய்வீகம் இலங்கும் இந்த நமது குல தர்மத்தை விடாது பற்றி ஓம்பி வரக் கடவீர். பனிமலையின் உச்சியில் தனியே தவமியற்றும் ஸ்ரீ பார்வதி தேவி, கர்ஜித்தெழும் தழலினைப் புன்னகை பூத்து நேயமுடன் தழுவிய ரஜபுத்ர கோமளங்கள், இவர்கள் உமது வாழ்க்கையின் விளக்கொளிகளா யிருப்பாராக!

அம்மே! வீரனுக்கு மாலை சூடிய வீர பத்தினி நீ! உன் வீர மரபுக்கு இசைந்து உனது வாழ்க்கை மிளிர்வதாக! வீரமும் தீரமும் ததும்பிப் பொங்கும் கடல் அனைய உன் கணவன் வாழ்வைப் போன்று உன் வாழ்வும் செல்வதாக! பரத பூமியிலே அபலைகளும் பலம் படைத்தவர்கள், தேஜஸ் நிரம்பியவர்கள், முன்னாளில்தான் அங்ஙனமிருந்தனர் என்பதில்லை; இற்றை நாளிலும் அவர்களுடைய பலமும் தேஜஸும் மங்கிவிடவில்லை, தேய்ந்து போய்விடவில்லை, என்ற இவ்வுண்மையை உனது வாழ்வைக் கண்டு ஜனங்கள் தேர்ந்துகொள்ளும்படி இருக்கவேண்டும்.

தனயனிலும் மிக்க பிரேமையுடன், தேவி! உன் பொன்னடிக் கமலங்களில், தமியன் பக்திபூர்வகமாய்ச் சமர்ப்பிக்கும் செய்தி ஈதாகும். இதுவேதான் என் கண்ணனைய இன்னுயிர்த் தோழிக்கு நான் அன்புடன் தழுவி யனுப்பும் செய்தியுமாம்.

இந்த விரதத்தை நாங்கள் கண்மூடித்தனமாகத் தரிக்கவில்லை. உலக சரிதத்தின் சம்பூரண பிரகாசத்தில் நின்று, நியாயா நியாயங்களைத் தீர விசாரித்து, மனுஷ்ய தர்மத்தை நன்கு ஓர்ந்துதான் இதனைத் தாங்கி நின்றோம். இந்தத் தெய்வீக தாகம் கொண்டோர் பற்றும் நெறி, முதுகாட்டினூடே செல்லும் என்பதைச் செவ்வையாய் அறிவோம். அறிந்தே இந் நெறிபற்றி அவன் பணியில் ஈடுபட்டோம்.

---

# ஆபிரகாம் லிங்கன்.

திரு. *T. L.* ரகுபதி சர்மா அவர்கள், M. A., L. T.

அமெரிக்காவின் மேற்குப் பிரதேசத்தில் சுமார் 30 வீடுகளையுடைய ஒரு சிறிய கிராமத்தில், உயரமும் நாகரீகமற்ற தோற்றமுமுடைய வாலிபன் ஒருவன், வெளியூர்களிலிருந்து வரும் தபால்களை வீடுகள் தோறும் சென்று கொடுத்து வருவான். அவனுக்குச் சரியான ஆடையணிகளும் கிடையா. அவன் அணிந்திருந்த காற் சட்டையும் அவனுக்குச் சிறியதாயிருந்தது. தன் தொப்பியையே தபால்களை ஏந்திச் செல்வதற்கு உபயோகப்படுத்துவான். அவன் தோற்றமானது அவன் ஒரு ஏழைக் கூலிக்காரனென்றும் தனது தோற்றத்தைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாதவனென்றும் இதற்கு முன் கஷ்டமான பிரதேசத்தில் கஷ்டமான ஜீவனம் செய்து பழக்கப் பட்டவனென்றும் தோன்றியது. ஆயினும் அவ் வெளிய தோற்றத்தையுடைய அவர், பிறவியிலேயே மேதாவியாயிருந்ததோடு அமெரிக்காவில் ஜியார்ஜ் வாஷிங்டன் என்ற பெரியாருக்குப் பின் தோன்றியவர்களுள் நிகரற்றவருமானார். அவருடைய பெருமையானது அவரது ஜீவிய காலத்தின் கடைசி நான்கு ஐந்து வருடங்களில் உலகெலாம் பரவி அவர் உலகப் பிரசித்தி பெற்றார். அதுவே அவருடன் தோன்றிய மேலான குணாதிசயங்களுக்கு அறிகுறி. அதற்கு முன் அவரைப் பற்றி எதுவும் 'இல்லினாய்ஸ்' என்ற மாகாணத்துக்கு வெளியே பரவவில்லை. ஐக்கிய மாகாணங்களுக்குத் தலைவராகக் குறிப்பிட்ட காலத்தும் வெகு சிலரே அவரை நன்றாய்த் தெரிந்து கொண்டவர்கள். அமெரிக்க ஐக்கிய மாகாணங்களுக்கு அப்

போது ஏற்பட்ட நெருக்கடியான நிலைமையில் லிங்கனைத் தலைவராகக் கொள்ளக் கருதியது தெய்வானுகூலமென்றே எண்ண வேண்டும்.

வேறு எந்தத் தலைவரும் இவரைவிடத் தேச நன்மைக்காக உழைத்தவரல்ல. ஐரோப்பாவைப் போல், பல நாடுகளாகவும் பல கொள்கைகளாகவும் அவற்றின் பொருட்டு இடைவிடாத சண்டை சச்சரவுகளும் ஏற்படாது அமெரிக்காவின் எல்லா மாகாணங்களையும் ஒன்றுபடுத்தி இக் காலத்தில் உலகிற்குள் பிரசித்தி பெற்ற சக்தி வாய்ந்த நாடாகச் செய்து வைத்தவர் இப் பெரியாரே யாவர். இக் காலத்தில் தோன்றிய உலகின் வெகு சில மகா பெரியவர்களில் இவரைவிட அதிகக் கீர்த்தியுடன் பிரகாசிக்கும் வேறு எவரையும் பார்ப்பதரிது. ஏழைகளாய்ப் பிறந்த மற்றப் பெரியார்களுக்கு இளமையிற் கிடைத்திருந்த சௌகர்யங்கள் கூட லிங்கனுக்குத் தன் இளம் பிராயத்தில் கிடைக்கவில்லை. இவரது தகப்பனருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. லிங்கன் காட்டுப் பிரதேசத்தில் ஒரு மாக் குடிசையில் தன் பெற்றோருடன் வசித்து வந்தார். அவரது ஒன்பதாவது வயதில் அவரது அன்புள்ள தாய் தகுந்த வைத்தியம் செய்துகொள்வதற் கில்லாமல் இறக்கவே அவளை அடக்கம் செய்வதற்கு அவரே தன் தகப்பனுக்கு உதவியாக இருந்தார். அக் காலத்தில் தந்தி முதலிய தற்கால வசதிகள் யாவும் இல்லை. ஆதலின் ஐக்கிய மாகாணங்களின் மேற்குப் பாகத்திலுள்ள காட்டுப் பிரதேசங்களிற் குடியேறி அப் பூமியைப் பண்படுத்தச் சென்றவர்களின் கஷ்டங்கள் எத் தன்மையன வென்றுவது, லிங்கன் எவ்வளவு கொடுமையான எளிமையில் வளர்ந்தவர் என்றுவது நாம் உணருவது கஷ்டம். சுதேசிகளுடன் (சிகப்பு இந்தியர்) மத்திய மாகாணத்தார் செய்த சண்டைகள் முடிவுபெற்று அதிக நாட்களாகவில்லை. லிங்கனின் பாட்டனையே ஒரு சிகப்பு இந்தியன் ஒழிந்திருந்து சுட்டுக் கொன்றுவிட்டு லிங்கனின் தகப்பனரையும் தூக்கிக் கொண்டு ஓட எத்தனிக்கையில் சுடப்பட்டவரின் தமையன் அச் சுதேசியைத் தலையில் குறி வைத்துச் சுட்டு வீழ்த்தித் தடுத்தார்.

புதிய பிரதேசங்களுக்குக் குடியேறச் சென்ற அநேக ஜனங்களைப் போலவே ஆபிரகாம் லிங்கனின் பெற்றோர்களும் ஆதியில் மிகவும் தரித்திர நிசையில் இருந்தனர். அதனால் லிங்கனுக்குச் சிறு பிராயத்தில் உண்டான கஷ்டங்கள் நம்பக்கூடாத அளவு அதிகமா யிருந்தன. அவர் குடியிருந்த வீட்டுக்கு, குளிருக்கு அடக்கமாயும் வெளிச்சத்தைக் கொடுக்கவும் கூடிய கண்ணுடிச் சன்னல்கூட வெகு நாட்களாக இல்லாமலிருந்தது. ஆகவே இவர் வசிக்குமிடத்தில் போதுமான வெளிச்சம்கூடக் கிடையாது.

லிங்கனின் தாய் தந்தையர் அங்கு வருவதற்கு முன் கெண்டக்கி என்னும் மாகாணத்தில் வசித்து வந்தார்கள். லிங்கனும் அங்கே பிறந்தவர்தான். அவர்கள் ஏழைக் குடியானவர்களாதலால், அக் காலத்தில் குடியேறப்படாதிருந்த மேற்குப் பிரதேசத்திற்குச் சென்று அங்கு இனுமாகவோ அல்லது ஈனக் கிரையத்துக்கோ சர்க்காரால் விடப்படும் பூமிகளைத் தாங்களும் பெற்றுக்கொள்ள எண்ணங் கொண்டு தங்கள் ஆஸ்தியெல்லாம் வழிச் செலவுக்காகவும் அக் குளிர்ப் பிரதேசத்தில் தேவையா யிருக்கக் கூடிய விஸ்கி (Whisky) முதலிய சாமான்கள் வாங்குவதற்காகவும் விற்று எடுத்துக்கொண்டு இந்தியானு என்று சொல்லும் மேற்குப் பிரதேசத்துக்குச் சென்றுர்கள். போகும் வழியில் ஒரு நதியைக் கடக்கையில் வண்டி கவிழ்ந்ததினுல் தங்கள் ஐவேஜ் முழுதும் நதியில் இழந்துவிட நேர்ந்தது. ஆனுலும் லிங்கனின் தகப்பனுர் அதைரியப்படவேயில்லை. வெகு தூரத்திலிருந்த குடியேருத நாடுகளில் சென்று முன்னேற்றமடையக் கருதிய அநேக அமெரிக்கரைப் போன்று இவரும் எதற்கும் அஞ்சாத தன்மையுடன் தன் பலத்தையே நம்பி வேலை செய்பவர். அவருக்குச் சொற்ப விலையில் விஸ்தீரணமான பிரதேசம் கிடைத்தது. ஆனுல் அது பலமான ஜாதி மரங்கள் அடர்ந்த காடு. அந்த மரங்களை வெட்டிக் காட்டைத் திருத்திப் பண்படுத்த ஒரு தலைமுறை உழைப்புத் தேவையா யிருந்தது. அவ்விடத்தில் முழுக் கட்டைகளாலமைத்த குடிசு தயாராகும் வரை லிங்கனும் அவன் பெற

ரேரும் தரையிலேயே படுக்க நேர்ந்தது. லிங்கன் சிறு பைய ஞயினும் குடிசை கட்டும் விஷயத்தில் தகப்பனுருக்கு உதவி செய்தார். குடிசின் மேல் பாகத்தில் அமைக்கப் பெற்ற ஒரு சிறு அறை லிங்கனின் உபயோகத்துக்கு விடப்பட்டது.

அவ்வறையின் தளமும் முழுக் கட்டைகளா லாக்கப் பெற்றது. அங்கு குடியிருந்துகொண்டு தண்ணீர் கொண்டுவர ஒரு மைல் தூரமும் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல இரண்டு மைல் தூரமும் பிரதி தினமும் நடக்க வேண்டியதாயிற்று. இவ்வித அநாகரீகமான விடங்களில் வசித்தவர்களிடையே தான் அமெரிக்கர்களுக்குள் சிறந்த பலர் தோன்றினர். அம்மாதிரி தோன்றியவர்தான் நம் லிங்கனும். அவ்விடத்தில் அவருக்குக் கிடைத்த பழக்கத்தால் வெகு விரைவில் தீரச் செயல்கள் செய்ய வல்லவராக வளர்ந்துவிட்டார். அவரது தாய் இறந்து சிறிது காலத்திற்குப் பிறகு அவர் தகப்பனுர் மூன்று குழந்தைகளே யுடைய ஒரு விதவையை மணந்து கொண்டார். இவள் லிங்கனுக்கு மாற்றூந் தாய் ஆயினும் அதிர்ஷ்ட வசத்தால் கிடைத்த தெய்வத் தாய் போல் விளங்கினுள். அவள் அக் குடிசையைப் பங்களாபோல் மாற்றினள். தன் தட்டு முட்டுச் சாமான்களேக் கொண்டுவந்து அங்கு சேர்த்ததோடு எல்லோரும் உழைப்பதற்கு ஊக்கத்தையும் உண்டாக்கினுள். "ஆபி" என்னும் செல்வப் பெயர் கொண்ட தாயற்ற லிங்கனுக்கும் அவரது இளேய சகோதரிக்கும் அவளது தாயன்பு பாவிற்று. அவளுக்கு மற்றவர்களே விட லிங்கனிடம் அதிக வாஞ்சை யுண்டாயிற்று. அவரைப் படிக்கும்படித் தூண்டியதோடு கற்றுக்கொடுக்க உபாத்தியாயரையும் தானே தேடிக் கொடுத்தாள். அவரது படிப்பு சொற்பமாயினும், அதுவும வேலை செய்யும் நேரங்களில் அதிகப் படிப்பில்லா உபாத்தியாயர்களிடமிருந்து கற்ற படிப்பா யிருந்தபோதிலும் அதை மேலானதாகவே கருத வேண்டும். அவர் உலக வாழ்க்கை என்ற கலாசாலையில் கல்வி பயின்று பட்டம் பெற்ருரென்று சொல்லுவதும் பொருந்தும். அவர் முன்னேற்றம் அடையக் காரணமா யிருந்த

வளும் அவரிடம் மிகுந்த அன்பு பாராட்டியவளுமான அவரது மாற்றுந்தாய், அவர் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களுக்கு ஜனுதிபதியாக (President)த் தேர்ந்தெடுக்கப்பட்டு அதிகாரம் செலுத்திய காலத்தில் உயிரோடிருந்து சந்தோஷமாய்க் கண்ணுற்ருள் என்பதைக் கேட்க நமக்கு மிகவும் இனிமையா யிருக்கிறது. ஆனுல் அவர் விரோதிகளால் இறக்க நேரிட்டதைப் பார்க்கும் துர்ப் பாக்கியமும் அவளுக்கு ஏற்பட்டது.

சிறு பிராயத்தில் மெலிந்த தேகமுடையவரா யிருந்தாலும் பலவாஞக விருந்தார். அவரின் உயரம் 6 அடி 4 அங்குலம். அவர் முதன் முதல் தோணி ஓட்டும் வேலையைக் கைக்கொண்டார். அவருக்குச் சம்பளம் வாரத்துக்குச் சாப்பாடுடன் 6 ஷில்லிங். சிறிது நாட்கள் இவ் வேலையிலிருந்து விட்டுப் பிறகு வேறு வேலை தேடிக்கொண்டார். அவர் தன் எஜமானிடம் இருந்த புஸ்தகங்களை யெல்லாம் படித்தாய் விட்டதாலும் வேறு இடத்தில் வேலைக்கமர்ந்தால் படிக்க வேறு புஸ்தகங்கள் கிடைக்கக்கூடுமென்ற எண்ணத்தாலும் அவ்வாறு விலகியதாய்த் தோன்றுகிறது. பிறகு சிலகாலம் கசாப்புக் கடையில் வேலை பார்த்து வந்தார். அங்கிருந்து விலகிச் சின்னுட்கள் குதிரை லாயத்தில் வேலை பார்த்து வந்தார். அதன் பிறகு பக்கத்து நிலச் சுவான்தார்களிடம் பண்ணை வேலையில் அமர்ந்திருந்தார். அப்பால் படகோட்டியாய்க் கொஞ்ச காலம் இருந்து கடைசியில் ஒரு கிராமப் பண்டகசாலையில் குமாஸ்தாவாக நியமிக்கப்பட்டார். அவர் தனது நற் குணங்களாலும் வேடிக்கையான நடிப்புகளினுலும் பேசும் திறமையினுலும் வேலையில் அமர்ந்திருந்த இடங்களிலெல்லாம் சிநேகிதரது மனதைக் கவரும் சக்தி அவருக்கு இருந்தது. தனது தோழர்களிடத்துப் பல விஷயங்களை வாதிப்பது வழக்கம். இதனுல் அவருக்கு அக்காலத்திய ராஜீய விஷயங்களில் ஊக்கம் உண்டாயிற்று. இச் சந்தர்ப்பங்களில் அவற்றை குறித்துத், தான் கொண்டுள்ள அபிப்பிராயங்களைப் பிரசங்கரூபமாய்த் தன் சிநேகிதர்களுக்குச் சொல்லுவார். அவருடைய

சொல் நயமும் முயற்சியின்றிப் பேசுந் திறமை வாய்ந்த சொற்பொழிவும் அவரைப்பற்றி நினைக்க அடிப்படையாக இருக்கிறது.

அவர் ஆங்கில பாஷையில் சொன் மாரி பொழியவல்ல பெரியார்களில் ஒருவர். அவருடைய இருபத்தொன்றுவது வயதில் அவரது தந்தையார் தன் சொற்ப ஆஸ்தியை விற்றுவிட்டுத் தன் குடும்பத்தார்களுடன் மூன்றாந் தடவையாக, பண்படுத்தப்படாத நிலத்தை ஏற்றுக்கொண்டு அதைப் பண்படுத்தும் கடினமான வேலையை மேற்கொள்ள இல்லினாய்ஸ் என்ற மாகாணத்துக்குச் சென்றார். அச்சமயம் இளம் பிராயமாயிருந்த லிங்கனே தன் குடும்பத்தார்களையும் சாமான்களையும் ஏற்றியிருந்த வண்டியை ஓட்டிக்கொண்டு தன் காலில் மிதியடி இல்லாமல் சேராயிருந்த பாதைகளின் வழியாய் நடந்து புதிய குடியேற்ற இடத்திற்குச் சென்றார். அவ்விடஞ் சேர்ந்ததும் அவர் அங்கு எல்லாரும் வசிக்கும்படியாக ஒரு மரக் குடிசையைத் தன் உழைப்பினாலேயே செய்து முடித்தார். புதிய வயல்களை உழுதல் தங்களுக்குச் சொந்தமான நிலத்தைச் சுற்றி வேலி அடைத்தல் போன்ற வேலைகளையும் தன் ஊக்கத்தால் எளிதில் செய்து முடித்தார். கோடாரி உபயோகிப்பதில் அவர் மிகக் கைதேர்ந்தவர். அவரைத் தெரிந்தவர்கள் அவரது தேக பலத்தை எடுத்துக் காட்டாகச் சொல்வதுண்டு. கடினமான வேலைகளைச் செய்வதில் அவருடன் மற்றெவரையும் ஒப்பிட வியலாது. அவ்வளவு பலசாலியாயிருந்தாலும் அவர் மிக்க அமைதியும் சாந்த குணமும் வாய்ந்தவர். தன் குடிசையில் உட்கார்ந்து ஏதாவது புஸ்தகத்தைப் படித்துக்கொண்டு தன் காலால் அங்கு கட்டித் தொங்கும் தொட்டியை அசைத்துக் கொண்டே நேரத்தைக் கழிப்பதில் அதிகப் பிரியம் உள்ளவர். வயது செல்லச் செல்ல படிப்பில் நேரம் செலவழிப்பதும் அதிகமாயிற்று.

புது சேலம் என்ற கிராமத்தில் பண்டக சாலையில் வேலையாயிருந்தபோது வெய்யில் நேரத்தில் வெளியிலுள்ள மரத்தடியில்

தான் படிக்கும்பொழுது பண்டகசாலைக்கு வந்திருப்பவர்களையும் பாராமல் புஸ்தகத்திலேயே ஆழ்ந்து வேறு ஞாபகமற்று அடிக்கடி இருந்ததுண்டு. அச்சமயங்களில் வந்தவர்கள் உரத்த சத்தத்துடன் கூவின பின்னரே அதை விட்டு எழுந்திருப்பார்.

இவர் பிறந்ததும், வளர்ந்ததும், வேலை செய்ததும் தொழிலாளர்களிடையேதான். புதிதாய்க் குடியேறின பாகங்களிலுள்ள வனாந்திரங்களில் அவர் இள வயதில் வெகு நாட்கள் செலவிட நேர்ந்தது. இளமை நீங்கி வாலிபப் பருவம் வரும் வரை, தன் அந்தஸ்திற்கு மேலான எவருடனும் பேசச் சந்தர்ப்பமேயில்லை. அவரின் சொந்தச் செலவுகளுக்குப் பணமும் கிடையாது. அதிக வயதாகும் வரை அவர் விலை கொடுத்து ஒரு புஸ்தகமும் வாங்கியதாகத் தெரியவில்லை. ஆனால் ஏதாவதொரு புஸ்தகத்தை இரவல் வாங்கும் பொருட்டு அநேக மைல் தூரம் செல்வதுண்டு. அவரும் சிற்சில காலங்களில் வேலையில்லாமல் இருந்தவராதலின் வேலை கிடையாத தொழிலாளர்களுடைய கஷ்டத்தை நன்றாய் உணர்ந்தவர்.

இவ்விதமான தரித்திரத்திலாழ்ந்திருந்தாலும் தன் திறமைகளில் நம்பிக்கையற்றவரா யிருந்தாலும் தனக்கு அவ்வப்போது கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஜீவனம் செய்பவரா யிருந்தாலும் இவருடைய மேலான யோக்கியதையை மற்றவர்கள் எளிதில் தெரிந்து கொண்டார்கள். இவரிடம் இயற்கையில் அமையப்பெற்ற சொற்றிறமையும் நுண்ணறிவும் இல்லினாய்ஸ் என்னுமிடத்தில் வசிக்கச் சென்ற ஆறு மாதங்களிலேயே அங்குள்ளவர்களின் மனதைக் கவர்ந்தது. ஆகையால் அவரை அம் மாகாணச் சட்டசபைக்கு அபேக்ஷகராக நிற்குமாறு வேண்டிக் கொண்டனர். போதிய உழைப்புக்கு நேரமின்மையால் அவர் அத்தடவை தோல்வியடைந்தார். ஆயினும் இரண்டாண்டுகளுக்குப் பின் மறு தடவை நின்றபோது ஏராளமான ஜனங்களின் ஆதரவின் பேரில் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

இதற்குள்ளாகச் சிறிது சிறிதாய் (நிலம் அளக்கும்) சர்வேயர் தொழிலில் பயிற்சி பெற்று ஒழுங்கான முறையில் அந்தத் தொழிலைச் செய்பவரானார். அத் தொழிலில் அவர் பழைய முறையோடு நின்று விடாது அதற்குச் சம்பந்தமான புஸ்தகங்களையும் படித்துத் திசை காட்டுங் கருவி சங்கிலி முதலியவற்றை உபயோகித்துத் தன் வேலையைத் திறமையுடன் நடத்தினர்.

அவர் இல்லினுய்ஸ் மாகாணச் சட்டசபை அங்கத்தினராக முன்னமேயே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரென்று தெரிவித்திருக்கிறோம். அதற்குரிய ஆடை அவரிடம் இல்லாததால் கடன் வாங்கித்தான் தயாரித்துக்கொள்ள வேண்டியிருந்தது. இதற்கு வெகு நாட்களுக்குப் பின்னும் எளிமை ஸ்தானத்திலேயே இருந்ததாகத் தெரிகிறது. இராஜீயத் துறையில் இறங்கின காலமுதற்கொண்டு அதில் அவர் கீர்த்தி பெறலாயினர். "குடியரசு"க் கட்சித் தலைவர்கள் பாமர ஜனங்களை வசீகரிக்குமாறு பேசும் லிங்கனது திறமையைத், தங்கள் கட்சிக்கு அதிக ஓட்டுகள் சம்பாதிப்பதற்கு உபயோகித்துக் கொள்ளத் தீர்மானித்தார்கள். இவர் காட்டுப் பிரதேசங்களில் வசித்து வந்தவராயினும் நாகரீகமுள்ள இடங்களில் தோன்றினவர்களைப்போலொத்த மேன்மையான குணத்துடன் கூடியவராயிருந்ததால் இவருக்குச் செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கி வந்தது.

இரண்டு பெரும் விஷயங்களில் லிங்கன் மாறுத அபிப்பிராயங் கொண்டிருந்தார். அவை அடிமை ஊழியமும் குடியும் ஆகும். இவர் இவற்றை மனமார வெறுத்ததோடு சமயம் வாய்த்தபோதெல்லாம் தன் சொற்பெருக்கால் தொலைத்துவிடப் பின் வாங்கினதில்லை. தென் மாகாணங்களிலுள்ளவர்கள், லட்சக் கணக்கான நம் போன்ற மனிதர்களை அடிமைகளாக்கி அவர்களை விற்றும் வாங்கியும் மிருகத்தனமாக நடத்தி வருவதினல் நாட்டின் ஒற்றுமைக்கே மோசம் வந்து பிளவுபடக் கூடுமென்று நினைக்க வேண்டியிருந்தது. லிங்கனும் இதை உணர்ந்தார். ஆனல் அதைத் தொலைத்து விடுவதற்காக, தான் பிற்காலத்தில் செய்ய

வேண்டியிருந்த பெரும் போரைப்பற்றி இச் சமயத்தில் இவர் சிறிதும் சிந்தித்தவரல்ல.

இராஜீயத் துறைகளில் இறங்கிய பின்னர்ச் சில நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்க வக்கீலாகும் பொருட்டுச் சட்டக் கல்வி கற்கலானார். அதற்கு வேண்டிய முன் படிப்பு அவருக்குக் கிடையாது. ஆயினும் அதற்காகப் பின் வாங்காது தன் வழக்கம் போல் வெகு தூரம் நடந்து சென்று தனக்குத் தேவையான சட்டப் புஸ்தகங்களை இரவல் வாங்கி வந்து படித்து முடித்தார். அவர் பிறகு வக்கீல் தொழிலில் 28-வது வயதில் அமர்ந்தார். அதற்கு ஏழு வருடங்களுக்கு முன் தன் தகப்பனுருடன் காட்டு மரக் குடிசை கட்டுவதிலும், மாடுகளை மேய்ப்பதிலும், வேலிக்காகக் கட்டைகளைப் பிரிப்பதிலும் காலத்தைக் கழிக்கும் ஸ்திதியில் இருந்த அவர்,சொற்ப காலத்துக்குள் படிப்பாளிகளின் காலக்ஷேபமாகிய வக்கீல் தொழிலையும் கைக்கொள்ளக்கூடிய பயிற்சிபெற்றது அவருடைய விடா முயற்சியினாலன்றோ? அத் தொழிலைக் கைக்கொண்ட சின்னாட்கள் வரையிலும் அவர் தரித்திர திசையிலேயே இருக்க நேர்ந்தது. அவரது உடையும், நியாய மன்றங்களுக்கு அவர் கொண்டுசென்ற சாமான்களும் அதற்கு நிதர்சனமாய் நின்றன. அவர் நியாயக் கட்சியிலேயே வாதித்து வந்ததால் அவருடைய தொழில் நாளடைவில் நன்கு நடைபெறத் தொடங்கியதோடு "யோக்கியமான ஆபி" என்று அன்புடன் பட்டப் பெயரும் இடப்பட்டது. அவருக்கு இது முதல் நல்ல சம்பாத்தியம் ஏற்பட்டு மேரி டாட் (Mary Todd) என்ற மாதைக் கல்யாணம் செய்துகொண்டு வசித்து வந்தார். அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன.

அவருக்கு 49 வயதாகும்போது அவர் குடியரசுக் கட்சியில் ஒரு பிரமுகரானார். அக் கட்சியைச் சேர்ந்த மற்றத் தலைவர்களைப்போ லல்லாது அவர் சில சீர்கேடாயிருந்த விஷயங்களைப் பற்றி கொண்டிருந்த அபிப்பிராயங்களைத் தயங்காது வெளியிட்டார். ஐக்கிய மாகாணங்களின் ஒரு பகுதி, அடிமைத்

தனத்தை ஆதரிக்கும் நாடாகவும் மற்றப் பகுதி, அதை ஒழித்து விட்ட நாடாகவும் இருப்பது கூடாது என்ற அடிப்படையான கொள்கையைப் பறை சாற்றினர். அவருடைய கட்சித் தலைவர்கள் அவர் செய்த பிரசங்கங்களிலிருந்து கட்சிக்குப் பலவீனம் மேற்படு மென்று பயந்து சில வார்த்தைகளைப் பிரசுரிக்கக்கூட மறுத்து விட்டார்கள். அதற்காக அவர் அவ்வாறு பேசிக்கொள்வதை நிறுத்திக்கொள்ளவே யில்லை. தவிரவும் அடுத்த மாகாணப் பிரசிடெண்டு தேர்தலில் அடிமைத் தனத்தை அற ஒழிப்பதே முக்கிய விஷயமாயிருக்கும் என்று எண்ணுவதற்கு இடமுண்டாகி விட்டது. அதற்காகக் கூடிய கூட்டங்களில் சச்சரவுகள் கூட உண்டாகத் தொடங்கிற்று. ஒரு கூட்டத்தில் லிங்கன் பேசு கையில் அவரைப் பேசவொட்டாமல் தடுக்க முயன்ற ஒருவன் அவரைப் பார்த்து "பாதரட்சைகூட இல்லாமல் முதன் முதல் சட்டசபை அங்கத்தினராகச் சென்றதுண்டா" என்று கேட் டான். அவர் அதை ஒப்புக் கொண்டதோடு அவன் வெட்கும் படியான வேறு வார்த்தைகளும் சமயோஜிதமாய்ப் பேசினர்.

இதற்குப் பிறகு அடிமைப் பிரச்சினை, நாடெங்கும் விவா திக்கும் விஷயமாகி லிங்கன் தன் மாகாணத்தை விட்டு நியூயார்க் முதலிய இதர மாகாணங்களுக்கும் போய்ப் பிரசங்கங்கள் செய்வ தற்குச் சமயம் வாய்த்தது. இதன் காரணமாக அவர் ஐக்கிய மாகாணங்கள் முழுவதிலும் பிரபல தலைவரில் ஒருவரானர். இவருடைய மாகாணமாகிய இல்லினய்ஸுக் குடியாசுக் கட்சியார் இவரைப் பிரசிடெண்டு ஸ்தானத்துக்குக் கோரினர்கள். அந்தத் தேர்தலில் அவருக்கே வெற்றி கிடைத்தது. அவர் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களுக்கு 16-வது ஜனதிபதியானர். அடிமைத் தனத்தைப்பற்றி அவர் கொண்டுள்ள கொள்கையால் விரோதிகள் பலர் இருந்தமையால் தேர்தலுக்குப் பிறகு தலைவர் ஸ்தானத்தை ஒப்புக்கொள்ளச் செல்லுகையில் அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. வழியில் இவரைக் கொன்றுவிடப் பெரு முயற்சிகள் செய்தும் பயன் படாமற் போ

யிற்று. தேர்ந் தெடுக்கப்பட்ட மற்றப் பிரசிடெண்டுகளுக்கு ஏற்பட்டதுபோ லல்லாது இவர் அதை ஏற்றுக்கொள்ளச் செல்லு கையில் ஆரவாரம் யாதுமில்லாமலிருக்க நேர்ந்தது பிரசிடெண் டின் வாசஸ்தானம் சத்துருக்களின் மாகாணத்திலேயே இருந்தது. இதை அவர் தன் முதல் பிரசங்கத்திலேயே உணர்ந்ததாகத் தெரிவித்துவிட்டார். எனினும் தன் முக்கிய நோக்கத்தைக் கைசோர விடவில்லை. தன்னாலியன்றளவு அடிமைப் பிரச்சினை விஷயத்தில் இருதிறத்து மாகாணங்களுக்கும் சமாதானமும் ஒற்றுமையும் உண்டாக்க முயன்றார். சர்க்காரிலிருந்தே அடி மைச் சுவான்தார்களுக்குப் பணங் கொடுத்து அடிமைகளின் சுதந் திரத்தை விலை கொடுத்து வாங்கிவிட ஆலோசனை சொன்னார். ஆனால் ஒன்றும் பயன்படவில்லை. அவர் தலைவரான காலமுதலே அடிமைப் பிரச்சினைக்கு விரோதமான கட்சியார் தங்கள் கட்சி யைப் பலப்படுத்துவதற்கு மாகாணப் பிரிவினையையும் கருதத் தலைப்பட்டு விட்டார்கள். இதை எவ்வாற்றானும் தடுப்பது அவ சியமென லிங்கன் நினைத்தார். வர வர இதுவே முக்கிய நோக்க மாயிற்று. வட மாகாண வாசிகள் முழு மனதோடும் அவருக்கு உதவி புரிந்து வந்தார்கள் லிங்கனின் முயற்சிதான், ஐக்கிய மாகாணங்களின் ஐக்கியம் நிலை நிறுத்தப் பெற்று மாபெரும் இரா ஜ்யமாவதற்குக் காரணமாயிற்று என்பதைத் தேச சரித்திரமும் ஒப்புக்கொள்ளுகிறது. ஒற்றுமைக்காக நடந்த யுத்தத்தில் அநேக வாலிபர் மடிய நேரிட்டதற்கு லிங்கன் மிகவும் வருந்தினார். ஆனால் சமாதானப் பேச்சை ஒப்புக்கொள்ளாத எதிர்க் கட்சியா ரால் தொடங்கப்பட்ட அந்த யுத்தத்துக்கு அவர் யாது செய்வார்? யுத்தம் முடியும் முன்னமே 30, 40 லட்சம் அடிமைகளுக்குச் சுதந்திரம் கொடுத்து ஒரு உத்தரவுப் பிரசுரம் வெளியிட்டார். அதன் பின் வர வர அவர் கட்சி வலுக்கத் தொடங்கி யுத்தத்தில் ஜெயமுண்டாயிற்று. இவருடைய ஊக்கத்தையும், மேன்மையான குணங்களையும், இவர் விரோதிகளின் அயோக்கியத் தனங்களையும், அடாத செயல்களையும் நேரில் தெரிந்திருந்த இவருடைய ஆப்த நண்பர்கள் இவர் எதிரிகளால் உயிர் துறக்க நேரிடுமென்று எதிர்

பார்த்தார்கள். அவ்வாறே எதிரி சைன்னியங்களின் தலைவரான ஜெனரல் லீ என்பவர் கடைசியில் சரணாகதி யடைந்து யுத்தம் முடிவடைந்த ஐந்து நாட்களுக்குள் அச் சமாதானக் கொண்டாட்டு வைபவமாக நடந்த ஒரு தமாஷ் பார்க்கச் சென்றிருந்த பொழுது நம் லிங்கன் சுடப்பட்டார். மறு நாள் அவர் தன் ஆவியை விட்டு விண்ணுலகிற்கு ஏகினர். உலகத்தில் அரசு புரிந்த மாபெரும் அதிபதிகளில் ஒருவரும், அமெரிக்காவின் அரும் புதல்வர்களில் ஒருவருமான நம் ஆபிரகாம் லிங்கன் தன் உழைப்பின் பயனை இவ்வாறு அடைந்தார். எல்லையற்ற பொறுமையினாலும் தான் நன்கு ஆலோசித்துக் கைக்கொண்ட கொள்கைகளை இடைவிடாது வற்புறுத்துவதினாலும் ஒரு தனி மனிதன் உலகிற்கே எவ்வித நன்மைகளையும் செய்யலாமென்பதை அவர் தன் ஜீவியத்தில் விளக்கிக் காட்டியிருக்கிறார். யுத்தத்தின் மத்தியில் போர் வீரரில் அநேகர் மடிந்த ஓர் இடத்தை, தீரத்திற் சிறந்த நாட்டு வீரர்களை யெல்லாம் அடக்கம் செய்யுமிடமாகக் குறிப்பிட்ட சமயத்தில் லிங்கன் நிகழ்த்திய சொற்பெருக்கு இணையற்ற ஓர் சொன்மாரியா யிருந்தது. அதை ஈண்டு வரைந்து அம் மாபெருந் தேசத் தொண்டரின் சரித்திரத்தை முடிவு செய்வோமாக.

"நண்பர்களே, 87 வருடங்களுக்கு முன் காலஞ் சென்ற நம் முன்னோர்கள் தங்கள் தாய் நாடாகிய இங்கிலாந்துடன் சண்டை செய்து சுதந்திர நாடாகச் செய்த இம் மாபெரும் நாட்டில் எல்லா ஜனங்களும் சமம், எல்லாருக்கும் சமத்துவ உரிமையுண்டு என்ற மேலான கொள்கைகள், என்றும் நிலவ வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டார்கள். தற்போது, நாம் அக் கொள்கைகளைக் கைக்கொண்ட எந்த இராஜ்யமாவது நிலைத்திருக்க முடியுமா முடியாதா என்பதைத் தீர்மானிப்பதற்கே இப் போரில் இறங்கி யிருக்கிறோம். அப் போரைச் சேர்ந்த யுத்தகளங்களொன்றில் நாம் இப்போது கூடி அதன் ஒரு பாகத்தை இந் நாடு புகழுடன் என்றும் நிலைத்திருக்கும் பொருட்டு தங்கள் ஆவியை விட்ட எல்லா வீரர்களுக்கும் இவ் வுலகில் கடைசி இருப்பிடமாக்கத் தீர்மானித்துள்ளோம். நாம் அவ்வாறு செய்வது நம் கடமையாயினும் நாம் செய்வதைவிடப் பன்மடங்கு நாட்டுக்காகத் தங்கள் உயிரைப் பொருட்படுத்தாது சண்டை செய்து மடிந்த அவர்களே நாம் கூடியிருக்கும் இவ்விடத்திற்கு மேலான மதி

# ஆசிரியர் குறிப்புகள்.

## அயல் நாடுகளில் வசிக்கும் சந்தா அன்பர்களுக்கு.

"பாரதி"ப் பத்திரிகை, உலகத்தில் தமிழர் வசிக்கும் பாகங்களிலெல்லாம் உலாவிக் கொண்டிருக்கிறது எமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. அயல் நாடுகளிலிருந்து சந்தாக்களை அனுப்பி, அவர்கள் பத்திரிகைகளை அடைவதற்குச் சுமார் இரண்டு மாத காலங்கள் பிடிக்கிறது. ஆகையால் அந்நிய நாட்டுச் சந்தா நேயர்கள் பிறக்கப்போகும் 1930-ம் வருஷத்துத் தங்கள் சந்தாக்களை உடனே அனுப்பினால் மிகவும் நலமாயிருக்கும். 1929-ம் வருஷத்துச் சந்தாக்களை இதுவரை அனுப்பாதிருக்கும் அன்பர்களும், தங்கள் தங்கள் 1930-ம் வருஷத்துச் சந்தாக்களையும் சேர்த்தே அனுப்பி எங்கள் வேலையில் எங்களை உற்சாகப்படுத்த

---

ப்பை உண்டாக்கி விட்டனர். இச் சமயம் நாம் இங்கு பேசுவதை உலகத்தார் கவனிக்காமலேயே இருக்கலாம்; கவனித்தாலும் சொற்ப நாட்களுக்குள் மறந்து விட்டாலும் மறந்து விடலாம். ஆனால் [illegible]வீரர்களின் செயல்களை உலகம் ஒருபோதும் மறக்கவே முடியாது. இ[illegible]ன் மூலம் அவர்கள் செய்துவிட்டுப் போன அரிய வேலையின் மீதியை நாம் செய்ய முன்வர நம்மை அர்ப்பணம் செய்து கொள்ளும் சமயமென்று சொல்லுவேன். அவர்களுடைய தன்னலமற்ற செயல்கள் நம் ஊக்கத்திற்கும் தேசத் தொண்டிற்கும் தூண்டுகோலாயிருக்கட்டும். அவர்களுடைய மரணம் பயன் தராது போகாமலிருக்கட்டும். அவர்கள் சண்டை செய்து மரித்ததன் பயனாக இந் நாட்டிற்குப் புதிய சுதந்திரம் உண்டாகி உலகில் ஜனங்களாலேயே ஜனங்களுடைய நன்மைக்காகவே, ஜன நாயகம் தழைத்து ஓங்கட்டும்."

இந் நாளில் அமெரிக்க ஐக்கிய மாகாணவாசிகள் அப் பெரியாரைப் பற்றிப் பேசும்போது 'ஆபிரகாம் பிதா' என்றே அழைக்கிறார்கள்.

வேண்டுகிறோம். அயல் நாடுகளில் தமிழ் மக்களிடையே "பாரதி"யை அதிகமாகப் பிரச்சாரம் செய்து அநேக சந்தாக்களைச் சேர்த்தனுப்பி எங்கள் தேச வேலையில் உற்சாகத்தை உதவும் பொருட்டுக் கேட்டுக் கொள்கிறோம். ஊதியத்தைக் கருதாது தேசாபி விருத்தியை மட்டும் கவனித்துப் "பாரதி" அரும் பிரயாசையோடு பதிக்கப்படுவதால், "பாரதி"யை எவ் வழியிலேனும் உயர்தரமாக நடத்தவேண்டு மென்பதே எமது பேரவா. ஆகையால் ஒவ்வொரு சந்தா நண்பரும் "பாரதி"யைத் தங்கள் பத்திரிகையென எண்ணிப் "பாரதி"க்குப் பாடுபடுவது தங்கள் தங்கள் கடமையாகும் என்று சொல்லத் தேவையில்லை. இனிமேல் அயல் நாடுகளில் வசிக்கும் இந்தியச் சகோதரர்களைப்பற்றி அதிக விஷயங்கள் வெளியிட ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். அடுத்த வருடத்திற் கேற்பட்ட சந்தாக்களை அயல் நாடுகளிலிருந்து எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

## உள் நாட்டுச் சந்தா நேயர்களுக்கு

"பாரதி," தனது சந்தா நேயர்களைத் திருப்தி செய்து கொண்டிருக்கிறது பற்றி எங்களுக்கு மிக மிக மகிழ்வே. காலதாமதத்துடன் வெளிவருவதை அகற்றுவதற்கு வேண்டிய வழிகள் செய்து கொண்டிருக்கிறோம். கடவுள் கருணையும் கலக்கும் காலத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். தங்கள் 1930-ம் வருஷத்திய சந்தாக்களை அனுப்பி எங்கள் வேலையை எங்களுக்கு இலகுவாக்கிக் கொடுக்கக் கேட்டுக் கொள்கிறோம். "பாரதி"க்கு ஒவ்வொரு நேயரும் தம் தம்மா லியன்ற அநேக சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்துப் "பாரதி"யின் வளர்ச்சியில பல வழிகளில் பெரிதும் பாடுபடுவார்களென்று நம்பிக் கொண்டிருக்கிறோம்.

## இலங்கையில் இந்தியர்களுக்கு இழி நிலை

இந்தியர்கள் முன்னொரு காலத்தில் கடல் கடந்து உலகமெங்கும் திக்கு விஜயம் செய்தார்கள் என்று சரித்திரங்கள் கூறுகின்

றன. அக் காலத்தில் அபாரப் பெருமை பெற்ற இந்தியா, இக் காலத்தில் அடையும் இழி நிலையை எவ்வாறு கூறுவது? உலகத்தில் இந்தியர் எங்கு சென்றாலும் கௌரவமில்லை; சமத்துவமில்லை. ஆசியாக் கண்டத்தவர்களுக்கு வெள்ளை நிறத்தார்கள் செய்து வரும் கொடுமை ஒன்றல்ல ஆனால் பலவாகும். தென்னாப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய தேசங்களிலும், பீஜி, மோரிஸ் முதலிய தீவுகளிலும் இந்தியரின் கஷ்டங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன.

இத் தூர் உணர்ச்சி வெள்ளையர்களைமட்டும் இப்பொழுது ஆட்டிக்கொண்டிருக்கிறதென்று நாம் தவறுதலாய் எண்ணி விட்டோம். பர்மியர்களையும் சிங்களவர்களையும் இந்த நச்சுணர்ச்சி தீண்டி விட்டதால், புத்தபிரானது அன்பு மதத்தவர்கள் ஜீவகாருண்யமின்றி, மதங்கொண்டு இந்தியர்களைச் சகோதரர்களென்று எண்ணாது சகோதரத் துரோகம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தியா என்றுமே அடிமை நாடாக இருக்கப் போவதில்லை யென்று உலகத்திற்கே தெரியும். அப்பால் செய் நன்றி கொன்ற பர்மியர்களையும் சிங்களவர்களையும் இந்தியர்கள் எப்படி நடத்தப்போகிறார்களோ?

இலங்கையில் வாழும் இந்தியர்களை "உயிர் உறிஞ்சிகள்" என்றே சிங்களவர்கள் அழைக்கிறார்கள். இந்தியர்களுக்கு இலங்கையில் சர்க்கார் உத்தியோகங்கள் கொடுப்பதை ஒரு சட்டம் தடுக்கிறது. இந்தியர்கள் அங்கு வைத்தியர்களாக முடியாதபடி இன்னொரு சட்டம் மறுக்கிறது. இனி வரப்போகும் நில மசோதா, கடன் கொடுப்போர் மசோதா ஆகிய இரண்டும் இலங்கையிலிருக்கும் அந்தஸ்து வாய்ந்த இந்தியர்களுக்கும் கெடுதிகள் செய்யப் போகின்றன. இனி எத்தனையோ இடுக்கண்கள் இலங்கையில் இந்தியர்களுக்கு வரப்போகின்றன. நமது "பாரதி"யின் 3-வது மணியில் இந்தியத் தலைவர்கள், இலங்கையிலிருக்கும் இந்திய சகோதரர்களுக்கு நேரிட்டிருக்கும் கஷ்டங்களை அகற்றுவதில், தீவிரமாக உழைக்க வேண்டுமென ஒரு தனியான கட்டுரையே எழுதியிருக்கிறோம். இந்தியத் தலைவர்கள் இதில் பிரவேசிக்கத் தவறிவிட்டது வருந்தத் தக்கதே.

டொனமோர் கமிஷன் அறிக்கை, சில சிறிய திருத்தங்களுடன் ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிறது. இந்தியரது ஓட் உரிமைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தொன்று தொட்டு இன்று வரைக்கும் சகோதர வாற்சல்யத்துடன் வாழ்ந்து வரும் இந்தியர்களைக் கீழே தள்ளி, நேற்று வந்த ஐரோப்பியர்களைக் கட்டித் தழுவிப் பணியும் சிங்களவர்களின் மர்மம் எமக்கு இன்னும் நன்ருய் விளங்கவில்லை. இலங்கை அரசாங்கத்தைத் தோட்டக்காரர் ராஜ்யம் என்று ஏன் கூறக்கூடாது? என்று நாம் கேட்கிருேம். இந்தியாவின் சுதந்தர நாதம், இந்தியர்களுக்குக் கெடுதிகள் செய்த மக்களுக்கெல்லாம் திகிலை உண்டாக்கப் போகிறது என்று எச்சரிக்கை செய்கிருேம்.

இலங்கையில் வாழ் இந்திய மக்கள் அனைவரும் ஒன்று கூடித் தீவிரமாகக் கிளர்ச்சி செய்ய வேண்டுகிருேம்.

## சாஸ்திரி கல்லூரி

எல்லாப் பாதகங்களுக்கும் காரணம் "அறியாமையே" என்ருர் புத்தமுனிவர். அறியாமை என்னும் இருளை அகற்றுவதற்குக் கல்வியென்னும் வெளிச்சமே வேண்டுவது. இந்தியாவில் கல்வி கற்ருேர்கள் 100-க்கு 5 பேர். இந்தியாவை 150 வருடங்களுக்கு மேல் பிரிட்டிஷார் ஆட்சி செய்த, செய்கின்ற பலன் இப்படியிருக்கின்றது. இந்தியாவின் நிலையே இவ்வாறிருக்க, இந்தியத் தாயகத்திலிருந்து தூரத்தில் பிழைக்கப்போன இந்தியரின் கல்வி நிலையைப் பற்றி எதுவும் எழுதத் தேவையேயில்லை அங்கு இந்தியருக்கு ஓட்டுரிமை கிடையாது. அநேக தொழில்கள் இந்தியருக்கு மறுக்கப்படுகின்றன. தொழிலாளர்களாகச் சென்று அங்கிருக்கும் இந்தியச் சகோதரர்களுக்குப் போதியபடி கல்வி அறிவு கிடையாது. சிலர் கற்றிருப்பதைப்பற்றி மட்டும் கணக்கில் சேர்க்கக் கூடாது.

தென்னுப்பிரிக்காவில் இலட்சக் கணக்கான இந்தியர் இருக்கிருர்கள். நேட்டால் மாகாணத்தில் மட்டும் முப்பதினுயிரம் படிக்கக்கூடிய சிறுவர்கள் இருப்பதாகவும் அறிகிருேம். தென்

ணுப்பிரிக்க இந்திய ஏஜெண்டு ஜெனரலாகவிருந்த மகா கனம் தங்கிய ஸ்ரீநிவாச சாஸ்திரியாரது முயற்சியால் சாஸ்திரி காலேஜ் என்ற பெயருடன் ஒரு கல்லூரி இந்திய மாணவர்களின் கல்வி அபிவிருத்தியைக் கவனித்துச் சமீபத்தில் தென்னுப்பிரிக்காவில் திறக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கல்லூரியின் ஸ்தாபனத்திற்காக அங்கு வாழும் இந்தியர்கள் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் வரை கொடுத்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். அயல் நாடுகளில் கல்வியின்றித் திண்டாடிக் கொண்டிருக்கும் இந்திய யௌவனர்களுக்குப் பெரிதும் இந்தக் கல்வி ஸ்தாபனம் உதவியா யிருக்கும். இந்தக் கல்விச் சாலையால் மட்டும் அங்கு இந்திய யுவர்களுடைய வித்தை விருத்தியாய்விடாது. ஒன்றுமில்லாததற்கு ஒன்றிருப்பது நல்லதல்லவா? சுதந்திரமின்றி யிருப்பதாலல்லவா இந்திய மாணவர்களுக்குத் தனிக் காலேஜ் ஏற்பட்டிருக்கிறது.

## பஞ்சாங்கங்கள்

பஞ்சாங்கங்களை அனுசரித்து விசேஷ நாட்களை இந்தியர் கொண்டாடுவது வழக்கம். சிலர் பஞ்சாங்கங்களை வெளியிடுகின்றனர். சில சுப நாட்கள் சில பஞ்சாங்கங்களில் வித்தியாசமாகக் காணப்படுகின்றன. வைதீகப் பித்துப் பிடித்த கிராமவாசிகளுக்குத் தவறுதலாய்க் கணிக்கப் பெற்ற பஞ்சாங்கங்கள் மிகவும் ஏமாற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இனிமேல் பஞ்சாங்கக் கணித சாஸ்திரிகள் கவனத்துடன் சரியாய்க் கணிப்பார்களாக.

## நேபாள முதல் மந்திரி மறைவு

இந்தியாவில் நேபாளமும், பூதானமும், ஆப்கனிஸ்தானமுமே சுயேச்சையான சமஸ்தானங்கள். பிரதம மந்திரியாயும் சேனாதிபதியுமா யிருந்து அநேக சீர்திருத்தங்கள் செய்து ராஜ்யத்தைத் தக்கபடி நிர்வகித்து வந்ததால், 1854-ம் வருஷம் முதல், முதல் மந்திரியே நேபாளத்தை ஆள்கிறார் என்று சொல்லல் வேண்டும். அங்கு பெயருக்கு மட்டும் ராஜா உண்டு. அவருக்கு ஒன்றும் செய்ய அதிகாரமில்லை. மந்திரிக்கு மகா ராஜா என்ற பட்டம் உண்டு.

மேன்மை வாய்ந்த லெப்டினண்ட்-ஜெனரல் மகா ராஜா சர். சந்திர ஷம் ஷேர் ஜங் பகதூர் ராணு அவர்கள் 1901-ம் வருஷத்தில் நேபாளச் சமஸ்தான முதன் மந்திரியாக நியமிக்கப்பட்டதிலிருந்து அவர் அநேக சீர்திருத்தங்களைச் செய்தார். அவர் சென்ற ஐரோப்பிய யுத்தத்தில் பிரிட்டீஷாருக்கு அநேக வகைகளில் உதவி செய்தார். நேபாள முன்னேற்றத்திற்கு அவரே காரணமென்று சொல்லல் வேண்டும். அடிமைகளின் கஷ்ட நிலையை உணர்ந்து பரம்பரையாக அடிமைகளாயிருக்கும் 50 ஆயிரம் அடிமைகளை அவர்களின் எஜமானர்களாகிய பணக்காரர்களிடமிருந்து பணம் கொடுத்து அவர்களை விடுவித்துச் சுதந்தரமடையச் செய்து உலகப் புகழ் பெற்ற மகா கனம் மகா ராஜா சந்திர ஷம் ஷேர் ஜங் பகதூர் தனது 67 வயதில் இப்பொழுது காலஞ் சென்று விட்டாரென்று மிக மிக வருந்துகிறோம். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக.

## சாது சுந்தர் சிங் எங்கே?

கீழை நாடு சாதுக்களையும் சன்னியாசிகளையும் தபோதனர்களையும் மத ஸ்தாபகர்களையும் உண்டாக்கும் நாடு. சமீப காலத்தில் நமது தேசத்தில் உண்டாகிய கிறிஸ்து மத மகரிஷி சுந்தர் சிங் ஊர் ஊராய்ச் சென்று விசேஷ ஊழியம் செய்து கிறிஸ்தவ உலகத்திற்கு நல்லுணர்ச்சியை உண்டாக்கி யிருக்கிறார். திபேத்திலிருந்து இவரைக் காணோம். சாது சுந்தரர் யாரெனச் சிறிது இங்கே வருத்தத்துடன் குறிப்பிடுகிறோம்.

இவர் பாட்டியாலா மாகாணத்தில் ராம்பூர் பட்டினத்தில் சிக்கிய குலத்தில் சர்தார் ஷேர் சிங் என்ற தனவந்தருக்குக் கனிஷ்ட புத்திரனாக 1889-ம் வருஷம் செப்டம்பர் மீ 3உ தோன்றினார். தமது 7-ம் வயதிலேயே சமஸ்கிருதத்தில் பகவத் கீதை முதலிய உயர் நூற்களை வாசித்தார். கிறிஸ்தவப் பாதிரிமார்களையும் கிறிஸ்தவப் புஸ்தகங்களையும் வெறுத்த இவர் மனம் மாற்றமடைந்து கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றினார். ஏசுவைப் பார்த்ததாகவும் அவர் பிரசங்கங்களில் கூறுவதுண்டு. 1905-ம் வருஷம் சிம்லாவில் ஞான ஸ்நானம் பெற்று உலகத்தைத் துறந்து சந்நியாசம் மேற் கொண்டார். பர்மா, சிலோன், சைனா, ஜப்பான், ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்தி

ரேலியா முதலிய விடங்களுக்குச் சென்று பிரசங்கமாரி புரிந்து உலக கவனத்தையும் உலகப் புகழையும் பெற்றிருக்கிறார். அமெரிக்காவில் அவர் இக்காலத்து அப்போஸ்தலர் பவுல் என்று புகழப்பட்டார். அவரது முகத்தழகும் அதற்கேற்ற அன்பான அகத்தழகும் அருமைப் பிரசங்க அழகும் ஆவேச அமிர்த மொழியழகும் ஏசுநாதரை ஞாபக மூட்டுகின்றன.

சென்ற ஏப்ரல்மீ 18உயன்று சிம்லாவில் சுபாத்து மலையிலிருந்து ஸ்ரீமான் வாட்ஸன் (Watson) என்பவரிடம் விடை பெற்றுக் கொண்டு தான் ஜூன்மீ கடைசிக்குள் திரும்பி வருவதாக அறிவித்து விட்டு பத்திரி நாராயணம் வழியாய் வியாபாரிகளுடன் திபேத் சென்ற சாதுஜி இன்னும் திரும்பி வரக்காணோம். அவரைப் பற்றி ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. ஹிமயமலையில் 18,000 அடி உயரம் வரையில் அவர் சிநேகிதர் அவரைத் தேடி அலைந்தார்கள். கவர்ன்மெண்டாரும் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். வழியில் எவரேனும் அவரைக் கண்டதாகவோ கேட்டதாகவோ தெரியவில்லை. இக்காலத்தில் அவர் நம்முடனிருந்தால் நமக்கு எவ்வளவோ சாந்தியாயிருக்கும்? நமது நாட்டிற்கு எவ்வளவோ கௌரவமாயிருக்கும்? அவர்எப்படியோ மறைந்தாலும் ஆண்டவனில் கலந்திருப்பார் என்ற சந்தோஷமே நமக்கு உண்டாகிறது. அவர் மறைந்தாலும் அவரது ஆத்மீக உணர்ச்சிகள் மின்சாரவேகத்துடன் ஒன்று பத்தாய் 10 நூறாய் 100 ஆயிரமாய் 1000 பத்து லட்சமாய்ப் பெருகிக் கொண்டிருக்கின்றன. இனியொரு இரண்டாவது சாது சுந்தர் சிங்கை-இனியொரு மூன்றாவது பவுலை—இனியொரு கிறிஸ்தவ உண்மைச் சந்நியாசியை என்று நாம் காண்போம்!

## மாதர் மகா நாடுகள்

தென்னாட்டுப் பெண்களுக்கு நூதன உணர்ச்சி உண்டாகிக்கொண்டிருக்கிறதென அறிந்து ஆனந்தமடைகிறோம். இயற்கையின் சக்தியும் காலத்தின் வேகமும் பெண்மக்களை அதி சீக்கிரத்தில் முன்னேறச் செய்யும் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம். பெண்மணிகளின் அபிவிருத்தியை ஆவலுடன் வேண்டுகிறோம், அன்புடன் வரவேற்கிறோம்.

சென்னையில் பெண் கல்வி மகாநாடு ஸ்ரீமதி கஸின்ஸ் தலைமையிலும் பெண்கள் ஆசார சீர்திருத்த மகாநாடு ஸ்ரீமாந் ஸ்ரீநிவாச அய்யங்காரது மனைவியார் அக்ராசனாதிபத்தியத்திலும் நடைபெற்றன. இரு அக்ராசனப் பிரசங்கங்களும் நிதானத்துடனும் ஆலோசனையுடனும் உற்சாகத்துடனும் விளங்குகின்றன. ஒன்று நல்ல நல்ல உயரிய தீர்மானங்கள் தீர்மானிக்கப் பெற்றிருக்கின்றன என்று சமூக சீர்திருத்தக்காரர்கள் கேட்க மிக மிகச் சந்தோஷமடைவார்கள். கீழ் நாட்டில் ஜப்பான், சீனம், பெர்சியா, எகிப்து, துருக்கி முதலிய தேசப் பெண்கள் விழித்தெழுந்திருக்கிறார்கள். பெண்கள் இயக்கம் உலக இயக்கமாக மாறிவிட்டபடியால் இந்திய மாது சிரோன்மணிகளும் நூதன ஊக்கத்துடன் ஓடி வந்து முன்னின்று தீவிரமாய்த் தங்கள் வேலைகளைச் செய்து முன்னேற்றமடைய வேண்டுகிறோம். ஆண்களுக்குப் பெண்கள் அடிமை என்ற உணர்ச்சி உள்ள வரையில் பெண்கள் கிளர்ச்சியின் சப்தமும் இருந்தே தீரும். தேவதாசிகளை அகற்றும் சட்டம், பால்ய மணத்தடுதல் சட்டம் முதலிய சட்டங்கள் இந்தியப் பெண்பாலருக்கு எவ்வளவு அனுகூலமாய் இருக்கின்றன! மாதர் இயக்கம் ஆவேசத்துடன் இந் நாட்டில் தோன்றியிருக்கிறது. ஒவ்வொரு இந்திய சகோதரியும் சுதந்தர உணர்ச்சியையும் சமத்துவ நிலையையும் உணரும் நன்னாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

## பீஜி சட்டசபையில் இந்திய அங்கத்தினர்கள்

பீஜித் தீவில் இந்தியத் தொழிலாளர்கள் ஆயிரக் கணக்காய்க் கஷ்டத்துடன் வாழ்கிறார்கள். கரும்புத் தோட்டத்தில் பெண்கள் படும் பாட்டைக் கேட்டல்லவா? நமது தேசீயக் கவிச் சிங்கம் பாரதியார் "கரும்புத் தோட்டத்திலே............" என்ற பாட்டை அழுது கண்ணீர் விட்டுக்கொண்டே உள்ளம் உருகி உருகிப் பாடியிருக்கிறார். அங்கு இந்தியர்களுக்கு வேண்டும் உரிமைகளைக் கொடுக்காததால் பீஜி சட்டசபையில் அங்கம் வகிக்கும் மூன்று இந்தியர்கள் தங்களுடைய தேசத்தின் மதிப்பைக் காக்கும் பொருட்டுத் தங்களுடைய பதவிகளைத் துறந்துவிட்டார்கள். ஆங்கிலேய ரிடையில் சிக்கி அவர்களுடைய உரிமைகள் நசுக்கப்பட்டாலும் அம் மூன்று இந்திய சகோதரர்கள் நடந்துகொண்ட மாதிரியைப் போற்றுகிறோம். அவர்களுடைய சுதந்திரத்திற்கு வணக்கம் செலுத்துகிறோம். இந்தியாவில் மாகாண- இந்திய சட்டசபை அங்கத்தினர்கள் இவ்வாறு ஏகோபித்து ஒற்றுமையுடன் ஒரு காரியத்தை என்றுதான் செய்வார்களோ?

## சனாதனதர்மிகள் மகாநாடு

இந்தியா அடிமையாய் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கிற தாகையால், மதம், ஜாதி, கட்சி முதலியவைகளைக் கவனிக்காது இந்திய மக்களில் அநேகர் ஒரு தாயின் புத்திரர்கள் போல் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் அடிமை விலங்கை அறுத்தெறிவதற்காகவும் தேச விடுதலைக்காகவும் பாடுபட்டுக்கொண்டிருக்கும் இக் காலத்தில் ஜாதிக் கர்வம் கொண்டு வைதீகப் பேய்பிடித்த கிறுக்கர்கள் மதத்தின் பெயரால் சாஸ்திரங்களின் பெயரால் பண்டைப் பெருமை வாய்ந்த நமது இந்திய நாட்டை அடிமையாக்கி அதோகதியாக்க முன்வந்திருக்கிறார்களென்று மகா வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். வைதீகப் பித்தர்கள் பலர் கூடிச் சென்னையில் வைதீகர்கள் மகாநாடு ஒன்று நடத்திப் பற்பல தேசாபிவிருத்தித் தடைத் தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள் என்று விசனிக்கிறோம். தேச பக்தர்களுடைய வேலைகளை அதம் செய்யப் புறப்பட்டிருக்கும் இவர்களைப் பற்றி என்ன எழுதுவது? சாரதா மசோதா சட்டமாக்கப்பட்ட பொழுது சென்னை மாகாணத்திலிருந்து ஒரு அங்கத்தினர் மட்டும் இந்திய சட்டசபையில் சாதகமாக வாக்குக் கொடுத்தாராம். "தென்னாட்டின் பெருமை" என்று ஒரு சமயத்தில் மகா பெருமையுடன் பிரசங்கித்த விவேகானந்த சுவாமிகள் இப்பொழுது இங்கு மறுபடியும் வருவாரானால், இவ் வைதீக அபஸ்மாரர்களை எவ்வாறு சபிப்பாரோ தெரியவில்லை. வைதீகத் தொல்லைகள் இனிமேல் வளரப்போகின்றன. இப் பைத்தியகாரர்களின் விவாதங்களிலேயே நமது சக்திகளெல்லாம் சென்றுகொண்டிருந்தால் அயல் நாட்டாருடன் நாம் எவ்வாறு சாத்வீகப் போராடி நமது தெய்வத் திருநாட்டை விடுதலை செய்யப்போகிறோம்? கிராமங்கள் தோறும் பரவிக்கிடக்கும் வைதீகர்கள் இனி அவர்களுடைய விஷ வேலைகளை ஆரம்பிக்கப் போகிறார்கள். ஆகையால் தேசாபிமானிகளே! யுவர்களே!! விடுதலை வீரர்களே!!! எழுங்கள்; முன் வாருங்கள்; தேச சுதந்திரத்திற்குத் தடையாயிருக்கும் அனைத்தையும் நாசப்படுத்தித் தேசத்தைக் காப்பாற்றுங்கள். நீ யார் என்று கேட்டால் நான் இந்தியன் என்று சொல்லுங்கள். ஜாதியை அடியுடன் மறந்து தேசத்தை நினையுங்கள். வைதீகப் பிசாசை சுதந்திர வாள் கொண்டு வெட்டி வீசி எறியுங்கள் என்று தேவி பாரதி ஆபத்தில் சிக்கி அலறி அழுது கொண்டு உங்களை ஆத்திரத்துடன் அழைக்கிறாள். உடனே ஓடி வந்து அம்மையைக் காப்பாற்றுங்கள்.

தனது ஆயுட்காலம் முற்றிலும் வைத்திய ஆராய்ச்சியிலேயே ...ழைத்துக்கொண்டு வருபவரும் தமிழ் சித்த வைத்திய கான்ப ரன்ஸுகளில் தனது மேலான மருந்துகளுக்காகத் தங்க மெடலும், வைத்தியபதிப் பட்டமும் பெற்றவரும் அநேக பிரபுக்களிடத்தில் பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றவரும் உத்தமபாளையம் தர்ம சித்த வைத்தியசாலை ஸ்தாபகருமான அர்ஜுனன் செட்டியார் அவர்களால் சித்தர் முறைப்படி தயாரிக்கப் பெற்ற

## தங்க ரச பஸ்பம்.

காலனைப் போன்று வந்த எந்த வியாதியையும் இந்த பஸ்பம் காணாது ஓட்டிக் குணப்படுத்தக் கூடிய அவ்வளவு ...பார சக்தி வாய்ந்தது. பிற வைத்தியங்களினால் தீராத ...வைகள் என்று கை விடப்பட்ட ரோகஸ்தர் உடனே இதை உட்கொண்டால் 15 நாட்களில் குணம் தெரியும்.

...குஷ்டமோ, திமிரோ, பக்கவாதமோ. மேக ரோகங்களோ, ...ரோகமோ, துன்மார்க்க வியாதிகளோ எதுவானாலும் ... நம்பிக்கையுடன் வாங்கி உபயோகித்தால் வியாதிகள் ...கும்.

40 நாட்களின் மருந்து விலை ரூ 10—0—0.

ஷை மருந்துடன் சாப்பிட கடுக்காய் அல்லது இஞ்சிலேகிய அனுப்பானம் விலை ... ... ரூ 2—0—0.

## மதனசஞ்சீவி லேகியம். தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இழந்துபோன ஆண்மையை உண்டாக்கும் உயர்ந்த ஔஷதம். இரத்தப் பெருக்கையும் வீர்ய விருத்தியையும் உண்டாக்கி எத்தனையோ நம்பிக்கை யற்றவர்களை தேவாமிருதத்தைப் போன்று காப்பாற்றி யிருக்கிறது.

40 நாள் மருந்து விலை ரூ 5—0—0.

## நீர்வேட்டித் தைலம்.

நீர்வெட்டி விதையாலும், மற்றும் பல மூலிகைகளையும் சேர்த்து தயார் செய்தது. சகல மேக ரோகங்களையும் சொஸ்தப் படுத்தக் கூடியது.

பாட்டில் 1-க்கு (3 மாத தலை முழுக்குக்கு) ரூ 5—0—0.

இன்னும் இங்கு அநேக அரிய மருந்துகளும் கிடைக்கும். ஏழைகளுக்கு இனமாக வைத்தியம் செய்யப்படும்.

வைத்தியபதி அர்ஜுனன் செட்டியார்.

...த்த வைத்தியசாலை, உத்தமபாளையம், S. இந்தியா.

விலை சரசம்! மதிப்பு அதிகம்!!

சிறந்த ரெங்கூன் கமலங்கள். உயர்ந்த ஜெர்மன் புது வயிரங்கள்.

# நேர்த்தியான செயற்கைப் புஷ்பராகங்கள்.

நிறம், ஜ்வலிப்பு, கெட்டி உழைப்பு, பார்வை, மேன்மை ஆகிய எல்லாவற்றிலும் மிக மேம்பாடமைந்தது. ஏராளமாய் விற்பனையாவது. கண்ணாடிக் கற்களை வாங்கி ஏமாறுதீர்கள்.

எங்களிடம் இன்னும் பட்டை சிகப்பு, குச்சை சிகப் இமிடேஷன் புஸ்பராகம், நீலம், தங்க வர்ணத் திணுசுகளும் எப்போதும் கிடைக்கும். இன்றே ஆர்டர் கொடுங்கள், உங்கள் நம்பிக்கைக்கு அமைந்தவை.

விலாசம்:— ரெ. சொ. அருணாசலம் செட்டி
புது வயிர வியாபாரம், பெரியகடை
திருச்சினாப்பள்ளி.

# "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள், உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தைந்தாவதாண்டு நடக்கிறது.

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை.
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.